விலை: 30 பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 284 ஆவணி 21ஆம் நாள் வியாழக்கிழமை 06 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## அத்துமீறுகிறது தொல்லியல் திணைக்களம் இதனால் வடக்கில் ஆதரவை இழப்பீர்கள்

அரசுக்கு கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, செப். 6
தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு இடங்களையும், அடையாளங்களையும் பௌத்த பிக்குகளை ஏவிவிட்டு திட்டமிட்ட அடிப்படையில் அழிக்கும் செயலில் தொல்பொருள் திணைக்களம் >> 25

வெடுக்குநாறி மலையில் உள்ள

## ஆதி சிவனை நெருங்கினால் சட்டம் பக்தர்களின் மீது பாயும்

பொலிஸார் எச்சரிக்கை; மீறி பொங்கல் நடக்கும் என்கிறது நிர்வாகம்

வவுனியா, செப். 6
வவுனியா, வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதி சிவன் ஆலயத்தில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் இருந்தே வழிபடவேண்டும், அதை மீறினால் சட்டம் பக்தர்கள் மீது பாயும் >> 25



மகிந்த அணியின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் பங்கேற்றோர்.

## 15 பல்கலைகளின் மாபெரும் தமிழ் விழா

யாழ்ப்பாணம், செப். 6
இலங்கையிலுள்ள 15 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் ஒன்றிணைந்து நடத்தும் மாபெரும் தமிழ் விழா எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக >> 24

## ஈழ ஏதிலி சிட்னி விபத்தில் நேற்றுச் சாவு!

மெல்பேர்ன், செப். 6
ஆஸ்திரேலியாவின் சிட்னி, பெண்டிகில்கில்பா வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற வீதிவிபத்தில் ஈழ ஏதிலி ஒருவர் உயிரிழந்துள் >> 24

மைத்திரி - ரணில் ஆட்சியை எதிர்த்து

# ஆயிரக்கணக்கில் நேற்று திரண்டது மக்கள் கூட்டம்!

கொழும்பில் இரவு 10 மணி வரை சத்தியாக்கிரகம்

கொழும்பு, செப்ரெம்பர் 6
அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மகிந்த அணியினால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட மாபெரும் பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர். பல முனைகளிலிருந்து புறப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தை நோக்கி அணிதிரண்டு வந்தனர். அவர்கள், மகிந்த தலைமையிலான அரசு அமைய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.
கொழும்பில் நான்கு முனைகளில் ஒன்றுகூடிய மக்கள் >> 25



## அரசைக் கவிழ்க்க ஒன்று திரளுங்கள் பேரணியில் மகிந்த நேற்று அழைப்பு

கொழும்பு, செப். 6
நாட்டை பிளவுபடுத்தும் அரசைக் கவிழ்த்து வீட்டுக்கு அனுப்ப அனைவரும் ஓரணியில் திரளவேண்டும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, மக்கள் திரள் மத் >> 24

## நகையறுத்த சிப்பாய் கைது

யாழ்ப்பாணம்,செப் 6
வவுனியா நெடுங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் சென்று நகையை அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் 28 வயதுடைய ராணுவச் சிப்பாய் வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸாரால் நேற்றையதினம் கைது செய்யப்பட்டார். >> 24

## சபைக்கு வந்தது 20ஆவது திருத்தம்

கொழும்பு, செப். 6
நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிக்கும், 20ஆவது திருத்தச் சட்டம் மக்கள் விடுதலை முன்னணியினால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டது.
மக்கள் விடுதலை முன்னணியினால் தனி >> 24

## 100 பேர் நேற்று மருத்துவமனையில்

>> 25

நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான வழக்கில்

## விக்னேஸ்வரனுக்கு எதிரான விசாரணையை தடுக்க மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 6
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக மாகாண சபை உறுப்பினர் பா.டெனீஸ்வரன் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிப்பதற்கு >> 24

## வட மாகாண தாதியர் இன்று சுகவீனவிடுப்பில்

யாழ்ப்பாணம், செப். 6
வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் பணியாற்றும் தாதியர்கள் இன்று சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அரச தாதியர் உத்தி >> 24



## ஓ.எம்.பி. இடைக்கால அறிக்கை மைத்திரியிடம்

கொழும்பு, செப். 6
காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகத்தின் இடைக்கால அறிக்கை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நாடாளுமன்றத்தில் வைத்து நேற்றுக் கையளிக்கப்பட்டது. >> 25

## காதலியை சந்திக்க வந்த இளைஞன் நேற்று கைது!

ஆவா குழு உறுப்பினர் என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், செப். 6
ஆவாக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் என்ற சந்தேகத்தில் குணசிங்கராயா நிலோயன் நேற்று அதிகாலை 3 மணியளவில் >> 24

## அரச சொத்துக்களை சூறையாடினால் சாவு

புதிய சட்டம் இயற்றுங்கள் என்கிறார் மைத்திரி

கொழும்பு, செப். 6
அரச சொத்துகள், நிதியைத் தவறாகப் பயன்படுத்துவோர் மற்றும் சூறையாடுவோருக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்படவேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர், சபாநாயகர், கட்சித் தலைவர்கள் ஆகியோர் இணைந்து நிறைவேற்றித் தரவேண்டும்.
இவ்வாறு கோரிக்கை விடுத்தார் அரச தலைவர் மைத்திரி >> 23



## குடும்பத் தலைவர் விபத்தில் உயிரிழப்பு

பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியது

வவுனியா. செப். 5
வவுனியா கந்தசாமி கோயில் வீதியில் நேற்றுக் காலை 7 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
வவுனியா சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் வசிக்கும் பேரம்பலம் >> 23

## வெடிவிபத்தில் காயமடைந்த மற்றைய இளைஞனும் சாவு

அவரது மனைவி தவறான முடிவெடுத்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்ப்பு



முல்லைத்தீவு, செப். 6
முல்லைத்தீவு, மாங்குளம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது மிதிவெடி வெடித்து காயமடைந்து >> 23

மகிந்தவின் பேரணி அமெ. தூதரகம்

## எச்சரிக்கை

கொழும்பு, செப். 6
மகிந்த அணி கொழும்பில் நேற்று நடத்திய பேரணி தொடர்பில், அமெரிக்கத் தூதரகம் நேற்றுக் காலை எச்சரிக்கை விடுத்திருந்தது.
கொழும்பிலுள்ள அமெரிக்கக் குடிமக்களை பாதுகாப்பாகவும், அவதானமாகவும் இருக்குமாறும், மக்கள் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தூதரகம் தனது அறிவித்தலில் கேட்டுக் கொண்டுள்ளது. (5)

## வன்முறை வெடித்தால் சுடுவதற்கு அனுமதி

கொழும்பு, செப். 6
கொழும்பில் மகிந்த அணி நேற்று முன்னெடுத்த போராட்டத்தின்போது வன்முறைகளில் யாராவது ஈடுபட்டால், அவர்களின் காலுக்கு கீழே சுடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர மேற்படி யோசனையை முன்வைத்துள்ளார்.
கொழும்பில் இடம்பெறும் பேரணி கட்டுக்கடங்காததாக மாறினால் பொதுமக்களின் சொத்துக்கும், உயிர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டால் பொலிஸார் இறப்பர் குண்டுகளை பயன்படுத்தி முழங்காலின் கீழ் சுடுவதற்கு தயங்கக் கூடாது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (5)

## போராட்டத்தை கணக்கிலெடுக்காது பத்திரிகை வாசித்த மைத்திரிபால

கொழும்பு, செப். 6
அரசுக்கு எதிராக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் முன்னெடுக்கப்படும் போராட்டத்தால் கொழும்பு நகரம் மூழ்கியிருக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைதியாக பத்திரிக்கைகளை வாசித்து கொண்டிருக்கும் ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.
நாடாளுமன்றுக்கு நேற்றுச் சென்றிருந்த அரச தலைவர் நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் பத்திரிகைகளை அமைதியாகப் பார்த்து கொண்டிருப்பதை அங்கிருந்த சிலர் ஒளிப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்துள்ளனர். (5)

## போராட்டத்தில் பங்கெடுத்த வி.ஐ.பிகளுக்கு ஆடம்பர விடுதியில் அறைகள் முன்பதிவு

கொழும்பு, செப். 6
'மக்கள் சக்தி கொழும்பு' என்ற தலைப்பில் கூட்டு எதிர்க்கட்சி ஒழுங்கு செய்த ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொள்ளும், கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் தங்குவதற்கு கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல்களில் அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு காலிமுகத்திடலுக்கு எதிரில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் ஆடம்பர அறை முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.
ஹில்டன், சங்கரிலா ஹோட்டல்களில், கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் நண்பர்களான வர்த்தகர்களுக்காக முன்திவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (5)

## 'சிறப்பான விருந்து'

கொழும்பு, செப். 6
ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் பணம், சாப்பாட்டுப் பொதி மற்றும் ஒரு போத்தல் மதுபானம் வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.
மகிந்த அணியினால் கொழும்பில் நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட பேரணியில் கலந்து கொள்பவர்கள் சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டே அழைத்து வரப்பட்டுள்ளனர்.
இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்கள் கொழும்பு நகர வீதிகளில் நிறை வெறியில் வீழ்ந்து கிடக்கும் ஒளிப்படங்கள் சமூக வலைத் தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகின்றது. (5)










## பேரணியில் பங்கேற்றோர் மீது நேற்றுத் தாக்குதல்

கொழும்பு, செப். 6
கொழும்பு கடவத்தைழுபு பகுதியில் மகிந்த அணியின் ஆதரவாளர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்ற பேரணியில் பங்கேற்பதற்காக வந்து கொண்டிருந்தவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதேவேளை பேரணிக்கு மக்களை ஏற்றி வந்த பேருந்துகள் மீதும் பல இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)



மகிந்த அணியின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் பல ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். லேக்கவுஸ் சுற்று வட்டத்தில் அவர்கள் அனைவரும் ஒன்றுகூடினர். இந்தப்போராட்டத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலரும், அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படும் கோத்தபாய ராஜபக்சவும் பங்கேற்றிருந்தார்.





## யாழ்.நகைக்கடை உரிமையாளரிடம் வாள்முனையில் கொள்ளை முயற்சி

யாழ்ப்பாணம் ,செப் 6
யாழ்ப்பாண நகரில் இயங்கும் பிரபல நகைக் கடை உரிமையாளர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கடையைப் பூட்டிவிட்டு வீடு செல்லும்போது வாள் முனையில் அச்சுறுத்தி கொள்ளையிட முயன்ற நிலையில் நகை கடை உரிமையாளரின் சாதுரியத்தினால் தப்பித்தார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நகைக் கடை நடாத்தும் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் கடையை மூடிவிட்டு ஈருருளியில் கொக்குவிலில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுள்ளார். சென்றுகொண்டிருந்தவரை இரு உந்துருளிகளில் பின் தொடர்ந்தவர்கள் வாள் முனையில் மடக்கியுள்ளனர்.

இதனால் நிலைகுலைந்த நகைக் கடை உரிமையாளரை வாள் முனையில் அச்சுறுத்தியபடி பணத்தினை எடுக்குமாறு கோரியுள்ளனர். இதன்போது பணத்தை எடுப்பதுபோல் பாசாங்கு செய்த கடை உரிமையாளர் ஈருருளியை தூக்கி வாளுடன் நின்றவர்மீது எறிந்துவிட்டு தப்பியோடியுள்ளார்.

இவ்வாறு தப்பியோடியவர் அருகில் இருந்த மரக்கடை ஒன்றிற்குள் தஞ்சமடைந்தார். அங்கே அதிக மக்கள் நடமாட்டம் இருந்தமையினை அவதானித்த வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

அவர்கள் தப்பிச் சென்றதனால் நகை கடை உரிமையாளரின் பணமும் கழுத்தில் இருந்த 5 பவுண் தங்கச் சங்கிலி, மோதிரம் என்பன பாதுகாக்கப்பட்டது .

காங்கேசன்துறை பிரதான வீதியில், தட்டாதெருச் சந்திப் பகுதியில் பகல்வேளையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது .குறித்த நேரத்தில் நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் செல்லும் பக்கத்தர்கள் உட்பட ஆயிரக் கணக்கான பொதுமக்கள் அந்த வழியால் போக்குவரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (105)

## ஒக்ரோபர் மாதம் தொடக்கம் தபால் உறையில் மாற்றம்

கொழும்பு ,செப் 6
புதிய தரத்திலான தபால் உறைகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் அறிமுகப்படுத்தவுள்ளதாக தபால்த் திணைக்களம் அறிவித்துள்ளது .

தபால் பரிமாற்றங்களின் போது பல் வேறு வகையான தபால் உறைகள் பயன்படுத்தப்படுவதனால் ஏற்படுகின்ற சிக்கலை கருத்திற் கொண்டு. இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தரத்துக்கேற்ப புதிய தரத்திலான தபால் உறைகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தபால் உறைகளை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதித் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## பிணைமுறி மோசடி தொடர்பில் சிறப்பு மேல் நீதிமன்றில் வழக்குதொடர முடியுமா

### அநுரகுமார திஸாநாயக்க கேள்வி

இலஞ்ச, ஊழல் விசாரணைக்குழுவில் விசாரணை நடக்கிறது. அறிக்கையொன்று சட்டமா அதிபரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, இனியும் தாமதிக்காது மேல்நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்குரிய நடவடிக்கையை சட்டமா அதிபர் எடுக்கவேண்டும். இதற்குரிய ஆலோசனையை அரசு சட்டமா அதிபருக்கு வழங்குமா என்று அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.



பிணைமுறி விவகாரம் தொடர்பான விசாரணைகள் முழுமையாக முடிவடைந்தப்பின்னரே, அது தொடர்பில் சிறப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் தொடுப்பது குறித்து முடிவெடுக்க முடியும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தலைமை அமைச்சரிடம் நேரடிபதிலை பெறுவதற்கான கேள்வி, பதில் நேரத்தில் ஜே.வி.பியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே தலைமை அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

" பிணைமுறிமோசடி தொடர்பில் மத்தியவங்கியும், அரசுமே பொறுப்புக்கூறவேண்டும். அதிக இலாபத்தை ஈட்டுவதற்காக உள்ளகத்தகவல்களை பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டு மாத்திரமே பேர்ப்பச்சுவல் ட்டெசரிஸ் நிறுவனம்மீது சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் மத்தியவங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு கூடுதல் பொறுப்பு இருக்கின்றது.

பேர்ப்பச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தை முன்னிலைப்படுத்திவிட்டு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் பின்வாங்கும்நிலை உருவாகியுள்ளது. சிலர் சிங்கபூர் சென்றுள்ளனர். சட்டமா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்து சில காலம் சென்றுள்ளது. கோப் குழுவின் அறிக்கையும் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலஞ்ச, ஊழல் விசாரணைக்குழுவில் விசாரணை நடக்கிறது. அறிக்கையொன்று சட்டமா அதிபரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, இனியும் தாமதிக்காது மேல்நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்குரிய நடவடிக்கையை சட்டமா அதிபர் எடுக்கவேண்டும். இதற்குரிய ஆலோசனையை அரசு சட்டமா அதிபருக்கு வழங்குமா" என்பதே அநுரகுமாரவின் கேள்வியாகும்.

இதற்கு பதிலளித்த தலைமை அமைச்சர்

விசாரணையை விரைவில் முடிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடமும், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடமும் நாம் கோரியுள்ளோம். விசாரணை முடிவடைந்ததும் இவ்விரு தரப்புகளாலும் அறிக்கையை நேரடியாக உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பமுடியும்.

சட்டமா அதிபர் திணைக்களமும், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் இவ்விவகாரம் தொடர்பில் இன்னும் விசாரணைகளை நடத்திவருகின்றன. அவைமுடிவடைந்த பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கை இடம்பெறும்.

பேர்ப்பச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனத்தின் வங்கிக் கணக்கிலிருந்து 11 பில்லியன் ரூபா இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை குறுகிய காலத்துக்குள் அறவிட்டுக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சட்டமா அதிபரிடம் கோரியுள்ளேன்.

திறைசேரி முறி விநியோக சர்ச்சை குறித்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளரின் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் பிரதம நீதியரசருக்குத் தீர்மானிக்க முடியும்.

சட்டத்துறையில் நாம் அழுத்தம் கொடுப்பதில்லை.

அர்ஜீனா மகேந்திரன் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர் வெளிநாட்டில் இருக்கின்றாராயின் அவரை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தால் அது குறித்து தெரியப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.



## போதைஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி

முல்லைத்தீவு .செப் .6
போதைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி ஒன்று நெடுங்கேணியில் நேற்று நடைபெற்றுள்ளது.

நேற்றையதினம் காலை நெடுங்கேணி பொலிஸ்நிலையத்தின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரின் ஏற்பாட்டில், நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவர்களின் பங்களிப்புடன், "போதைப்பொருள் மற்றும் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு" பேரணி இடம்பெற்றது. விழிப்புணர்வுப் பேரணியானது பாடசாலையின் பிரதான நுழைவாயிலில் இருந்து ஆரம்பமாகி நெடுங்கேணி நாகதம்பிரான் ஆலயத்தை அடைந்து மீண்டும் பாடசாலையினை வந்தடைந்தது.

பேரணியில் ஈடுபட்டமாணவர்கள் புகைத்தல், மற்றும் போதைப் பொருளுக்கு எதிரான வாசகங்கள் பொறிக்கபட்ட பதாகைகளை ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (110)

## "உயர் நிதி முகாமைத்துவ செயல் திறன் விருது" வடக்கு மாகாணத்துக்கு பதினைந்து விருதுகள்

யாழ்ப்பாணம் ,செப் 6
"உயர் நிதி முகாமைத்துவ செயல் திறன் விருது" வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாணத்துக்கு பதின் மூன்று தங்கம், இரன்று வெள்ளி விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.



அரச நிறுவனங்கள் இடையே கடந்த 2016 ஆம் நிதி ஆண்டில் நாடளாவிய ரீதியில் வினைத்திறனாக செயலாற்றியமைக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான நிகழ்வு நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி மதிப்பளித்தார் .கடந்த 2015 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் 'உயர் நிதி முகாமைத்துவ செயல் திறன் விருது' அறிமுகம் செய்யப்பட்டது.கடந்த 2016 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் சுமார் 837 அரச நிறுவனங்களிடையே நிதி முகாமைத்துவ மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டன.நாடாளுமன்ற பொதுக் கணக்குகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் 40 அரச நிறுவனங்கள் தங்கப் பதக்கத்திற்கு தெரிவு செய்யப்பட்டன.

இவற்றில்,வடக்கு மாகாணத்தில் வினைத்திறனாக பணியாற்றும் பதின் மூன்று அரச நிறுவனங்களுக்கு நேற்று தங்கப் பதக்கங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கொத்தலாவளை வெள்ளவாய்க்கால் சீரமைப்புக்கு ரூபா 2 கோடி ஒதுக்கீடு

## தவிசாளர் ஜெபநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட கொத்தலாவளை வெள்ள வாய்க்காலைச் சீரமைப்பதற்கு இரண்டுகோடிரூபாய்நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களம் அதற்கான நிதியை ஒதுக்கீடுசெய்துள்ளது என்றுவலி. தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் ஜெபநேசன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குபிரதேசத்தில் சுதுமலைஅம்மன்ஆலயத்திலிருந்துமானிப்பாயிலுள்ளகுளம் வரை குடிமனை ஊடாகச்செல்லும்சுமார் 11 அரைக் கிலோமீற்றர் நீளமான கொத்தலாவளை வெள்ள வாய்க்கால் பூகோள ரீதியின்படிஅமைக்கப்படாமையினால் மழைக்காலங்களில் வெள்ளம்வழிந்தோடமுடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் வருடா வருடம் நெற்பயிர்கள் அழிவடைவதுடன்சுதுமலைக் குளத்தைச் சுற்றியுள்ள பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. தற்போது அந்தவாய்க்காலில் மரஞ்செடிகள் வளர்ந்திருப்பதுடன் குப்பை கூழங்களும் குவிந்திருப்பதால் மழை வெள்ளம்வழிந்தோடமுடியாத நிலைஏற்படக்கூடுமென்றுஅந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். அத்துடன் மழை வருவதற்கு முன்பே வாய்க்காலைத் துப்புரவு செய்யவேண்டும் என்றும் மக்கள் சம்மந்தப்பட்டவர்களிடம்கோரிக்கைவிடுத்தனர்.

மக்களுடைய கோரிக்கை தொடர்பில் சபையின் தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதேஅவர்மேற்கண்டவாறு கூறினார். குறித்த வாய்க்கால் சீரமைப்புக்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தால் இரண்டு கோடிரூபாய்நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. அதனுடைய அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பொதுமக்கள்சிலரும்அந்தவாய்க்காலில் குப்பைகளை வீசி வருவதால் வாய்க்கால் சீரின்றிக் காணப்படுகிறது.அங்குமுளைத்துள்ளமரங்களை. வெட்டத் துப்புரவு செய்யும் வேலைத்திட்டங்களையும் நீர்ப்பாசனத்திணைக்களம்மேற்கொள்ளவுள்ளது என்றும் தவிசாளர்மேலும்தெரிவித்தார்.(21,115)

## மானிய உரப்பதிவுகளை மேற்கொள்ளலாம்

தென்மராட்சி, செப். 6

சாவகச்சேரிகல்வயல்கமக்கார அமைப்பிற்குட்பட்ட நெல்பயிரிடும்விவசாயிகளுக்கான மானிய உரப் பதிவுகள் நாளை, நாளைமறுதினம்கல்வயல்பொதுநோக்குமண்டபத்தில் இடம்பெறும்.

இதன்போதுஅங்கத்துவம்புதிப்பித்தல்இடம்பெறும். எனவே அமைப்பின் அங்கத்தவர்கள் இவ்வருடத்திற்குரிய செலுத்தப்பட்ட ஏக்கர்வரிப்பற்றுச்சீட்டு, கடந்தவருட அங்கத்துவப்பற்றுச்சீட்டு, தேசியஅடையாளஅட்டை, ஆகியவற்றுடன் வருமாறு அமைப்பினர் அறிவித்துள்ளனர். (9-159)

## பாகுபாடின்றி அபிவிருத்தியை மேற்கொள்க

### தவிசாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 6

மக்களின் மனதில் நிலைத்திருக்கும் குறைபாடுகளைத் தீர்க்கும் வகையில் எதிர்வரும் காலங்களில்அபிவிருத்திவேலைத்திட்டங்களைப் பாகுபாடின்றி மேற்கொள்ளுமாறு வலி.தென் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் குமணன் தவிசாளரைக் கோரியுள்ளார்.

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என நான்கு உப அலுவலகங்கள் உள்ளன.

இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் பண்டத்தரிப்புபட்டினமும்கிராமமும்பின்தங்கிய நிலையிலிருக்கின்றது. இது குறித்து வரியிறுப்பாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை பண்டத்தரிப்பு பகுதியில் பெரும்பாலான வீதிகள் மின்குமிழ்கள் பொருத்தப்படாமலும்பொருத்தப்பட்டமின்குமிழ்கள் எரியாமலும் இருக்கின்றன. வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தற்பொழுது பல துறைகளிலிருந்தும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக பிரதேச சபைக்கு நிதி கிடைத்து வருகின்றமையால் எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைப் பாகுபாடின்றி மேற்கொள்ளுமாறு தவிசாளரைக் கோருகின்றேன் என்றார்.

இதுதொடர்பில் வலி.தென்மேற்குப்பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசனிடம் தொடர்பு கொண்டுகேட்டபோது.

பிரதேச சபையால் எந்தவிதமான பாரபட்சங்களும் காட்டப்படுவதில்லை.

பண்டத்தரிப்புப் பட்டினத்தின் அபிவிருத்திக்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அங்கு ஒரு சிறுவர் பூங்கா அமைப்பதற்கு திட்மிடப்பட்டுள்ளது.

அதற்காக தற்போது 6 பரப்புக் காணி கொள்வனவுசெய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் தொடக்கம் உயர்தர மின்குமிழ்கள் பொருத்தும் வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. வேறு அபிவிருத்தித்திட்டங்களும் இடம்பெறவுள்ளது. எனவே பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் எந்தவித பாரபட்சமும்இன்றிஅபிவிருத்திகள்செய்யப்படும் - என்றார். (115-21)



## தளபாடங்கள் அன்பளிப்பு

வடமராட்சி, செப் 6

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் சுகிர்தனால் வல்லிபுர குறிச்சி சனசமூக நிலையம், பொலிகண்டி மக்கள் படிப்பகத்து ஆகியவற்றுக்கு 50 ஆயிரம்பெறுமதியான தளபாடங்களும், மருதங்கேணி கிராமஅபிவிருத்தி சங்கத்துக்கு 50 ஆயிரம்பெறுமதியான மின்குமிழ்களும்வழங்கப்பட்டன. மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து இந்தத் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வுபருத்தித்துறைபிரதேசசபை மண்டபத்தில் நேற்றுக்காலை10 மணியளவில் இடம்பெற்றது. (26-173)

## வயாவிளான் மத்திய கல்லூரி வளாகத்தில் இரு பாடசாலைகள்

யாழ்ப்பாணம், செப் 6

கல்வியமைச்சின் வேண்டுகோளுக்கமைவாக வயாவிளான் மத்திய கல்லூரி வளாகத்தில் . இரு பாடசாலைகள் தமது கற்றல்சார் செயற்பாடுகளைஆரம்பித்துள்ளன பாடசாலைகள் வயாவிளான் சிறி வேலுப்பிளிள்ளை வித்தியாலயம், வயாவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியஇரண்டும்கடந்த3ஆம்திகதி தொடக்கம் வயாவிளான் மத்திய கல்லூரியில்கல்விச்செயற்பாட்டை ஆரம்பித்துள்ளன.

கடந்த சுமார்முப்பதுவருடங்களாக இடம்பெயர்ந்த நிலையில் கல்விப் பணியினை முன்னெடுத்து வந்த வயாவிளான் சிறி வேலுப்பிள்ளை வித்தியால்யம் 370 மாணவர்கள், 16ஆசிரியர்களுடன் இயங்கி வருகின்றது.

அத்துடன் வயாவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையானதுசிறிவேலுப்பிள்ளை வித்தியாலயத்தில்இயங்கிவந்தது. இப்பாடசாலையில்இந்தவருடம்14 மாணவர்கள் தரம் 1இல் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த இரு பாடசாலைகளும் மீளக் குடியமரும் வரை வயாவிளான் மத்தியகல்லூரியில் இயங்கும் எனத்தெரிவிக்கப்பட்டது.

## நல்லூரில் இன்று

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று இசைக்கச்சேரி, நடனஅர்ப்பணம்ஆகியநிகழ்வுகள்இடம்பெறவுள்ளன. இதில் இசைக்கச்சேரியில் பாட்டுநவரத்தினம் பரந்தாமன், வயலின் சு.கோபிதாஸ், மிருதங்கம்.லோகேந்திரன், கெஞ்சிராஎஸ்.சன்முகப்பிரியன், கடம்அ.செல்வரட்ணம்ஆகியோரும்நிகழ்த்தவுள்ளனர். யாழ்ப்பாணம்இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின் நடன அர்ப்பணத்தில் நட்டுவாங்கம் பிரியதர்சன், வாகீசன் பாட்டுசி. கனகாம்பரி, க. தட்சாயினி, வயலின்உ.குமுதினி, மிருதங்கம்க. நந்தகுமார், ஓர்கன்ம. மனுசங்கர் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். இலங்கைஇளங்கலைஞர்மன்றத்தின் ஏற்பாட்டில்இடம்பெறும் இந்தநிகழ்வுமாலை6.45மணிதொடக்கம்8.15மணி வரை இடம்பெறும்.

★★★

நல்லூர்மனோன்மணிஅம்மன்கோவிலில்"உதித்தனன் உலகம்உய்ய"என்றதலைப்பில்சைவசின்மயர்வே.சிவராசா சொற்பொழிவாற்றுவார். உலக சைவத்திருச்சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வு மாலை 6.45 மணிதொடக்கம் 7.45 மணி வரை இடம்பெறும்.

★★★

நல்லைஆதினகுருமூர்த்தஆலயமண்டபத்தில்தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று "தானவன் மீனவனானான்" என்ற தலைப்பில் பேருரை இடம்பெறும். கலாபூசணம் பிரம்மசிறி சிவ. வை. நித்தியானந்தசர்மாவுடன் அணிசெய்கலைஞர்கள்இதைவழங்குவர். நல்லூர்சைவமகா சபை நடத்திவரும் இந்த நிகழ்வு மாலை 6.30மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெறும்.

★★★

சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3.00மணிதொடக்கம்மாலை5.00மணிவரை செல்வி. தனுஜா ஜெயராசா வின் பஜனை நிகழ்வு இடம்பெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களஉதவிப்பணிப்பாளர் திருமதிஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்ப்பாணம்மாநகரசபைஆணையாளர்த.ஜெயசீலன்முதன்மை அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். உடுவில் பிரதேச அறநெறிப்பாடசாலைமாணவர்களின்கலைநிகழ்வுகளும் கோப்பாய்இஆசிரியர்பயிற்சிக்கலாசாலைவிரிவுரையாளர் ச.லலிசனின்"ஆறுமுகமானபொருள்"எனும்தலைப்பிலான கந்தப்புராணச்சிறப்புச் சொற்பொழிவும், பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா அவர்கள் குழுவினரின் இசை அர்ச்சனை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள்ளது. பங்குபற்றும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இதனை நடத்துகிறது.

★★★

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்களால் " புதுவாழ்வுறவே புவிமீதருள்வாய் " என்ற தலைப்பில் மாலை 7.30மணி தொடக்கம் 8.00 மணி வரை நல்லூரில்அமைந்துள்ளசின்மய ஞானவேல்ஆச்சிரமத்தில் அருளுரை இடம்பெறும்.

## கண்காட்சியும் விற்பனையும்

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் நல்லூர்த் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய முன்றிலில் கண்காட்சியும் விற்பனையும் நாளை தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இடம்பெறும்.

## இந்துமகளிர்கல்லூரியின்பவளவிழா

யாழ்ப்பாணம், செப் 6

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பவள விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம் திகதி அதிபர் மிமலாதேவி விமலநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில்வடமாகாணகல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி. சத்தியசலீன் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க உள்ளார்

கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு கலைவிழா இடம்பெறும் என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

## பெருந்திருவிழா

கோண்டாவில்கிழக்குஅருள்மிகுசிறிஅற்புதநர்த்தனவிநாயகர்ஆலய வருடாந்தப்பெருந்திருவிழா நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன்ஆரம்பமானது. தொடர்ந்து 9நாள்கள்திருவிழாக்கள் இடம்பெறும். எதிர்வரும்12ஆம்திகதிபுதன்கிழமைதேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தமும் இடம்பெறும். (147)

## திருமுறையரங்கு

எழுவைதீவு முத்தன்காடு ஈழத்து திருச்செந்தூர் முருகமூர்த்தி ஆலயத் தேர்த்திருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில்நடைபெறும். சுவாமிதேரில்ஆரோகணித்தவேளை ஆலய முதன்மை மண்டபத்தில் கலாபூசம் க.லோகேஸ்வரனின் திருமுறையரங்கு பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (50)

## தடை செய்யப்பட்ட முறையில் முல்லைத்தீவில் கடற்றொழில்

### பிரதேச மீனவர்கள் கடும் விசனம்

முல்லைத்தீவு, செப். 6

முல்லைத்தீவில்தடைசெய்யப்பட்ட தொழிலை யாழ்ப்பாணமீனவர்கள்அனுமதியுடன்செய்துவருகின்றனர் என்று மாத்தளன் மீனவ அமைப்புகவலைதெரிவிக்கின்றது.

முல்லைத்தீவு மாத்தளன் கடற்பகுதியில் கடந்த திங்கட்கிழமைதடைசெய்யப்பட்ட சுருக்குவலைகளைப்பயன்படுத்தி தொழில் செய்தார் என்று நாகர்கோவில் கடற்தொழிலாளர் ஒருவரைப் படகுடன் மாத்தளன் கடற்றொழில் அமைப்பினர் பிடித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்குமாத்தளன் மீனவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

கடற்றொழில் பரிசோதகர் மாத்தளன் பகுதிக்குச் சென்று சுருக்கு வலையைப் பயன்படுத்திய குறித்த மீனவரின் அனுமதியைச் சோதனை செய்துள்ளனர்.

அவரிடம் அதற்கான அனுமதி உள்ளது என்றும் அவரைக் கைதுசெய்ய முடியாது என்றும் குறித்த கடற்றொழில் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில்மாத்தளன் பகுதியில் சுருக்கு வலைக்கான அனுமதிபெற்ற பலர் தொழில் செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றனர். இது பாகுபாடு பார்க்கப்பட்ட செயல் என்று புதுமாத்தளன் கடற்றொழில் கிராமிய அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 12 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்றிருந்த கடற்றொழில் அமைச்சர், முல்லைத்தீவு மாவட்டத்தில் சுருக்குவலையைத்தற்காலிகமாகத்தடைசெய்துள்ளதாக அறிவித்துள்ள நிலையில்இவ்வாறானசம்பவங்கள் கடற்றொழிலாளர்களை மேலும் பாதித்துள்ளது என்று புதுமாத்தளன் கடற்றொழில் அமைப்பின் தலைவர் சுரேஸ்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மாவட்ட கடற்றொழில்நீரியல்வளத் திணைக்கள மூத்த அதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டபோது,

"சுருக்குவலையைப்பயன்படுத்தியமீனவரின்அனுமதியைச் சோதனை செய்துள்ளனர்.

அவரிடம் அதற்கான அனுமதி உள்ளது. அவரைக் கைதுசெய்ய முடியாது. அவருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியின்படி அவர் தொழிலில் ஈடுபடும் போது எங்களால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாதநிலை உள்ளது" - என்றார். (4,8,ரி3)

# பயன்படுத்தப்படாது மூடியுள்ள ஆழ்துளைக்கிணறுகளை சீரமைத்து பயன்பாட்டுக்கு விடவும்

## விவசாய சம்மேளனம் கோருகிறது

யாழ்ப்பாணம், செப். 6

விவசாயிகளின் நலன்கருதி சுதுமலை வடக்குப் பகுதியில் வயற் காணிகளில் பயன்படுத்த முடியாதவாறு மூடப்பட்டிருக்கும் ஆழ்துளைக்கிணறுகளைப் பிரதேச சபையின் நிதியுதவியுடன் சீரமைத்துத் தருமாறு சுதுமலை வடக்கு – தெற்கு விவசாய சம்மேளனம் வலி.தென் மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களிடம் கோரியுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சண்டிலிப்பாய் கமநல சேவைகள் பிரிவில் சுதுமலை வடக்குப் பகுதியில் குளத்தைச் சுற்றியுள்ள வயற் காணிகளில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவர்களின் நலன்கருதி கோடை காலத்திலும் விவசாயத்தை மேற்கொள்வதற்கு வசதியாகப் பல வருடங்களுக்கு முன் பொதுஅமைப்பால் பல இலட்சம் ரூபா செலவில் எட்டுக் குழாய்க்கிணறு கள் அமைக்கப்பட்டன. இந்தக் கிணறுகள் தற்பொழுது பயன்படுத்த முடியாதவாறு மூடப்பட்டுள்ளமையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோடை காலத்திலும் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபடுவதற்கு வசதியாக மூடப்பட்ட நிலையிலிருக்கும் எட்டுக் கிணறுகளையும் பிரதேச சபையின் நிதியுதவியுடன் சீரமைத்துத் தருமாறு சம்மேளனத் தலைவர் உறுப்பினர்களைக் கோரியுள்ளார்.

சுதுமலை வடக்குப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று கட்சிகளைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களுக்கு சம்மேளனத் தலைவர் இவ்வாறு கோரியுள்ளார். வழங்கப்பட்ட கடிதத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக மேலும் தெரிவித்துள்ளதாவது, மதவடியிலிருந்து வரும்விவசாயவீதியானகன்னிதோட்ட வீதியை விவசாயிகள் பயன்படுத்தக் கூடியவாறு சீரமைத்துத் தரவேண்டும். பிட்டிவைரவர் கோவிலுக்குப் பின்புறமாகவுள்ள வெட்டுக் குளத்தை அகலமாக்கியும் ஆழப்படுத்தியும் தருவதுடன் அதனைச் சுற்றியுள்ள பாதீனியங்களை அழிப்பதற்கும் உதவிசெய்யவும்.

வாய்க்கால் வரம்பில் அமைக்கப்பட்டுள்ள வேலியை விவசாயிகளினதும் பொதுமக்களினதும் நலன்கருதி அகற்றித் தருமாறு சபையைக் கோரியிருந்தும் நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்படி வேலியை அகற்றுவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்கவும் - என்று கோரியுள்ளார். (4,115)

## சமாதான நீதிவான் சங்கம் ஆரம்பம்

வடக்கு மாகாண சமாதான நீதிவான் சங்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் 077 6410869 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இதன் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (4)

## ஆலயத்தில்விக்கிரகம்வைத்தல்

கொடிகாமம், செப். 6

கைதடிக் கிழக்குக் கள்ளிநகர் வீரபத்திரர் கோவில் குடமுழுக்கை முன்னிட்டு இன்று விக்கிரகங்கள் ஆலயத்தில் வைக்கப்படவுள்ளன. கைதடி வடக்கு கயிற்றசிட்டி கோவிலிலிருந்து பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆலயத்தில் வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை குடமுழுக்கு இடம் பெறும். அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் 11 ஆம் திகதி 10 மணி தொடக்கம் மாலை 4 மணிக்கு இடம் பெறும். கிரியைகள் பிரம்மஸ்ரீ முத்துக்குமார கணேச குருக்கள் தலைமையில் நடைபெறும். (159 - 9)

# நாவற்குழி வீடமைப்பு அதிகார சபையின் காணியில் உள்ளோருக்குக் குடிதண்ணீர்

தென்மராட்சி, செப். 6

நாவற்குழி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் குடியேறியுள்ள குடும்பங்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கெனச் சாவகச்சேரிப் பிரதேச சபையினர் பிளாஸ்ரிக் தாங்கி ஒன்றை நேற்று வழங்கினர். அதன் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த காணியில் குடியேறியுள்ள 62 குடும்பங்களையும் வெளியேறக்கோரி சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. தேசிய வீடமைப்பு அதிகார சபை வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது.

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த மாதம் 16ஆம் திகதி பதில் நீதிவான் முன்னிலையில் இவர்களுக்கு எதிரான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. குடியிருப்பாளர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், காணியில் குடியேறியுள்ள குடும்பங்கள் தொடர்பாக அமைச்சரிடம் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளேன். இந்தவிடயம் தொடர்பாகக் காணி அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வந்து குடியிருப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் முடிவு சொல்வதாக அமைச்சின் செயலாளரால் தனக்குத் தெரிவிக்கப்பட்டதெனக் கூறிக் கலந்துரையாடல்கள் நடத்தி முடிவு செய்யும்வரை வழக்குகளைப் பிற்போடுமாறு பதில் நீதிவானிடம் கேட்டிருந்தார். அதன் பிரகாரம் அன்றைய தினம் வழக்குத் தாக்கல் செய்திருந்த 34 குடும்பங்களின் ஆண்களைத் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்திருந்தார்.

பிறிதொரு தினத்தில் ஏனைய 28 குடியிருப்பாளர்களுக்கு எதிரான வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது குடியிருப்பாளர்களைப் பிணையில் விடுவித்திருந்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோர் நாவற்குழியில் குறித்த காணிகளில் வசிக்கும் குறித்த குடும்பங்களை நேற்றுச் சென்று சந்தித்துக் கலந்துரையாடினர்.


அதன்போதே தண்ணீர் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்வதாக அங்குள்ளவர்கள் கூறினர். அதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளின் பிரகாரம் பிரதேச சபைத் தவிசாளர் உடனடியாகப் பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு குடிதண்ணீர்த் தாங்கியை வரவழைத்துக் கிராமத்துக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)



## இராஜகோபுர அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப் 6

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்துக்கான இராஜகோபுர அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 7.45 மணி தொடக்கம் 10.45 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினரி அறிவித்துள்ளனர்.



யாழ்ப்பாணம் மண்கும்பாண் அரச காணி ஒன்றில் நான்கு மோட்டார்க் குண்டுகள் மண்ணுள் புதைந்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் அடையாளங் காணப்பட்டன. அதனைக் கண்ட ஊரவர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவித்தனர். சிறப்பு அதிரடிப்படையின் உதவியுடன் அவற்றை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (826)

# மக்களைப் புரிந்துகொள்ளாதவரை முதலமைச்சராக்கியது பெரும் தவறு

## சாடுகிறார் மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன்

முல்லைத்தீவு,செப்.6

மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட ஒருவரால்தான் முதலமைச்சராக இருக்க முடியும், முதலமைச்சர் தற்போது பிரிந்து செல்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார், அதற்கு என்ன காரணம் என்று அலசி ஆராய்ந்தால் எங்கள் மண்ணில் பிறந்தவர்கள், இந்தத் துன்ப துயரங்களை அனுபவித்தவர்கள் என்றில்லாமல், சாதாரண மக்களின் வாழ்வியலை, மக்களைப் புரிந்துகொள்ளாத ஒருவரை முதலமைச்சராக்கிய பெரும் தவறின் விளைவுதான் இன்றைய இந்த நிலைக்கு காரணம் என வடமாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு உடையார்கட்டுப்பகுதியில் கமநல சேவை நிலையத்தினரால் கமநல வங்கி மற்றும் கமக்கார அமைப்புக்கள் இணைந்து 100 மாணவர்களுக்கு மதிப்பளிக்கும்நிகழ்வும், பாடசாலை உகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.பிரவேசன் தலைமையில் உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டம் இலங்கையில் 12 ஆவது இடத்தில் இருக்கின்றது. ஒட்டுமொத்த கல்வி நிலையில் நோக்கும்போது பின்நோக்கிக் காணப்படுகின்றது.

அரசு தமிழ்மக்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை வழங்குவது போதுமானதாக காணப்படவில்லை. கடந்த ஐந்தாண்டு காலத்தில் மாகாண சபைக்கு அரசு ஒதுக்குகின்ற நிதி குறைந்துகொண்டே செல்கின்றது.


நிதி ஒதுக்கீட்டில்காட்டப்படும் பாரபட்சம் தமிழர்களை இரண்டாம் நிலையில் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதைக்காட்டுகிறது. ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதியுடன் வடக்கு மாகாணசபை காலாவதியாகப்போகின்றது. அதன்பின்னர் வடக்கு மாகாணசபை இந்த மக்களுக்காக என்ன செய்திருக்கின்றது என்று கேட்டால் குறிப்பிடக் கூடியளவுக்கு எதனையும் செய்யவில்லை என்றுதான் குறிப்பிடவேண்டும். அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தால் எங்களை வழிநடத்த வேண்டிய முதலமைச்சர் மாகாணசபையினை சரியாகக் கொண்டு செல்லவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

நான் முதலமைச்சரை பகிரங்கமாக கேட்டிருக்கின்றேன் நீங்கள் எங்கள் மாவட்டத்துக்கு என்ன செய்திருக்கின்றீர்கள், நீங்கள் வடமாகாணத்துக்கு முதலமைச்சர அல்லது யாழ்ப்பாணத்திற்கு மட்டும் முதலமைச்சரா என்று நேரடியாகக் கேட்டுள்ளேன்.

அவரிடம் நான் மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் எங்கள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு சிறப்பாக பாதிக்கப்பட்ட மாவட்டம் என்ற முன்னுரிமை அடிப்படையில் எதனையும் செய்யவில்லை

மக்கள் விகிதாசார அடிப்படையில்தான், வடக்கின் மாவட்டங்களுக்கான அபிவிருத்தி பங்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்கு என்று முன்னுரிமை அடிப்படையில் எதுவும் செய்யவில்லை. மக்கள் எங்களிடம் வீதிகள் திருத்தப்படவில்லை, கட்டடங்கள் கட்டப்படவில்லை,குளங்கள் திருத்தப்படவில்லை என்று கேட்கின்றனர்.

இவற்றை செய்வதற்கு முதலமைச்சரோ அவருக்குக் கீழ்



உள்ள அமைச்சுக்களோ நடவடிக்கை எடுக்கவில்லை, வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவில்லை, அரசியல் ரீதியாக நாங்கள் சண்டையிட்டவராக இருந்தோம், இன்று முதலமைச்சர் பிரிந்து செல்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார் அதற்கு என்ன காரணம் என்று அலசி ஆராய்ந்தால் எங்கள் மண்ணில் பிறந்தவர்கள் இந்த துன்ப துயரங்களை அனுபவித்தவர்கள் என்றில்லாமல் சாதாரணமக்களின்வாழ்வியலைப் புரிந்துகொள்ளாத ஒருவரை இறக்குமதி செய்ததன் காரணத்தால் ஏற்பட்ட விளைவுதான் இன்றைய இந்த நிலை. நாங்கள் மீண்டும் மீண்டும் இந்த மண்ணுக்கு இறக்குமதிகளை கொண்டுவரக் கூடாது அடிப்படையில் வந்தவர்களை மக்களின் உணர்வுகளை புரிந்தவர்களை கொண்டுவரவேண்டும அதன் ஊடாகத்தான் மக்களுக்கான சேவைகளை வழங்கமுடியும்.

வன்னிமாவட்டங்களில் இருக்கின்றவர்களைத் தரவேண்டும், மாங்குளத்திற்கு வடக்குமாகாணசபையினை கொண்டுவரவேண்டும் என்று கூறியபோது முதலமைச்சர் சொன்னார் அங்கு தண்ணீர் இல்லை என்று அருகில்தான் கனகராயன் ஆறு ஓடுகின்றது.

முதலமைச்சருக்கு இங்கு இருக்கக்கூடிய வன்னி மாவட்டங்களின் புவியியல் சூழல் தெரியவில்லை, அரசியலுக்கு வருகின்றவர்கள் இந்த மண்ணில் இருந்து வரவேண்டும் இந்தப் புவியியல் சூழல் தெரிந்தவர்களாக வரவேண்டும், மேல்தட்டு வர்க்கத்தில் இருந்து வருகின்றவர்கள் தங்களுடைய நிலையில் இருந்துகொண்டு தான் மக்களுக்கான சேவை ஆற்றுவதைப்பற்றி சிந்திப்பார்கள் அவர்களால் எங்கள் மக்களின் உணர்வுகளையும் வலிகளையும்புரிந்துகொள்ள முடியாது என்றும் அவர்தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.அமிர்தலிங்கம் ,உடையார் கட்டு மகாவித்தியாலய உதவி அதிபர் ரி.தரணிதரன், மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிஆணையாளர்ஜே.ஜெயனாத் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மதிப்பளித்து பாடசாலை உபகரணங்களையும் வழங்கி வைத்துள்ளார். (ரி-3)

---

# உலக வங்கியின் நிதியுதவியுடன் குடிதண்ணீர் விநியோகத் திட்டம்

கிளிநொச்சி,செப்.6

இயக்கச்சியில் உலக வங்கியின் நிதியுதவியுடன் 65 மில்லியன் ரூபா செலவில், தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையால் நிலத்தடிக் குழாய் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான அடிக்கல்லை கடந்த திங்கட்கிழமை வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.பசுபதி, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் ஜெயமணி, பசிலைப்பள்ளிப் பிரதேச சபை உப தவிசாளர் கே.கஜன் ஆகியோர் இணைந்து நட்டு வைத்தனர்.

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இயக்கச்சியில் கிராம அலுவலர் அலுவலகத்துக்கு அருகிலுள்ள காணியில் குடிதண்ணீர்த் தொட்டி அமைக்கப்படவுள்ளது. அங்கிருந்து நிலத்தடிக் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இந்தப் பெரிய திட்டத்தின்மூலம் விநாயகபுரம், கோயில் வயல், கொத்தாண்டார் குளம் ஆகிய 3 கிராமங்க ளையும் சேர்ந்த 250 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பயனடையவுள்ளனர்.

---



# வர்த்தகர் சங்க அலுவலகம் திறப்பு

வவுனியா,செப்.6

வவுனியாவில் வர்த்தகர் சங்க அலுவலகம் நேற்றுக் காலை வவுனியா 1 ஆம் குறுக்குத்தெருவில் வன்னிப்பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரஅபய விக்கிரமவால் திறந்து வைக்கப்பட்டது. வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் சுஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா நகரபிதா இ.கௌதமன். உபநகரபிதா குமாரசாமி, வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்தவில்வ ஆராட்சி மற்றும் வர்த்தக சங்க உறுப்பினர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110)

---



# முன்பள்ளிக்கு மின்னிணைப்பு

கிளிநொச்சி,செப் .6

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்ட முகமாலை இளம்தென்றல் முன்பள்ளிக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனிடம் குறித்த கிராம இளைஞர்கள் மற்றும் மக்கள் சில மாதங்களுக்கு முன்பு கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளைக்கு தவிசாளர் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து குறித்த மின் இணைப்புக்கான பணத்தினை மாகாணசபை உறுப்பினர் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதிமூலம் ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இணைப்புச் சீர்செய்யும் பணியைப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு. சுரேன் மற்றும் உபதவிசாளர் கஜன், உறுப்பினர்களான வீரவாகுதேவர், ரமேஷ் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

---

# சமூக ஆர்வலர்களுடன் பிரதி அமைச்சர் சந்திப்பு

வவுனியா, செப் ,6

வவுனியா மாவட்டத்தினதும் நகர்ப் பகுதியினதும் அபிவிருத்தி தொடர்பாகப் பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான் சமூக ஆர்வலகர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

வவுனியா வாடி வீட்டில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், வர்த்தகர்கள், இளைஞர்கள்,சமூக ஆர்வலகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்த நிலையில், வவுனியா நகர் பகுதியை அழகுபடுத்தல், வவுனியா மாவட்டத்துக்குத் தேவைப்படும் அபிவிருத்தித் திட்டம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டிருந்தது. (110)


---

# புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் புதையல் தோண்டிய ஆறுபேர் கைது

புதுக்குடியிருப்பு,செப். 6

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் 6 ஆம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் தனியார் ஒருவரின் காணியில் புதையல் தோண்டிய ஐவர் மற்றும் காணி உரிமையாளர் உள்ளிட்ட ஆறுபேரைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஆனந்தபுரம் 6ஆம் வட்டாரப்பகுதியில் வசித்துவரும் 42 அகவையுடைய நபர் ஒருவரின் வீட்டில் விடுதலைப்புலிகள் புதைத்து வைத்துள்ளதாக நம்பப்படும் தங்கப்புதையல்கள் காணப்படுவதாகத் தெரிவித்து, கடந்த சில நாள்களாக அந்தப் பகுதியில் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டுள்ளது.



இதனைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் 4 ஆம் திகதி தென்னிலங்கையைச் சேர்ந்த 34 அகவையுடைய மந்திரவாதியுடன், கள்ளப்பாடு முல்லைத்தீவைச் சேர்ந்த 37 அகவையுடைய நபர், தலைமன்னார்பகுதியைச்சேர்ந்த 4 பேர், ஆனந்தபுரத்தைச் சேர்ந்த வீட்டுக் காணியின் உரிமையாளர் உள்ளிட்டோர். மந்திரவாதி மந்திரம் ஓதி நிலத்தைத் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை, சம்பவ இடத்துக்கு விரைந்த புதுக்குடியிருப்புப் பொலிஸார் அனைவரையும் கைது செய்துள்ளார்கள். இவர்களைப் பொலிஸ் நிலையம் அழைத்து சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் நேற்று, மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைஎடுத்ததாகப்புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (ரி-3)



## பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நடமாடும் சேவை

மன்னார் ,செப். 6

மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவையும் உள்ளடக்கிய வகையில் பிரதேச செயலகப்பிரிவின் சிறுவர் பெண்கள் அபிவிருத்திப் பிரிவினால் இடம்பெற்ற, பிறப்புச் சான்றிதழ் இல்லாத பிள்ளைகளுக்கான பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை நேற்று முன்தினம் பிரதேச சபையின் முதலாவது மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களின் சிறார்களுக்கு, அதிகமாக பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டதாக, சிறுவர்பராமரிப்பு மற்றும் நன்டத்தை உத்தியோகத்தர் நெல்சன் சொய்சா தெரிவித்தார்.
இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இதுவரை 200 வரையிலான சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. (213)



## ஆடுகள் வழங்கல்

வவுனியா,செப் .6

ஜேர்மனியில் வசிக்கும் சுகுமாரன் துர்க்காஜியின் நிதி அனுசரணையில் வறுமைகோட்டுக்குட்பட்ட குடும்பத்துக்கு வாழ்வாதாரத்துக்காக ஆடுகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.
வவுனியா தாலிக்குளம், பூவரசங்குளத்தில் வசிக்கும் கணவன் காணாமல் போன, 56 வயதுடைய பூபதி என்ற பெண், கணவனால் கை விடப்பட்ட நிலையில் உள்ளஅவரது மகள்,பேத்தி ஆகியோருக்கு, இரண்டு ஆடுகள் தமிழ் விருட்சம் ஊடாக அதன்தலைவர் சந்திரகுமாரால் கடந்த 2 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டுள்ளது. (110)

## அருவி ஆற்றை மறித்து படையினர் விவசாயம்

### மக்களின் பயிர்ச்செய்கை முற்றாகப் பாதிப்பு

வவுனியா,செப். 6

வவுனியா அருவி ஆற்றை மெனிக்பாம் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் திடீரென மறித்தமையினால் 25 குடும்பங்கள் மேற்கொண்ட விவசாயம் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது.
வவுனியா மாவட்டம் செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள அருவிஆற்றினை மறித்து, உள்ளூர் விவசாயிகள் விவசாயம் மேற்கொள்வது வழமை, இந்த முறையும் ஆற்றை மறித்து தண்ணீரைத்தேக்கி 25 ஏக்கர் சிறுபோகம் மேற்கொண்டிருந்தனர்.
இதேவேளை எவரது அனுமதியோ, தகவலோ இன்றி செட்டிகுளம் மெனிக் பாம் பகுதியில் உள்ள இராணுவத்தினர் தாம் நிலைகொண்டுள்ள பகுதியில் 30 ஏக்கர் வயல் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.
இவ்வாறு இராணுவத்தினர் தாம் மேற்கொண்ட நெற் செய்கைக்காக குறித்த ஆற்றின் மறிப்பை உடைத்துள்ளனர்.
இருப்பினும் இராணுவத்தினர் அணையை உடைத்தமை தொடர்பில் அறியாத விவசாயிகள் அதனை மீண்டும் சீர் செய்து மறித்துள்ளனர். இதன்போதே படையினர் விவசாயிகளை அச்சுறுத்தி விரட்டியுள்ளனர். இதனால்விவசாயிகள் குறித்த விடயத்தினை உடனடியாக நீர்ப்பாசன பொறியியலாளர் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர் . இதன் போது பொறியியலாளர் படையினருடன் தொடர்பு கொண்டுள்ளார். படையினர் பொறியியலாளரையும் அச்சுறுத்தி வெளியேற்றியுள்ளனர்.
இதன் காரணமாக உள்ளூர் விவசாயிகளினால் விதைக்கப்பட்ட 25 ஏக்கர் வயலும் தற்போது முழுமையாகவே அழிவடைந்துவிட்டது. எனவே இது தொடர்பில் மாவட்டச் செயலகம் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் படையினரின் தலையீடு இருப்பதனை தடை செய்வதோடு தற்போது பாதித்த உள்ளூர் விவசாயிகளிற்கு இழப்பீடும் வழங்க வேண்டும் எனத் திங்கட்க்கிழமை மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. (105)

### நானாட்டானில்

# உள்ளக பேருந்து சேவை ஆரம்பிப்பதற்கு முடிவு

### பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தெரிவிப்பு

மன்னார்,செப் .6

நானாட்டான் பிரதேசத்துக்கான பொதுப் போக்குவரத்து சேவையாக மன்னாரிலிருந்து வங்காலை, உயிலங்குளம், முருங்கன் ,மடுக்கரை, அரிப்பு போன்ற இடங்களுக்கு வழமையான பேருந்துச் சேவைகள் நடைபெறுகிறது. இவை பிரதான வழிகளால் மேற்கொள்ளப்படுபவை. இது தவிர உள்ளகப் போக்குவரத்துச் சேவை ஒன்றை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் நானாட்டானில் இருந்து நீண்ட தூரங்களைக் கொண்ட கிராமங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள், உள்ளூர் வியாபாரிகள், முதியவர்கள் எனப் பலரும் பாதிக்கப்படுவது அவதானிக்கப்பட்டதை தொடர்ந்து, நானாட்டான் பிரதேச கிராமங்களை இணைக்கும்படியான, உள்ளக பேருந்து அல்லது சிற்றுந்து சேவையைச்செய்வது என்றுதீர்மானித்துள்ளதாக நானாட்டான் பிரதேச செயலர் மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:
நாம் எப்போதும் நமக்கு முன்னால் நடப்பவற்றை மட்டுமே பார்த்துப் பழகிவிட்டோம். நம் கண்களுக்குத் தெரியாமல் சரிப்படுத்த வேண்டிய விடயங்கள் நிறைய உள்ளது. அதில் ஒன்று நானாட்டான் பிரதேச கிராமப்புறத்து மக்களின் போக்குவரத்து பிரச்சினை.
இதற்கு முன் இருந்தவர்கள் இந்த மக்களின் நன்மை கருதி போக்குவரத்து வலையமைப்பு ஒன்றை உருவாக்கவில்லை.
இதனைக் கருத்தில் கொண்டுநானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி. பரஞ்சோதி ,உபதவிசாளர் புவனம் மற்றும் பொது அமைப்புக்களுடனும் கலந்துரையாடி உள்ளக போக்குவரத்து வலையமைப்புக்காகச் சில கிராமங்கள் பரிந்துரை செய்யப்பட்டது.
அந்தக்கிராமங்களாக கற்கிடந்தகுளம், கரம்பைக்குளம்,ஆத்திமோட்டை, ஜீவநகர் ,பரிகாரிகண்டல், களிமோட்டை, நீலமடு, மடுக்கரை, சாளம்பன், நொச்சிக்குளம் , எருவிட்டான், வஞ்சியன்குளம், புதுக்கமம், வங்காலை வழியாக மன்னார் நகரை இணைக்கும்படியான வழித்தடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.
இந்த வழித்தடம் உள்ளூர்க் கிராமங்களையும், நானாட்டான்,பிரதேசத்தின் சேவை மையங்களான பிரதேச செயலகம், பிரதேச சபை, பாடசாலை, மருத்துவமனை, சந்தைக் கடைத் தொகுதிகள் என்பவற்றை இணைப்பதோடு, உள்ளூர் விவசாயிகளின் உற்பத்திப்பொருட்களைச் சந்தைப்படுத்தவும் ஏதுவாக உள்ளது.
இந்த உள்ளகப் போக்குவரத்து வழிக்கான அனுமதியினை கோரி உரிய தரப்பினருக்கு விண்ணப்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நானாட்டான் பிரதேச செயலர் தெரிவித்தார். (213)



## வீட்டுக்குள் முதலை

மன்னார் ,செப் 6

மன்னார் சின்னக்கடை தெற்கு வயல் வீதி பகுதியில் உள்ள வீட்டினுள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு உட்புகுந்த முதலையினை அப்பகுதி மக்கள் இணைந்து பாரிய போராட்டத்தின் மத்தியில் பிடித்து கட்டியுள்ளனர்.
மன்னார் சின்னக்கடை தெற்கு வயல் வீதியில் சீரமைப்பு செய்யப்பட்ட குளம் உள்ளது.
குறித்த குளத்தில் அதிகளவான தாமரைகொடி காணப்படுகின்றது. இந்தக் குளத்தில் முதலைகள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.
முதலை ஒன்று செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் குளத்தில் இருந்து வெளியில் வந்து அருகில் உள்ள வீட்டினுள் செல்ல முயன்றுள்ளது.
சுமார் 5 அடி நீளம் கொண்ட முதலை புதன் கிழமை அதிகாலை 1 மணியளவில் உயிருடன் பிடிக்கப்பட்டு கட்டி வைக்கப்பட்டு மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. (56)

### இ.போ.சபை முல்லைத்தீவு டிப்போ

## வெற்றிடங்களை நிரப்புமாறு மஸ்தானுக்கு கோரிக்கை கடிதம்

முல்லைத்தீவு ,செப் 6

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு டிப்போவில் இன்னும் பல வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலை காணப்படுவதாகவும் அவற்றை நிவர்த்தி செய்து தருமாறும் பிரதி அமைச்சர் காதர் மஸ்தானிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.
அந்தக் கோரிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட சாலைக்கு அதிகளவில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களையே பணிக்கு அமர்த்துகின்றார்கள். வடக்கில் அதிகூடிய வருமான்த்தை ஈட்டிக்கொடுக்கும் சாலையாக முல்லைத்தீவு சாலை காணப்படுகின்றது.
போரால் பாதிக்கப்பட்ட எத்தனையோ சாரதிகள் வேலை இல்லாமல் வாழ்ந்து வரும் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களைப் பணிக்கு நியமித்தால் சிறப்பாகப் போக்குவரத்துப் பணி நடைபெறும் இந்தநிலையில், முல்லைத்தீவு டிப்போவில் நீண்டகாலமாக 40 ற்கும் மேற்பட்ட ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது.
நிலவிவரும் ஆளணி மற்றும் பேருந்துப் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்வதன் மூலம் பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையை நிறைவாக் மேற்கொள்ள முடியும் என்றும், வெற்றிடமாக உள்ள சில வேலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலும், தினக்கூலி அடிப்படையிலும் ஆள்களை ஈடுபடுத்தி வருகின்றோம், இவர்களுக்கு நிதந்தர நியமனம் பெற்றுத் தருவதோடு மேலும் பத்து புதிய பேருந்துகளைப் பெற்றுத்தருமாறும் இலங்கைப் போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு சாலையினரால் கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (ரி 3)

## சிறிய வெங்காய விதையுற்பத்தி வெற்றியளிப்பு

வவுனியா,செப் 6

வவுனியாமாவட்டவிவசாயப் பயிற்சி நிலையத்தில் 26 ஆம் திகதி ஜூன் மாதம் நடுகைசெய்து பராமரிக்கப்பட்ட சிறியவெங்காய விதையுற்பத்தித் துண்டம் ஒருங்கிணைந்த பயிர்ச்செய்கைத் திட்டத்தினூடாக செய்கைபண்ணப்பட்டுள்ளது.
முழுமையாக தூவல் நீர்ப்பாசனத் தொகுதி மூலமாக இதற்கு நீர்ப்பாசனம் செயயப்படுகின்றது.
செய்கைதுண்டத்தின் மூலமாக வறட்சிக்குரிய தொழில்நுட்பங்களும் , விதையுற்பத்தி செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகளும் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது.
இங்கு விளைவிக்கப்பட்ட துண்டத்தின் அவதானிப்பின்படி ஒருநிலையத்தில் இருந்து 35 விதைக்குமிழ் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 34 பூக்கள் காணப்படுகின்றது. ஒரு பூவில் 85 தொடக்கம் 90 சிறிய பூக்கள் காணப்படுகின்றது. ஒரு சிறிய பூவில் 35 விதைகள் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (205)



வந்தாறுமூலையில் இருந்து விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு

# காணாமல் ஆக்கப்பட்டோரின் நினைவுதினம் நேற்று உருக்கம்





மட்டக்களப்பு, செப். 6

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டு காணமால் ஆக்கப்பட்டவர்களின் 28ஆவது ஆண்டு நினைவேந்தல் வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தில் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக் கழக கலை காலாசார பீட மாணவர் ஒன்றியம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு என்பன இணைந்து இந்தநிகழ்வை ஏற்பாடுசெய்திருந்தன. காணாமல் ஆக்கப்பட்டனர்களின் உறவுகள், தன்னார்வலர்கள், மாணவர்கள் என்று பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். நிகழ்வின் ஒருபகுதியாக மெழுகுவர்த்தி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அரசபடையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் ஊக்கிரமடைந்தநிலையில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்தனர். அந்த ஆண்டின் செப்ரெம்பர் 5ஆம் திகதி அரச தரப்பால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 158 பேர் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். காணாமல் போனோர் தொடர்பில் அறிவதற்காக அரச தலைவரால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவிலும் இந்தவிடயம் தொடர்பில் முறைப்பாடுபதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நேற்றையதினம் இடம்பெற்ற நினைவேந்தலில் கலந்துகொண்டவர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ம)

# யாழுக்கு இடமாற்றம் வழங்கிடுக

கிளிநொச்சி, செப். 6

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டவர்கள் தமக்கான இடமாற்றத்தை வழக்குமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, பச்சிலைப்பளி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகங்களின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 200க்கும் அதிகமானவர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பணிக்காக நியமிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்களுக்கான இடமாற்றம் (யாழ்ப்பாணத்துக்கு) வழங்கப்படவில்லை. எனவே இடமாற்றத்தைத் துரிதப்படுத்துமாறு கோரியே அவ்வாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கடிதத்தின் பிரதிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலர், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த 5 வருடங்களுக்கும் மேலாகக் கிளிநொச்சிக்கு வந்து பணிபுரிகின்றோம். சுமார் 150 கிலோமீற்றர் தூரம் தினமும் பயணித்தே கடமையாற்றுகின்றோம். எமக்கான வருடாந்த இடமாற்றம் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் எமது குடும்பங்கள் மனழைச்சலுக்கு உள்ளாகியுள்ளன. நாமும் ஒருவித மனவுழைச்சலிலேயே தினமும் வந்து செல்கின்றோம். திருமணமான பெண்கள், தமது குழந்தைகளை வீட்டில் தனியே விட்டுவிட்டு கிளிநொச்சிக்கு வந்து பணிபுரிகின்றனர். எனவே எமது நலனைக் கருத்தில் கொண்டு எமக்கான இடமாற்றத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்" என்று பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (ம-21)

# கிருசாந்தியின் 22 ஆவது நினைவுதினம் நாளை



யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணம் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட கிருசாந்தியின் 22ஆவது ஆண்டு நினைவுதினம் நாளை வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது. கிருசாந்தியுடன் படுகொலை செய்யப்பட்ட ஏனையவர்களுக்கும் நிகழ்வில் அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

செம்மணியில் கிருசாந்தி படுகொலை செய்யப்பட்ட இடத்தில் இந்தநினைவேந்தல் கடைப்பிடிக்கப்படவுள்ளது. செம்மணிப் படுகொலை நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெறுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள், தன்னார்வலர்கள் என்று பலரும் நிகழ்வில் கலந்துகொள்வார்கள் என்றும், நிகழ்வின் ஒருபகுதியாக 50 மாணவர்களுக்குப் புத்தகப்பைகள் வழங்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

கடந்த 1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த கிருசாந்தி, இராணுவத்தால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். கிருசாந்தியைதேடிச் சென்ற பெற்றோர் உள்ளிட்ட உறவினர்கள் மற்றும் அயல் வீட்டாரும் படுகொலை செய்யப்பட்டு செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டமை பின்நாள்களில் கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்து இராணுவ சிப்பாய்கள் சிலர் கைது செய்யப்பட்டு, ஒருவருக்குத் தூக்குத்தண்டனையும் விதிக்கப்பட்டது. (ம)

# இந்தியாவுக்கு பயணமாகும் வடமாகாண உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், செப். 6

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 16 பேர் அடங்கிய குழுவினர் கிராமிய அபிவிருத்தி தொடர்பான செயலமர்வில் கலந்துகொள்வதற்காக எதிர்வரும் 16ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணமாகின்றனர் என்று அறியவருகிறது. ஹைதரபாத் நகரில் நடக்கவிருக்கும் கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்காகவே அவர்கள் அவ்வாறு செல்லவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை ஆசியன்பவுண்டேசன் மேற்கொண்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தமிழகத்துக்குச் சென்று செயலமர்வில் கலந்து கொண்டிருந்தனர். (ம-8,50)

# முடிவுக்கு வந்தது இ.போ.ச. ஊழியர்களின் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 6

சம்பளப் பிரச்சினை உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இ.போ.ச. பேருந்து ஊழியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு கொழும்பு போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் உறுதிமொழியை அடுத்து நேற்றுமுன்தினம் மாலை முடிவுக்கு வந்தது.

இ.போ.ச. பேருந்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு வடக்கு பேருந்து சங்கங்களும் ஆதரவு தெரிவித்திருந்தன. இதன்படி கடந்த மூன்றாம் திகதி நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். போக்குவரத்து அமைச்சருக்கும் போராட்டத்தாரினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் ஏற்பட்டது. தனது உறுதிமொழிகளை அமைச்சர் எழுத்தில் வழங்கினார். இதையடுத்து பணிப்புறக்கணிப்புப் போராட்டம் திரும்பப்பெறப்பட்டது. இதையடுத்து இ.போ.ச. சேவைகள் நேற்று வழமைக்குத் திரும்பின. (ம-8)



அரசுடமையாக்கிய படகுகளை விடுவிக்குக

# இந்திய மீனவர்களின் கோரிக்கை நிராகரிப்பு


யாழ்ப்பாணம், செப். 6

அரச உடமையாக்கிய தமது படகுகளை விடுவிக்குமாறு இந்திய மீனவர்கள் கோரியிருந்த நிலையில், அவர்களின் மனுவை ஊர்காவற்றுறை நீதிமன்றின் நீதிபதி அ.ஜூட்சன் நிராகரித்தார். இந்த விவகாரத்தில் மேல் நீதிமன்றை நாடுமாறும் அவர் அறுவுறுத்தினார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த ஜூன் மாதம் நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து 18 மீனவர்கள் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். அவர்களின் 3 இழுவைப் படகுகளும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டன. மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன், தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தியப் படகுகளை கடல்வள பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசுடமையாக்குமாறு கடந்த 28ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

இந்த நிலையில் தமிழகத்திலிருந்து படகுகளின் உரிமையாளர்கள் வருகைதந்து, மன்றின் கட்டளையை மறுஆய்வு செய்து படகுகளை விடுவிக்குமாறு கோரி சட்டத்தரணி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா ஊடாக நேற்றுமுன்தினம் மன்றில் விண்ணப்பம் செய்தனர். குறித்த விண்ணப்பத்தை ஆராய்ந்து நிராகரித்த ஊர்வாற்றுறை நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், "படகுகளின் உரிமையாளருக்கான கால அவகாசம் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிட்டதையும் விட அதிகமாகவே நீதிமன்றால் வழங்கப்பட்டிருந்தது. உரியகால எல்லைக்குள் யாரும் உரிமை கோர முன்வரவில்லை. அதனால்தான் படகுகளை அரசுடமையாக்க மன்று கட்டளை வழங்கியது" என்று நீதிவான் சுட்டிக்காட்டினார். மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யுமாறும் அவர் அறிவுறுத்தல் வழங்கினார். (ம-105)

# சிறு கைத்தொழில் வலயமாக மாறுகிறது காங். சீமெந்துத் தொழிற்சாலை வளாகம்




யாழ்ப்பாணம், செப். 6

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள 100 ஏக்கர் வளாகம் சிறிய கைத்தொழில்கள் வலயமாக விரைவில் மாற வுள்ளது. இதற்குரிய அனுமதியை கொழும்பு அமைச்சரவை வழங்கியுள்ளது.

முன்னொரு காலத்தில் வடபகுதியின் முக்கிய தொழிற்சாலையாக இருந்த காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை போரின்போது சிதிலமடைந்தது. போர் முடிவடைந்து மக்கள் ஓரளவு மீளக் குடியமர்ந்த பின்னர் இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் வலுப்பெற்றன. எனினும் சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் காரணமாக தொழிற்சாலையை மீண்டும் இயக்க முடியாத நிலை உருவானது. கடந்த மே மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்திருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் "சீமெந்துத் தொழிற்சாலை அமைந்திருக்கும் பகுதி தொழில்நுட்ப வலயமாகவும், கைத் தொழில் வலயமாகவும் மாற்றப்படும்" என்று தெரிவித்திருந்தார். இதன் பின்னராக நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகளின் அடிப்படையில் அனைத்து வசதிகளையும் கொண்டதாக குறித்த பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் வழங்கிய ஆவணங்களுக்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அங்கீகாரம் கொடுத்தது. 998 மில்லியன் ரூபா செலவில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள 100 ஏக்கர் வளாகம் சிறிய கைத்தொழில்கள் வலயமாக மாற்றப்படவுள்ளது. (ம)

# மன். கட்டுக்கரை குளத்தருகில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன

கைவிடப்பட்டிருந்த காணியில் அவை கிடைத்தன



யாழ்ப்பாணம், செப். 6

மன்னார் கட்டுக்கரை கோரமோட்டைப் பகுதியில் போர் காரணமாக நீண்டகாலம் பயன்படுத்தப்படாமல் இருந்த காணி மற்றும் கிணறு என்பன வீட்டு உரிமையாளரால் துப்பரவு செய்யப்பட்ட நிலையில் கிணற்றில் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

"கிணற்றினை துப்பரவுசெய்யும் பொழுது கைக்குண்டு மற்றும் ஆபத்தை விளைவிக்கும் வெடிபொருள்களை கண்ட வீட்டின் உரிமையாளர், உடனடியாக முருங்கன் பொலிஸ்நிலையத்தில் தகவல் தெரிவித்ததை அடுத்து பொலிஸார் குறித்த பகுதிக்கு விரைந் தனர். அங்கு சுமார் 30க்கும் மேற்பட்ட வெடிபொருள்கள் இருப்பது தொடர்பில் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. மன்றின் உத்தரவை அடுத்து அத்தனை வெடிபொருள்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன" என்று முருங்கன் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (ம-213)

## சாவகச்சேரியில் மீட்கப்பட்டது வெடிபொருள்

சாவகச்சேரியில் நீண்டகாலமாக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த கிணறு துப்பரவு செய்யப்பட் போது வெடிக்காத நிலையில் வெடிபொருள் மீட்கப்பட்டது.

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டரங்கில் உள்ள கிணறு அயலில் உள்ள பொது மக்களாலும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் வேளைகளில் அதில் கலந்து கொள்வோராலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தக் கிணறு நேற்றுமுன்தினம் துப்பரவு செய்யப்பட்டது. அதன்போது வெடிக்காத நிலையில் வெடிபொருள் ஒன்று வெளியே வந்துள்ளது. இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் சாவகச்சேரி நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அனுமதி பெற்று அது செயலிழக்கச்செய்யப்பட்டது. (ம-9)

# பனம்பழச் சீசன் ஆரம்பித்துள்ளதால் பயனாளிகளுக்கு பயற்சிகள் தீவிரம்



யாழ்ப்பாணம், செப். 6

பனம்பழச் சீசன் ஆரம்பித்துள்ள நிலையில் அதனைக் கொண்டு உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்க பனை அபிவிருத்திச் சபை பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பனம் பழத்தைப் பெற்று அதிலிருந்து பனங்களியைச் சேகரித்துப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள், பினாட்டு உற்பத்திக்கான பயிற்சிகள் என்பனவற்றைப் பனை அபிவிருத்தி சபை தற்போது முன்னெடுத்துள்ளது.

இதன் ஒருகட்டமாக எதிர்வரும் 11ஆம் திகதி மன்னார், கற்பிட்டி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள 8 பனைசார் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு பனை அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்களால் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (ம-21)

# சிறுமி றெஜினா கொலை வழக்கில் மேலும் இரு வாக்குமூலங்கள்



யாழ்ப்பாணம், செப்.6

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் உள்ள காட்டுப்புலம் பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் சப்பாத்துக்கள், தமது வீட்டுக்குள் இருந்தன என்று உறவினர்களிடம் வெளிப்படுத்திய சிறுமி மற்றும் சிறுவன் ஆகியோரிடம் நேற்றுமுன்தினம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டன. மல்லாகம் நீதிவானின் சமாதான அறையில் வைத்து வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

அத்துடன், வழக்கின் முக்கியமான சாட்சிகள் இருவரை எதிர்வரும் 11ஆம் திகதி மன்றில் முன்னிலையாக மல்லாகம் நீதிமன்றால் அழைப்புக் கட்டளை வழங்கப்பட்டதுடன் வழக்கினை அன்றைய தினத்துக்கு ஒத்திவைத்த நீதிவான் அன்றைய தினம் வரையில் சந்தேகநபர்கள் மூவரையும் விளக்கமறியல் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சுழிபுரம் காட்டுபுலம் அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் சிவனேஸ்வரன் றெஜினா (வயது6) என்ற சிறுமி அந்தப் பகுதித் தோட்டக் கிணற்றிலிருந்து கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி திங்கள்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவர், கடந்த 2 மாதங்களாக தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் சந்தேநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணை அறிக்கையை மன்றில் முன்வைத்தனர்.

''படுகொலை செய்யப்பட்ட மாணவி சிவனேஸ்வரன் றெஜினாவின் சப்பாத்துக்கள், தமது வீட்டுக்குள் இருந்தன என்று இந்த நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளித்தவரின் மகளான சிறுமி ஒருவர் தனது உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். எனவே அதுதொடர்பில் அந்தச் சிறுமியை நீதிமன்றில் முற்படுத்தி அவரிடம் சாட்சியம் பெறப்பட வேண்டும். அதன்மூலமே இந்த வழக்கின் சரியான போக்கை உறுதிப்படுத்த முடியும். அத்துடன், குற்றவாளி எவராவது வெளியில் இருந்தால் அவரைக் கைது செய்ய முடியும்" என பாதிக்கப்பட்டோர் நலன்சார்பில் முன்னிலையாக சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார். அதனடிப்படையில் சிறுமியை மன்றில் முற்படுத்த நீதிவான் கடந்த தவணை கட்டளை வழங்கியிருந்தார். இதையடுத்தே இந்த இரு வாக்குமூலங்களும் பெறப்பட்டன. (ம-37)

# இன்னும் 10 ஆண்டுகளுக்கு நாமே நாட்டை ஆள்வோம்

கொழும்பு, செப். 6
எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கு நாட்டில் ஐக்கிய தேசியக்கட்சியின்ஆட்சியே நீடிக்கும். அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்று கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மாகாண சபைத் தேர்தலைத் தாமதப்படுத்தாது உடனடியாக நடத்துமாறு ஒன்றிணைந்த எதிரணி கூறி வருகின்றது. அதனையே நாமும் கூறுகின்றோம். தேர்தலை விரைவில்நடத்தவேண்டும்என்பதே எமது விருப்பமும். புதிய தேர்தல் முறையில் காணப்படும் சிக்கல்களே இந்தஇழுத்தடிப்புக்குக்காரணம். எனவே, பழைய முறையிலாவதுதேர்தலை நடத்தவேண்டும்.
உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதை மனதில் கொண்டு, எதிர்வரும் தேர்தல்களிலும் வெற்றிபெறலாம் என்ற எண்ணத்துடனேயே தேர்தலை விரைவுபடுத்த ஒன்றிணைந்த எதிரணி கோரி வருகிறது. ஆனால், அது சாத்தியப்படாது எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்கு ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சியே நாட்டில் மேலோங்கும்" - என்றார்.

# நியமன உறுப்பினராக மயில்வாகனம் பதவியேற்பு

வடமராட்சி, செப். 6
கோப்பாய்- வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நியமன உறுப்பினராக இ.மயில்வாகனம் பதவி ஏற்றுள்ளார்.
முன்னர் உறுப்பினராக இருந்த சந்திரசேகரம் பிரதீபன் சுயவிருப்பத்தின் பேரில் பதவி விலகியதையடுத்து அவ்விடத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் மயில்வாகனம் பரிந்துரை செய்யப்பட்ட புதிய நியமன உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார். இவர் எதிர்வரும் 24ஆம் திகதி இடம்பெறும் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கன்னிஉரை நிகழ்த்துவார்.
புதிய உறுப்பினர் மயில்வாகனம் கோப்பாய்ப் பிரதேச தேசோதா சபை, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய் பிரிவு ஆகியவற்றின் தலைவருமாவார். (173)




# மட்டக்களப்பில் நாளை கடையடைப்பு

மட்டக்களப்பு, செப் 6
மட்டக்களப்பு புல்லுமலை தண்ணீர் தொழிற்சாலைக்கு எதிராக நாளை கடையடைப்பு என்று குறிப்பிட்டு மட்டக்களப்பு,கல்லடி உட்பட ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் உணர்வாளர்கள் அமைப்பினால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

# தமிழ் மக்களைத் தூண்டுவதை மட்டுமே விக்னேஸ்வரனால் செய்ய முடியும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு,செப். 6
தமிழ்மக்களைத் தூண்டுவதை மாத்திரமே விக்னேஸ்வரனால் செய்ய முடியும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
விக்னேஸ்வரன் குறிப்பிடத்தக்க வகையில் பெரிய அபிவிருத்தித் திட்டமொன்றையும் முன்னெடுக்கவில்லை. அவரால் அப்பாவித் தமிழ் மக்களைத் தூண்டிவிட மாத்திரமே முடியும். பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தியாகங்கள் காரணமாகவே விக்னேஸ்வரனால் பதவி வகிக்க முடிகின்றது. ஐந்து வருடங்களாக விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவிவகிக்கின்ற போதிலும் அவர் எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை - என்றார்.

# வடக்கில் புலிகள் செய்ததை தெற்கில் மகிந்த அணி செய்கிறது

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு, செப். 6
**வடக்கில், தமிழீழ விடுதலைப் புலிகள் செய்ததையே, தற்போது ஒன்றிணைந்த எதிரணியினர் செய்கின்றனர் என்று அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஒருங்கிணைந்த எதிரணியினர் தற்போது அரசுக்கு எதிரான போராட்டத்தை மேற்கொள்ள கொழும்புக்கு மக்களை அழைத்து வந்தனர்.
உண்மையில், இவர்கள் எதற்காக இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும்? இவர்களுக்கான இலக்கு தான் என்ன? என்று புரியவில்லை. 2001, 2005ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி கொழும்புக்கு மக்களை வரவழைத்துப் போராட்டம் நடத்தியமைக்கு ஒரு காரணம் இருக்கின்றது.
அதேபோல், கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, கடத்தல் போன்ற சம்பவங்களுக்கு எதிராகவும் நாம் போராட்டங்களை நடத்தியுள்ளோம்.
இவ்வாறு கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களுக்கு எல்லாம் ஒரு காரணம் இருக்கின்றன. ஆனால், இந்த போராட்டத்துக்கு உண்மையான காரணம் என்ன?
வடக்கில், தமிழீழ விடுதலைப் புலிகள் செய்ததைத்தான் ஒருங்கிணைந்த எதிரணியினரும் செய்கிறார்கள்.
தமது தேவைக்காகப் பொதுமக்களை புலிகள் எவ்வாறு கொலைசெய்தார்களோ, அதேபோன்றுதான் தங்கள் மீதான வழக்குகளில் இருந்து தப்பிக்க எதிரணியினர் மக்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்
எவ்வாறாயினும், நாம் இந்த விடயங்கள் தொடர்பில் ஜனநாயக ரீதியாகவே செயற்படுவோம். இந்த நாட்டில் தற்போது பூரண ஜனநாயகம் உள்ளது. ஊடகம் மற்றும் கருத்துச் சுதந்திரம் மேலோங்கியுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு, நாம் முழுமையான சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளோம். 10 - 20 வருடங்களுக்குப் பின்னர் இந்த நாட்டில் ஒருவேளை பொதுஜன பெரமுனயின் ஆட்சி வந்தால், அப்போது மக்கள் எமது இந்தக் கூட்டாட்சி தொடர்பில் பெருமையாகப் பேசுவார்கள். நாம் இந்த அரசைப் பெரிய சுமையுடன்தான் பொறுப்பேற்றோம். இந்த நிலையில் கூட மக்களுக்குச் சுமையை வழங்கிவிடக் கூடாது என்றே முடிந்த வரை சேவையாற்றிக் கொண்டிருக்கிறோம்.
அரசு ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், பெற்றோல், டீசல் உள்ளிட்டவற்றின் விலை கடந்த அரசை விட இன்னும் குறைவாகத்தான் உள்ளது.
அத்தியாவசியப் பொருள்களின் விலையில் காலத்துக்கு ஏற்ப சில மாற்றங்கள் வந்தாலும், கடந்த அரசைப் போல நாம் மக்களைச் சிக்கலில் தள்ளவில்லை. சொல்லப்போனால், ஐரோப்பிய நாடுகளில் இல்லாத அளவுக்குக் கூட எமது நாட்டில் மக்களாட்சி உள்ளது" - என்றார்.

# இ.போ.ச வேலை நிறுத்தத்தால் தீவுப் பகுதி மக்கள் பெரிதும் பாதிப்பு

ஊர்காவத்துறை,செப் 6
இலங்கைப் போக்குவரத்துச் சபையினரின் வேலைநிறுத்தத்தினால் தீவுப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.
ஊர்காவற்றுறையில் யாழ்ப்பாணம் செல்லும் 777 பாதையால் 95% மான சேவையை இலங்கைப் போக்குவரத்துச் சபையே செய்கின்றது.
ஊர்காவற்றுறைத் தனியார் போக்குவரத்துச் சபை இவ் வழிப்பாதையூடாக யாழ்ப்பாணத்தில் இருந்து 3தடவையும் ஊர்காவற்றுறையிலிருந்து 5தடவையும் சேவையில் ஈடுபடுகின்றன.
அனலைதீவு , எழுவைதீவு செல்லும்




மக்கள் கடல்வழிப் போக்குவரத்து நடைபெறும் இடத்துக்குப் பேருந்து இல்லாமையினால் ரூபா 200-250 வரை முச்சக்கரவண்டிக்குப் பணம் கொடுத்து கண்ணகை அம்மன் இறங்குதுறைமுகத்துக்குச் சென்றதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி ஆரம்பம்

வடமராட்சி, செப். 6
பருத்தித்துறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கக் கிளைகள், சந்தைகளில் பயன்படுத்தப்படும் நிறுத்தல், அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடும்பணி இடம்பெறவுள்ளது.
மந்திகையில் உள்ள பிரதேச சபையின் புலோலி உப அலுவலகத்தில் வைத்து இந்தப் பணி இன்றும் நாளையும் மேற்கொள்ளப்படும். (173)

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால்

# 11 விளையாட்டுக் கழகங்களுக்கு ரூ. 4 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் ,கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள 11 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கு தலா 40 ஆயிரம் ரூபா வீதம் 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளார். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முகாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஒளிப்பட இயந்திரம் வழங்க ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் , இத்தாவிலில் மாலை நேர வகுப்புகள் நடத்துவதற்கான உபகரணங்கள் வழங்க 40 ஆயிரம் ரூபாவும், கோவில்வயல் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 90 ஆயிரம் ரூபாவும் , இயக்கச்சி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 70 ஆயிரம் ரூபாவுமாக 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள இத்தாவில் கென்னடி விளையாட்டுக் கழகம் , பளை சிறிபதி விளையாட்டுக் கழகம், இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழகம், தம்பகாமம் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்,தர்மக்கேணி பூதவராயர் விளையாட்டுக் கழகம், புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழகம், முல்லையடி விநாயகர் விளையாட்டுக் கழகம், தம்பகாமம் துர்க்கா விளையாட்டுக் கழகம், முகமாலை புதிய இளந்தென்றல் விளையாட்டுக் கழகம், அல்லிப்பளை சாலை விளையாட்டுக் கழகம், புலோப்பளை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய 11 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கத் தலா 40 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கியுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கிளாலி ஐயனார் கோவில் சீரமைப்புக்கு 2 லட்சம் ரூபாவும் , அல்லிப்பளை அறத்திநகர் முன்பள்ளிக்கு சமையலறை அமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவினையும் , நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன் முல்லையடி விநாயகர் முன்பள்ளிக்கு 25 ஆயிரம் ரூபாவும், அல்லிப்பளை சாலை விளையாட்டுக் கழகத்துக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது . (9)

## துறைசார் குழுக் கூட்டம் இன்று நாடாளுமன்றில்

கொழும்பு, செப். 6
வடக்கு-கிழக்கு மீள்சீரமைப்பு-நல்லிணக்கம் தொடர்பான துறைசார் குழுக்கூட்டம் இன்று நாடாளுமன்றக்குழு அறை 2 இல் காலை 10 மணிக்கு மாவை. சோ. சேனாதிராஜா தலைமையில் இடம்பெறும்.
மேற்படி மீள்சீரமைப்பு நல்லிணக்கம் தொடர்பான விடயப் பரப்பின்கீழ் வீடமைப்பு, மீள்குடியமர்வு தொடர்பில் ஆராயப்படும்.
இதன்போது மீள்குடியமர்வு அமைச்சு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு வீடமைப்பு கட்டத்துறை அமைச்சு மற்றும் தேசிய ஒருமைப்பாடு அலுவலகப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ. சரவணபவன், என். என். சிவசக்தி, முஜிபுர் ரகுமான், அங்கயன் இராமநாதன் உள்ளிட்ட 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வர். (50)

## இலங்கைக் கடற்படைக்குப் பயிற்சி அளிக்கும் அமெரிக்கப் படை அதிகாரிகள்

கொழும்பு, செப். 6
இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கப் படை அதிகாரிகள் குழுவொன்று ஒருங்கிணைந்த கடல்சார் திறன்கள் பயிற்சிகளை வழங்க ஆரம்பித்துள்ளது. திருகோணமலை டொக்யார்ட்டில் உள்ள சிறப்புப் படகு படையணியின் அரங்கில் கடந்த 3ஆம் திகதி இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.
அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின், போதைப் பொருள் முறியடிப்புப் படையணி, மற்றும் மேற்கு கூட்டு ஒருங்கிணைப்பு அதிரடிப்படை ஆகியவற்றின் ஏழு அதிகாரிகள் இந்தப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.
நான்காவது அதிவேக தாக்குதல் படகு அணியைச் சேர்ந்த 16 பேர் மற்றும் சிறப்புப் படகு படையணியைச் சேர்ந்த 16 பேர் உள்ளிட்ட 32 இலங்கைக்கடற்படையினருக்கு, இந்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.
எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இந்தப் பயிற்சிகள் அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை

## தவறான முடிவெடுத்து உயிரை விட்ட மாணவி

கொழும்பு, செப் 6
ஆபாச திரைப்படங்களில் இடம்பெறும் காட்சிகளைப் போன்று நடித்துக்காண்பிக்குமாறு பகிடிவதைக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட மாணவியொருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.
இந்தச் சம்பவம் சப்ரகமுவ பல்கலைகழகத்தில் இடம்பெற்றதாக சிங்கள் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அமலி சத்துரிகா என்ற பல்கலைக்கழக மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
தவறான முடிவெடுக்க முன்னர் அந்த மாணவி தனக்கு நேர்ந்த பயங்கர அனுபவங்கள் குறித்த கடிதமொன்றை எழுதி வைத்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் தன்னைப் பகிடிவதை செய்வதாகத் தெரிவித்து கொடூரமாக நடத்திய இரு மாணவிகள் என்று குறிப்பிட்டு அவர்களின் பெயரையும் குறிப்பிட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் இரு மாணவிகளும் அடையாளம்காணப்பட்டுவிசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
அந்தக் கடிதத்தில் மேலும் எழுதப்பட்டுள்ளதாவது:
கணினியில் ஆபாச திரைப்படங்களைக் காண்பித்து, சப்ரகமுவ பல்கலைக்கழக உணவு விடுதிக்கு அருகில் மாணவியருக்கு முன்பாக அதேபோல நடித்துகாண்பிக்குமாறு மேற்படி இரண்டு மூத்த மாணவிகளும் நிர்ப்பந்தித்துள்ளனர். இதனாலேயே இவ்வாறான முடிவை எடுத்துள்ளேன்
அத்துடன் இறுதிக்கிரியையில் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் யாரையும் அனுமதிக்கவேண்டாம். தனது உடலை கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யவும். தனது பாடப்புத்தகங்களையும் தன்னுடன் சேர்த்து அடக்கம் செய்யும்படியும், கணினி, கையடக்க அலைபேசி, ரப் என்பவற்றை நண்பி (தரிந்து) என்ற மாணவியிடம் வழங்கும்படியும் கோரியுள்ளார்.
தவறாக முடிவெடுத்த மாணவியும், பகிடிவதை செய்த மாஷா என்ற மாணவியும் கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தில் ஒன்றாகப் படித்தவர்கள்.
பாடசாலைக் காலத்திலும் இருவருக்கிடையில் விரிசல் காணப்பட்ட தாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சிறுபான்மை இனங்களின்

# பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு

கொழும்பு, செப். 6
**வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சி னைகள் தொடர்பில் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கும், கலந்துரையாடல் ஊடாக அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நாடாளுமன்றத்தெரிவுக்குழுவொன்றை அமைப்பதற்கும் சபை நேற்றுமுன்தினம் அனுமதியளித்தது.**

சபாநாயகரால் நியமிக்கப்படும் இக்குழுவானது அதன் முதல் அமர்வுத் திகதியிலிருந்து ஆறுமாதங்களினுள் அல்லது நாடாளுமன்றத்தினால் மேலதிகமாக வழங்கப்படுகின்ற வேறுகால எல்லையினுள் அதன் அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். 25 உறுப்பினர்கள் இந்தக் குழுவில் இடம்பெறுவர்.
இலங்கையின் பாடசாலைமுறைமையில் இனத்தையோ அல்லது மதத்தையோ அடிப்படையாகக்கொள்ளாது வகைப்படுத்துவது, உட்பட 19 விடயப் பரப்புகளில் ஆராய்ந்து இக்குழு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.
கண்டி திகன பகுதியில் இடம்பெற்ற இனவாத சம்பவங்களைத்தொடர்ந்து சபா நாயகர் கரு ஜயசூரிய தலைமையில் சகல மத, இன தலைவர்களின் பங்குபற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட மாநாட்டில் நியமிக்கப்பட்ட குழுவினரால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.
தேசிய ஒற்றுமையைப் பாதிக்கும் கருத்துக்கள் பரவுவதைத் தடுத்தல், கடந்த கால இன முரண்பாடுகள் எதிர்கால சந்ததியினரைச் சென்றடைவதைத் தடுத்தல், நல்லிணக்கத்துக்கு அனைத்து தரப்பினரதும் பங்களிப்பு, சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கு நாடாளுமன்றக் குழு, மேலதிக வகுப்புகளை ஞாயிறு காலை நடத்துவதற்கு தடை, சமயவழிபாட்டுத்தளங்களை அமைக்கும்போது கவனஞ்செலுத்தவேண்டிய சட்டஏற்பாடுகள், தேசிய ஒற்றுமையை சீர்குலைக்கும் செய்திகளுக்கு தடை, தேசிய மொழிக்கொள்கை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு, இன உறவுகள் சபை உருவாக்கம், பொலிஸ் கட்டளைச்சட்டத்தில் மாற்றம் போன்ற விடயங்களில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு கவனஞ் செலுத்தி அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

கேலிச்சித்திரம்




## ஞானசாரதேரரின் காவியை களைய உரிமையில்லை!

பொதுபலசேனா

ஞானசாரதேரரின் காவி உடையைக் களைய சிறை அதிகாரிகளுக்கு உரிமையில்லை. புத்த தர்மத்தின் படி தனது காவி உடையைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு பிக்குவுக்கு உரிமையுண்டு எனப் பொது பல சேனா அமைப்பின் ஒருங்கி ணைப்பாளர் விதாரனந்தே தேரர் தெரிவித்தார். அந்த வகையில், சிறை வாசத்தின்போது தனது உடையைத் தக்க வைத்துக்கொள்ளப் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரருக்கும் உரிமையுண்டு. எனினும் ஞானசார தேரரைத் திட்டமிட்டே பழிதீர்த்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் ஞானசார தேரருக்குக் கடுமையான உழைப்புடன் கூடிய 6 வருடங்களில் அனுபவிக்கும் படியாக 19 வருட காலச் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.

தொல்பொருள் வேறு சமயம் வேறு;

# அனுமதியின்றி சிலைகள் வைத்து இனமோதல்களை ஏற்படுத்த வேண்டாம்

அமைச்சர் மனோகணேசன் பணிப்புரை

தொல்பொருள் வேறு; சமயம் வேறு: அனுமதியின்றி சிலைகள் வைத்து இனமோதல்களை ஏற்படுத்த வேண்டாம் என்று தொல்பொருள் பணிப்பாளர் நாயகம், பிரதிப்பொலிஸ்மாதிபர், ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு மனோ கணேசன் நேற்று பணிப்புரை விடுத்துள்ளார்.
முல்லைத்தீவு குமுழமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைப் பகுதியில் புத்தர் சிலையை வைத்து விகாரை அமைக்கும் முயற்சியில் தேரர் தலைமையிலான குழு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாக இடம்பெற்ற பதற்ற நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாவட்ட செயலர், பிரதேச செயலர், அந்தப்பகுதியை உள்ளடக்கும் பிரதேச சபைத்தலைவர் ஆகியோரின் எழுத்து மூலமான அனுமதியின்றி எந்த ஒரு மதத்தலத்தையும் கட்டுவிக்கவோ அல்லது சிலைகளை அமைக்கவோ கண்டிப்பாக அனுமதிக்க வேண்டாம்.
இது தொடர்பில் அனுமதி வழங்க வேண்டாம் என முல்லைத்தீவு, கிளிநொச்சிப்பிராந்தியத்துக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மாஅதிபர் மகிந்த குணரத்ன, ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எம். ரத்னாயக்க ஆகியோருக்க அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.
தொல்பொருள்திணைக்களப்பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் மன்டாவலவையும் தொடர்புகொண்டு இதுபற்றிக் கூறினேன்.
இந்தத் தேரரின் நோக்கத்தைத் தடுத்து நிறுத்திய அந்தப்பிரதேசத்தைச்சார்ந்த தமிழ் இளைஞர்களும், சட்டம் ஒழுங்கைப்பாதுகாத்த பொலிஸாரும் மிகவும் பொறுப்புடன் நடந்து கொண்டுள்ளார்கள். தொல்பொருள் திணைக்களச் செயற்பாடுகள் குறிப்பிட்ட மாவட்ட செயலாளருடன் தொடர்புகொண்டு அவரது ஒத்துழைப்புடன் நடைபெற வேண்டும்.
எந்த ஒரு சமயத் தலைவர்களையும் இதில் தொடர்புபடுத்தி, எனது பொறுப்பில் உள்ள தேசிய இன நல்லிணக்கத்தை குழப்பிட வேண்டாம்.
தொல்பொருள் வேறு, சமயம் வேறு, என்பதைத் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மனதில் கொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கில் உள்ள தொல்பொருள் தலங்கள் கட்டாயமாக சிங்களபௌத்தபுராதனசின்னங்களாகவே இருக்க வேண்டும் என்ற தேவைப்பாடு இல்லை. இன்று தொல்பொருள் திணைக்களம் ஒரு இன மத ஆக்கிரமிப்பு நிறுவனமாகத் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது - என்றார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# காங்கேசன்துறைமுகத்தின் விரிவாக்கத்தையும் விரைவுபடுத்துங்கள்

வடக்கில் உள்ள பெரும் வானூர்தித் தளமான பலாலி வானூர்தித் தளத்தை விரிவாக்கி எதிர்வரும் மார்கழி மாதம் அங்கிருந்து தென்னிந்தியாவுக்கு வானூர்திச் சேவையை வழங்குவதற்கான பணிகள் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன. எதிர்வரும் மார்கழி மாதத்துக்குள் முதலாவது வானூர்திச்சேவை பலாலியில் இருந்து தொடங்கப்படும் என்று எதிர்வுகூறப்படுகின்றது. அவ்வாறு நடப்பது மகிழ்ச்சிகரமானது. வரவேற்கத்தக்கது.

வான் பறப்புப் பாதையில் உள்ள சிறிய சிக்கல்கள் தீர்க்கப்பட்டதும் பயணத்தைத் தொடங்குவதற்கான அனைத்துப்பணிகளும் முழுமையடைந்துவிடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சிக்கலைத் தீர்ப்பதில் இந்திய மற்றும் இலங்கை அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பணிகள் அனைத்தும் முடிந்து மார்கழியில் வானூர்தி நிலையம் இயங்கத் தொடங்கும்போது யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கின் பொருளாதாரத்தில் அது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ம் எதிர்பார்க்கலாம்.

பயணிகள் சேவைகள் மட்டுமின்றி பொருள்கள் சேவைகளும் இந்த வானூர்தித் தளத்தின் ஊடாக இடம்பெறும் என்பதை எதிர்பார்க்கலாம். இது வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பாக அமைவதுடன் யாழ்ப்பாண உற்பத்திகளுக்குச்சிறிய ஏற்றுமதி வாய்ப்பையும் கொடுக்கக்கூடியது.

பலாலி வானூர்தித் தளத்தைப் போன்றே அல்லது அதிலும் கூடுதலாக வடக்குக்குப் பயன்தரத் தக்கது காங்கேசன் துறைமுகம். பொருள்களை ஏற்றி இறக்கக்கூடிய வகையில் அந்தத்துறைமுகத்தை விரிவாக்கம் செய்வது அவசியமானது என்பது உணரப்பட்ட ஒன்று. அதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு நடந்தேறி வருகின்றன. மூன்று கட்டங்களில் காங்கேசன் துறைமுகத்தின் உருவாக்கப் பணிகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரையில் அந்தப் பணிகள் முழுமைப்படுத்தப்பட வில்லை.

வானூர்தித்தளத்தைப் போலவே காங்கேசன்துறைமுகத்தையும் மறுசீரமைத்து விரிவாக்கம் செய்து போக்குவரத்துக்கு அனுமதிப்பது அவசரத் தேவை. வடக்கின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது அது.


இலங்கையில் தற்போது பணவீக்கம் அதிகமாக உள்ள மாவட்டங்களில் ஒன்று யாழ்ப்பாணம். ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க இங்கு பொருள்களின் விலைகள் அதிகமாக இருக்கின்றன. இங்கு துறைமுகம் ஒன்று இல்லாதமையும் இதற்கொரு காரணம்.

துறைமுகம் ஒன்று இருக்கும்போது பொருள்களை நேரடியாகவே அதன் ஊடாகத் தருவித்துக்கொள்ளவும் ஏற்றுமதி செய்துகொள்ளவும் முடியும். இது வர்த்தக விரிவாக்கத்துக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். துறைமுக நகரங்கள் உலகெங்கும் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளமை கண்கூடு. எனவே போருக்குப் பின்னரான யாழ்ப்பாணத்தினதும், வடக்கினதும் வளர்ச்சிக்கு துறைமுகம் மிக முக்கியமானது. அதன் அபிவிருத்தி மற்றும் கட்டுமானத்தின் மீதும் அவசரமான, அவசியமான அக்கறை செலுத்தப்படவேண்டும்.

வடக்கு அபிவிருத்தி மீது அக்கறை காட்டுவதாகச் சொல்லும் கொழும்பு அரசின் தலைவர்கள் இது விடயத்திலும் உடனடி அக்கறை செலுத்த வேண்டும். வடக்கில் மீன்பிடித் துறைகளை மட்டுமன்றி ஒரு துறைமுகத்தையும் விரிவாக்கம் செய்வதன் அவசியத்தை பொருளாதார வல்லுநர்கள் அனைவருமே வலியுறுத்திவரும் நிலையில் அடுத்த வருடத்துக்கிடையிலாவது காங்கேசன் துறை முகத்தை முழுமையாக விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதாவது துறைமுகத்தின் விரிவாக்க மற்றும் உருவாக்கப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் அக்கறை காட்டவேண்டும். தமிழ்த் தலைவர்களும் அதற்கு அதிகளவில் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# மக்கள் மனமறிந்து செயற்படுவார்களா தமிழ் அரசியல்வாதிகள்?

இந்துமதி



தமக்கு வாக்களித்துத் தம்மைப் பதவியில் அமர்த்திய மக்களது அபிலாசைகள் குறித்துத் தமிழ் அரசியல்வாதிகள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தமிழ் மக்கள் போதும் போதும் என்று கூறும் அளவுக்குத் துன்பங்களை அனுபவித்து விட்டனர். இன்னமும் வேதனைகளுக்கு மத்தியில்தான் அவர்களது அவல வாழ்வு தொடருகின்றது. தமிழ் அரசியல்வாதிகள் தமது துயரங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையை அவர்கள் இன்னமும் இழந்துவிடவில்லை.

### தமிழ் மக்களது நம்பிக்கையை தமிழ் அரசியல்வாதிகள் காப்பாற்றுவார்களா?

இந்த நம்பிக்கைதான் அவர்களை வாழ வைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் அவர்கள் நம்பியிருக்கின்ற அரசியல்வாதிகள் அவர்களது நம்பிக்கையைக் காப்பாற்றுவார்களா? என்பது தான் இன்றுள்ள முக்கிய வினாவாகும்.

தமிழ் அரசியல்வாதிகளால் தமிழர் அரசியல் குழம்பிப் போய்க் காணப்படுகின்றது. இதன் காரணமாக மக்களும் குழப்பத்தில் ஆழ்ந்து கிடக்கின்ற னர். எவர் சொல்வது சரி?.எவர் பொய் சொல்கிறார்? என்பதை அனுமானிப்பதில் அவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் பெரிதும் நம்பியிருந்த வடக்கு மாகாண சபை அவர்களை முற்றிலும் ஏமாற்றிவிட்டது. குறிப்பாக அதன் முதலமைச்சர் முற்றாகவே ஏமாற்றிவிட்டார். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் என்ற வகையில் அவர் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை முற்றாகவே தகர்ந்து விட்டது. முக்கியமான சபை அமர்வைப் புறக்கணித்து விட்டு திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர் அதற்குக் கூறிய வியாக்கியானம் விசித்திரமானது. திருமணம் வாழ்வில் ஒருமுறைதான் நிகழக் கூடியது. ஆனால் மாகாண சபைக் கூட்டம் மாதாந்தம் நடக்கக் கூடியதென பொறுப்பற்ற விதத்தில் கூறிய அவர் போன்ற வேறொருவரைக் காண்பது அரிதான விடயம்.

> “தமிழ் அரசியல்வாதிகள் சிலரால் தமிழ் மக்கள் பேரவை தடம்புரண்டு செல்வதைக் காணமுடிகின்றது. பேரவையில் அரசியலுக்கு இடமில்லை யென ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் அரசியல்வாதிகளின் வழிநடத்தலின் கீழ் பேரவையின் செயற்பாடுகள் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தமது அரசியல் தேவைகளுக்காகப் பேரவையைப் பயன்படுத்தி வருகின்றார். கூட்டமைப்புக்கு விரோதமானவர்கள் அங்கு தஞ்சமடைந்திருப்பதையும் காண முடிகின்றது.”

### சர்ச்சைகளுக்குப் பெயர்போனவர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் சர்ச்சைகளுக்குப் பெயர் போனவர். நாட்டின் மிகச் சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவரான அவர் சிலவேளைகளில் தம்மை மறந்து சில கருத்துக்களைக் கூறிச் சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றார். காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் சமஷ்டி தமிழருக்குத் தேவையில்லை எனக் கூறியதாகத் தெரிவித்துக் கண்டனங்கள் எழுந்துள்ளன. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் இதற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. ஆனால் தாம் சமஷ்டி தேவையில்லையென ஒருபோதும் கூறவில்லையெனவும், சமஷ்டி என்ற பெயர்ப் பலகை தான் தேவையில்லையெனக் கூறியதாகவும் சுமந்திரன் புதிய விளக்கமொன்றை அளித்திருக்கிறார். ஆனால், இது விடயத்தில் சுமந்திரனின் வியாக்கியானம் எடுபடுமா? என்பது சந்தேகத்துக்கு இடமான தொன்று. தமிழ் அரசியல்வாதிகள் இது போன்ற தேவையில்லாத சர்ச்சைகளை ஏற்படுத்துவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

தமிழ் அரசியல்வாதிகள் சிலரால் தமிழ் மக்கள் பேரவை தடம்புரண்டு செல்வதைக் காணமுடிகின்றது. பேரவையில் அரசியலுக்கு இடமில்லையென ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் அரசியல்வாதிகளின் வழிநடத்தலின் கீழேயே பேரவையின் செயற்பாடுகள் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தமது அரசியல் தேவைகளுக்காகப் பேரவையைப் பயன்படுத்தி வருகின்றார். கூட்டமைப்புக்கு விரோதமானவர்கள் அங்கு தஞ்சமடைந்திருப்பதையும் காண முடிகின்றது. இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது தமிழ் மக்கள் பேரவையையும் ஓர் அரசியல் கட்சியாகவே பார்க்க முடிகின்றது. இவர்கள் மக்களை ஏன் இவ்வாறு ஏமாற்றுகின்றார்கள் என்பது புரிய வில்லை.

### பளையில் காற்றாலை அமைத்ததில் முறைகேடுகள் இடம்பெற்றனவா?

முன்னாள் மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன், முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் தமது சொத்து விவரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பளையில் காற்றாலை அமைக்கப்பட்டதில் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறியே இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. ஆனால் முதலமைச்சர் தரப்பிலிருந்து இதற்கான ஆக்கபூர்வமான பதில் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. அதுமட்டுமல்லாது காற்றாலைக்கு அனுமதி வழங்கிய வடக்கு மாகாண சபைக்குப் பெரும் நிதி இழப்பீடு ஏற்பட்டதாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது தொடர்பாக முதலமைச்சர் அலட்சியமாகப் பதிலளித்துள்ளார். பளைக் காற்றாலையால் மாகாண சபைக்குக் கிடைத்தது கொடையே எனவும், நிதியிழப்பு ஏதுமில்லையெனவும் அவர் தெரிவித்ததை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரகாரம் மாகாண சபைக்கு நிதியிழப்பு ஏற்பட்டது உண்மையானால் அதற்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகத் திகழவேண்டும். மக்களின் மனமறிந்து செயற்படுகின்ற தன்மையையும் அவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.



# 28 வருடங்களின் பின்னர் இன்று விடுவிக்கப்படவுள்ள மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம்

வதீஸ் வருணன்

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் கல்வியின் பங்கு இன்றியமையாத இன்றைய நவீன உலகில் கல்வி புகட்டும் பல பாடசாலைகள் இன்னனும் பாதுகாப்பு படைகளின் பிடிக்குள் சிக்கியிருக்கும் துன்பகரமானதொரு நிலைமையே இலங்கையின் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளில் காணப்படுகின்றது.

ஏறத்தாழ முப்பது வருட கால அகிம்சைப் போராட்டமும், முப்பதுவருட கால ஆயுதப் போராட்டமும் எமது நாட்டுத் தமிழர்களின் வாழ்க்கையிலும், பண்பாட்டிலும். பெரிய அளவு தாக்கத்தை செலுத்தியிருந்தாலும், கல்வியில் அந்த அளவுக்கு பெரியஅளவிலான தாக்கத்தைச் செலுத்த முடியவில்லை என்பதனை வடக்கு கிழக்கின் தொடர்ச்சியான சிறந்த கல்விப் பெறுபேறுகள் கட்டியம் கூறி நிற்கின்றன.

இந்த வகையிலேயே முப்பது வருட கால ஆயுதப் போராட்டம் தமிழ் மக்களைத் தமது சொந்த இடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேறச் செய்தது மாத்திரமல்லாது, அவர்களுடைய இடங்களில் பாதுகாப்பு படையினரின் முகாம்களுடன் கூடிய உயர் பாதுகாப்பு வலையங்களை உருவாக்கியிருந்தது. இந்த உயர் பாதுகாப்பு வலையங்களுக்குள் மக்களின் நிலங்கள், விவசாய நிலங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்டவை சிக்கிக் கொண்டன.

**தமது யாழ்ப்பாணத்துக்கான அண்மைய பயணத்தின்போது மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயத்தை விடுவிக்க அரச தலைவர் பணிப்புரை**

இந்த நிலையிலேயே அண்மையில் மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உணர்வுபூர்வமான சில கோரிக்கைகளை விடுத்திருந்தார். அவற்றில் முதன்மையானது மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்தின் விடுவிப்பு.

உடனடியாகவே யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி தர்ஷன ஹெட்டியாராச்சியிடம் பாடசாலை விடுவிப்பு தொடர்பில் கேட்டறிந்ததுடன், உடனடியாக இராணுவத் தளபதியை தொலைபேசியில் தொடர்புகொண்டு பாடசாலையை விடுவிப்பதற்கான பணிப்புரையையும் அரச தலைவர் வழங்கியிருந்தார். இன்னமும் இரண்டு வாரங்களில் மயிலிட்டி பாடசாலை விடுவிக்கப்படும் என்றும் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். அதன் தொடர்ச்சியாகவே இன்று மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம் பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டிலிருந்து இன்று விடுவிக்கப்படவுள்ளது.

**மிக நீண்ட வரலாற்றைக்கொண்டது இன்றைய மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலம்**

1818 ஆம் ஆண்டு அமெரிக்க மிஷனரி சபையினைச் சேர்ந்த டானியல் பூவர் என்பவரால் 33 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையை, 1963 இல் அரசு பொறுப்பேற்றுக் கொண்டாலும், தொடர்ந்தும் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரிலேயே 1975 ஆம் ஆண்டுவரை இயங்கி வந்திருந்தது. 1975 ஆம் ஆண்டு தமிழ் அரசியல் தலைவரான தந்தை செல்வா அவர்களினாலேயே இந்தப் பாடசாலைக்கு மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

931 மாணவர்களுடனும் 26 ஆசிரியர்களுடனும் இயங்கி வந்த இந்தப்பாடசாலை 1987 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக வேறு இடத்தில் இயங்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தாலும், பின்னர் அதே ஆண்டின் பிற்பகுதியில் மீண்டும் சொந்த இடத்தில் மீளவும் இயங்கத் தொடங்கியது.

1990 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பமான உள்நாட்டுப் போர் காரணமாக 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி மயிலிட்டி மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்ததன் காரணமான இந்தப் பாடசாலை சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக 123 மாணவர்களுடனும் 12 ஆசிரியர்களுடனும் இயங்கியது.

பின்னர் 1993 ஆம் ஆண்டு இப்பாடசாலை தனது தனித்துவத்தினை இழந்து. மல்லாகம் மகா வித்தியாலயத்துடன் இயங்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. அதன் பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு மோதல்களால் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம் உள்ளிட்ட யாழ்ப்பாணத்தின் பல பாடசாலைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன், அவை கூட்டுப் பாடசாலைகளாகவே தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. 1996 ஆம் ஆண்டுமுதல் தற்போதுவரை சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து இயங்கிவரும் இப்பாடசாலைக்கு தற்போது விடிவு கிடைத்திருக்கின்றது.

மயிலிட்டி கிராமத்தின் ஒரு பகுதி ஏற்கனவே பாதுகாப்பு படையினரால் விடுவிக்கப்பட்டிருந்தும், பாடசாலை பகுதி இதுவரை விடுவிக்கப்படாதிருந்தமை காரணமாக மயிலிட்டியில் மீளக்குடியேறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் சுன்னாகத்திற்கு பிரயாணம் செய்தே தமது கல்வியைத் தொடரவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். தற்போது அவர்களுக்கு தமது சொந்த ஊரிலேயே தமது காலடிக்குள் இருக்கும் பாடசாலையில் தமது கல்வியைத் தொடரக்கூடிய வாய்ப்பு கிட்டியிருக்கிறது.

**விடுவிக்கப்பட்டாலும்உடனடியாக மீள இயங்க வைக்க முடியாத அளவுக்கு நிலவும் வளப்பற்றாக்குறை**

ஆனாலும் இந்தப் பாடசாலையை உடனடியாக மீளவும் இயங்கவைப்பதற்கு தற்போதிருக்கும் முக்கிய சவால், பாடசாலைக்குத் தேவையான வளங்களை உடனடியாக பெற்றுக் கொடுப்பதேயாகும். இதற்குரிய நடவடிக்கைகளை யாழ் மாவட்ட அரச அதிபரும், மீள்குடியேற்ற அமைச்சரும் மேற்கொள்ள வேண்டும். பாடசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியில் அரசின் பங்கு முக்கியமானதாக காணப்படும் அதேவேளை, உள்ளூரிலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் இந்தப்பாடசாலையின் பழைய மாணவர்களுக்கும் சிறியளவேனும் பங்கு இருக்கின்றது என்பது மறுக்கமுடியாத ஒன்று. அதையுணர்ந்து அவர்களும் ஆக்கபூர்வமான பங்களிப்பை இந்தப் பாடசாலைச் சமூகத்திற்கு வழங்கவேண்டும். இதேவேளை காங்கேசன்துறை, மயிலிட்டி மற்றும் பலாலி ஆகிய பிரதேசங்களில் இன்னும் விடுவிக்கப்படாமல் ஆறு பாடசாலைகள் காணப்படுகின்றன. காங்கேசன்துறை மகா வித்தியாலயம், காங்கேசன்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை, மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை, வசாவிளான் சி.வேலுப்பிள்ளை வித்தியாலயம், பலாலி மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம் மற்றும் சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகியனவே வலிகாமம் வடக்கு பிரதேத்தில் இன்றும் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பாடசாலைகளாகும்.

மூன்று தசாப்தகாலப் போருக்கு முகம்கொடுத்த மக்களுக்கு அபிவிருத்தி மிகவும் அத்தியாவசியம். ஆகவே தமது குறுகிய சுய இலாபங்களுக்காக அடையாள அரசியலை மட்டுமே முன்னெடுத்து பிரச்சினைகளை மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிட முயற்சிக்கும் பிரிவினரின் கபடத்தனங்களை இனங்கண்டு, அடையாள அரசியலுடன் இணைந்த அபிவிருத்தியினையும் முன்னெடுக்கத் தேவையான அழுத்தங்களை மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசியல் செயற்பாட்டாளர்களுக்கும் வழங்கவேண்டிய பொறுப்பு தமக்கு இருக்கின்றது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டிய தருணம் இதுதான் என்பதை தமிழ் மக்கள் புரிந்து செயற்பட வேண்டும்.

*(தமிழ்த் தலைவன் கருணாநிதி கட்டுரைத் தொடர் நாளை முதல் தொடர்ந்து வெளிவரும்)*

## ஆசிரியருக்கான கடிதம்

# பழக்கதோசத்தில் இருந்து விடுபட முயல்வோமே!


'டோக்கன் சேவை' பற்றிக் கடந்த வாரச் சூரியகாந்தியில் ஒருவர் எழுதியிருந்தார். 21ஆம் நூற்றாண்டாகியும் யாழ்ப்பாண வாசிகள் பழங்காலத்து நடைமுறையிலேயே மூழ்கிப் போயுள்ளமை அப்பட்டமாகப் புலப்படுகிறது. யாழ்ப்பாணத் தமிழர்கள் மாத்திரமன்றி வடக்குக் கிழக்குத் தமிழர்களில் பெருமளவானோர் போரால் பாதிக்கப்பட்டவர்களே. தொடராகப் போர் ஏற்படுத்திய நெருக்கடிகளும் அதற்கேற்றால்போல், வாழ்க்கையமைத்துக்கொள்ள வேண்டியிருந்த கடப்பாடும் அவர்களைத் தற்காலம் வரை இப்படியாக ஆக்கிவிட்டிருக்கிறது. இதனால் தான் ஏன் இப்போதும் டோக்கன்? இத்தகைய நெருக்கடிகள்? என்று மேற்சென்று எண்ணாதவர்களாக இருப்பதுடன், அதை எந்தவித விமர்சனங்களுக்கும் உட்படுத்தாமல் ஏற்றுக்கொண்டு விடுபவர்களாகவும் இருக்கின்றனர். அரச சேவைகள், செயற்பாடுகள் என்பனவற்றில் இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டாவிட்டாலும் பரவாயில்லை, அவற்றுக்குப் பணிந்து போய் விடுகிறார்கள். நல்ல ஓர் உதாரணத்தை நாள்தோறும் இங்கு காணலாம்.

தனியார் பஸ்கள் பதினைந்து நிமிடங்களுக்கு ஒன்று என்பதாகப் பயணம் செய்கின்றன என்று வைத்தால், இருக்கைகள் நிறைந்த பின்பும் பலர் ஏறி நெரிபட்டுச் செல்கின்றனர். (அவசரமாகப் பயணம் மேற்கொள்ள வேண்டியவர்கள் தவிர) அடுத்த பதினைந்து நிமிடத்தில் தரிப்பிடத்துக்கு வரவிருக்கின்ற பஸ்சில் பயணிக்கலாம் என்கிற எண்ணம் ஒரு சிலருக்கு மாத்திரம் இப்போது ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. எந்த ஓர் அவசர தேவையும் அற்ற தரப்பினர் (அலுவலக வேலை, கல்வித் தரப்பினர், அவசர சந்திப்புக்கள் தவிர்ந்தவர்கள்), மற்றும் நெரிசலில் பயணம் செய்ய முடியாதவர்கள், இருக்கையில் இருந்துதான் கட்டாயமாகப் பயணம் செய்யமுடியும் என்ற நிலையில் இருப்பவர்கள், இருக்கை இல்லாதவிடத்து அதில் ஏறி நெரிபடாமல் அடுத்து வரவிருக்கின்ற பஸ்சில் ஏறிப் பயணம் செய்யலாம். அப்படியாகப் பயணிகள் காத்திருக்கும் சமயம் சேவை விரிவாக்கப்படும். ஆனால், இப்படி நிகழ வில்லை. இருக்கைகள் நிறைந்த பின்பும் பலர் ஏறி நெரிபடுகிறார்கள். இருக்கையில் இருக்கின்றவர்களின் முகங்களைப் பரிதவிப்புடனும், அவர்களின் இருக்கைகளைப் பறிக்கும் நோக்குடனும் பார்க்கிறார்கள். கட்டாயமாக இருக்கையில் இருந்துதான் பயணம் செய்யவேண்டும் என்று எண்ணும் அவசரமற்றவர்கள் அடுத்த பஸ்சுக்காகக் காத்திருப்பதில்லை. இப்படிப் பல விடயங்கள் நம்மவர்களின் பழக்கதோசங்களாக இருக்கின்றன.

ஆரூரன், தெல்லிப்பழை.

# மியன்மாரில் கைதான செய்தியாளர்களுக்கு அமெரிக்கா ஆதரவு

வொஷிங்டன், செப். 6
மியன்மாரின் அரச இரகசியங்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு செய்தியாளர்களுக்கும் அமெரிக்கா ஆதரவு தெரிவித்தது. அமெரிக்காவின் துணை அதிபர் மைக் பென்ஸ், "செய்தியாளர்கள் இருவரும் விடுவிக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.
மியன்மாரின் அரச இரகசியங்களைத் திருடினார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த திங்கட்கிழமை 'ரொயிட்டர்ஸ்' செய்தி நிறுவனத்தின் இரண்டு செய்தியாளர்களுக்கு தலா 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பி டப்பட்டது. அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்று உலகெங்குப் பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை, ஐக்கிய நாடுகள் சபை என்பன ரொயிட்டர்ஸின் செய்தியாளர்கள் இருவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலுவாக முன்வைத்துள்ளன. இந்த நிலையில் அமெரிக்காவின் துணை அதிபர் மைக் பென்ஸ்ம் ரொஹிங்யர்களுக்காகக் குரல்கொடுத்த இரண்டு செய்தியாளர்களும் விடுவி க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.



"ரொஹிங்கிய முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகளை வெளிக்கொண்டுவந்த வாலோனே, கியாவ் சொய் ஊ ஆகிய இருவரையும் பாராட்ட வேண்டும். இன அழிப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய உண்மைகளை வெளியிடுவது அவர்களின் வேலை, இதற்காக அவர்களைச் சிறையில் அடைத்திருக்கக் கூடாது. ஜனநாயகத்தை வலிமைப்படுத்த மதம் மற்றும் ஊடக சுதந்திரம் அவசியமாகும். எனவே, மியான்மர் அரசு அவர்களுக்கு எதிராக பிறப்பித்த கைது உத்தரவைத் திரும்பப் பெற்று அவர்களை விடுதலை செய்ய வேண்டும்" என்று மேலும் தெரிவித்தார் மைக் பென்ஸ். (ம)

# இஸ்ரேலின் ஏவுகணைகளை இடைமறித்து அழித்தோம்

*சிரியா அறிவிப்பு*

டமஸ்கஸ், செப். 6
சிரியாவில் உள்ள ஈரானின் இராணுவத் தளங்களைக் குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணைகளைச் செலுத்தியதுஎன்றும்அவற்றை இடைமறித்து அழித்தோம் என்றும் சிரியா அறிவித்தது.




அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறியதை அடுத்து ஈரானுடன் கடும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. ஈரானைத் தனிமைப்படுத்தும். அந்த நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதிக்கும் நகர்வுகளை அமெரிக்கா வெளிப்படுத்தி வருகிறது. மத்திய கிழக்கில் ஈரானைக் கட்டுப்படுத்த அமெரிக்க கொண்டுள்ள மிகப்பெரும் சக்தி இஸ்ரேல்தான். இதன்படி அமெரிக்காவின் விருப்பம் எதுவோ அதை மத்திய கிழக்கில்நிறைவேற்றிவருகிறது இஸ்ரேல்.
கடந்த சில தினங்களுக்கு முன்னர், 'ஈராக்கில் உள்ள ஈரானின் இராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும்" என்று அறிவித்தது இஸ்ரேல். இந்த நிலையில் சிரியாவில் உள்ள இராணுவ நிலைகளைக் குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது என்றும் அவை தம்மால் தடுத்தழிக்கப்பட்டன என்றும் சிரியா அறிவித்தது.
கடந்த ஒரு வருடத்தில்மட்டும் சுமார் 200 ஏவுகணைகளை சிரியாவை நோக்கி இஸ்ரேல் செலுத்தியுள்ளது என்கின்றன புள்ளி விவரங்கள். (ம)

# அமெ. பாதிரியாரை விடுவிக்க முடியாது

*துருக்கியும் விடாப்பிடி*

இஸ்தான்புல், செப். 6
"அமெரிக்காவின் சட்டவிரோதக் கோரிக்கையை ஏற்று அந்த நாட்டின் பாதிரியாரை விடுவிக்க முடியாது" என்று அறிவித்தது துருக்கி. இந்த விவகாரத்தில் துருக்கியிடம் இருந்து வரும் மூன்றாவது அறிவிப்பு இதுவாகும்.
துருக்கியில் கடந்த 2016ஆம் ஆண்டு இராணுவப் புரட்சிமூலம் ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயற்சிக்கப்பட்டு பின்னர் மக்களின் செல்வாக்குடன் அது முறியடிக்கப்பட்டது: அவ்வாறு இராணுவப் புரட்சிக்குச் சதிசெய்தவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த பாதிரியார் ஒருவரும் கைது செய்யப்பட்டார். அன்ட்ரூ என்ற அந்தப் பாதிரியாரை விடுவிக்க வேண்டும் என்று துருக்கியைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது அமெரிக்கா. துருக்கி மீது வரி அதிகரிப்பு உள்ளிட்ட பல நடவடிக்கைகளையும் அமெரிக்கா முயற்சித்துப் பார்த்துள்ளது. எனினும் எவ்வித பயனும் இல்லை. இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமையும் குறித்த பாதிரியாரை விடுவிக்க வேண்டும் என்று துருக்கியிடம் கோரியது அமெரிக்கா. அமெரிக்காவின் இந்தக் கோரிக்கையை மூன்றாவது தடவையாக நிராகரித்தது துருக்கி. (ம)





# இட்லிப்பில் தாக்குதல்!

டமஸ்கஸ், செப். 6
சிரியாவின் இட்லிப் நகரில் ரஷ்யா தலைமையிலான கூட்டுப் படை கடும் வான் தாக்குதல்களை நடத்தி வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
சிரிய அதிபர் அல் அசாத் பதவி விலக வேண்டும் என்று ஆயுதக் குழுவொன்று வலியுறுத்திப் போராடி வருகிறது. அந்த அமைப்புக்கு எதிராக ரஷ்யா தலைமையில் கூட்டுப் படை போராடி வருகிறது. ஆயுதக் குழுவின் பிடியில் இருந்த பல நகரங்கள் ஒவ்வொன்றாக மீட்கப்பட்டு வருகின்றன. இட்லிப் நகரம் மட்டுமே அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பிடியில் தற்போது எஞ்சியுள்ளது. அந்த நகரைக் கைப்பற்றும் நடவடிக்கையை கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்தது ரஷ்யக் கூட்டுப்படை. அங்கு நேற்றும், நேற்றுமுன்தினமும் கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ரஷ்யக் கூட்டுப் படையின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.
சிரிய - துருக்கி எல்லையில்தான் இட்லிப் அமைந்துள்ளது. கிளர்ச்சியாளர்கள் இட்லிப் வழியாகத் துருக்கிக்குள் ஊடுவலாம் என்றும் கருதப்படுவதால் துருக்கியின் எல்லைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. அதேநேரம் இட்லிப்பைச் சுற்றி யுள்ள ஹமா, ரக்கா, அலெப்போ ஆகிய நகரங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள புரோக்லின் என்னும் பகுதியில் கார்னிவேல் கொண்டாட்டங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. அவை தொடர்பிலான ஒளிப்படங்களைப் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)


# 220 கி.மீ. வேகத்தில் ஜப்பானைத் தாக்கியது கடும் புயல்



டோக்கியோ, செப். 6


மணிக்கு 220 கிலோமீற்றர் வேகத்தில் ஜப்பானில் நேற்று முன்தினம் கடும் புயல்காற்று வீசியது. கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்தப் புயல்காற்று அமைந்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

ஜப்பானின் இசிகாவா பகுதி பெரும் சேதத்துக்கு உள்ளானது. வாகனங்கள் தூக்கி எறியப்பட்டன. படகுகள் குடைசாய்ந்தன. வீடுகளின் மேற்கூரைகள் காற்றில் பறந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின்னிணைப்புத் துண்டிக்க ப்பட்டதால் சுமார் 10 லட்சம் வீடுகள் இருளில் மூழ்கின. சுமார் 240 வானூர்திப் பயணங்கள் கைவிடப்பட்டன. இந்த இடர்களை வெளிப்படுத்தும் படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் ஒளிப்படக்கோர்வையாக வெளியிட்டது. (ம)












# சிரியாவில் இடம்பெறும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தார் ட்ரம்ப்

வொஷிங்டன், செப். 6

சிரியாவின் இட்லிப் நகரில் நடத்தப்பட்டு வரும் வான் தாக்குதல்களுக்குக் கடும் கண்டனம் தெரிவித்தது அமெரிக்கா. இட்லிப்பில் இடம்பெறும் தாக்குதல்களை "மனிதாபிமானமற்ற பொறுப்பற்ற தாக்குதல்கள்" என்று குறிப்பிட்டார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

"சிரியா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் இணைந்து சிரியாவில் இட்லிப் மாகாணத்தில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடத்திவரும் பொறுப்பற்ற தாக்குதலை நிறுத்த வேண்டும். அவர்கள் மனிதாபிமானமற்ற தவறுகளைச் செய்து வருகிறார்கள்" என்று தெரிவித்தார் ட்ரம்ப்.

இட்லிப்பைக் 'குறுகிய' காலத்துக்குள் கைப்பற்ற வேண்டும் என்று ரஷ்யக் கூட்டுப்படை திட்டமிட்டுள்ளது. அதாவது சில நாள்களில் இடைவிடாத தாக்குதல்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல்களில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது. (ம)




# ஒரு ட்ரில்லியன் சொத்து; அமேசான் புதிய அடைவு

வொஷிங்டன், செப். 6

சுமார் ஒரு ட்ரில்லியன் அளவு சொத்து மதிப்பை எட்டிப் புதிய மைல்கல்லைப் பதிவுசெய்தது மிகப்பெரும் வணிக நிறுவனமான அமேசான்.

கடந்த சில ஆண்டுகளில் மிகத் துரித கதியில் வளர்ந்து வருகிறது அமேசான். இந்த நிறுவனம் விரைவில் ஒரு ட்ரில்லியன் சொத்து மதிப்பை எட்டும் என்று கணிக்கப்பட்டது. நேற்று பன்னாட்டுச் சந்தையில் அமேசனின் மதிப்பு எகிறிக்கொண்டே சென்றது. இதையடுத்து ஒருசில நிமிடங்களில் அமேசனின் சொத்துமதிப்பு ஒரு ட்ரில்லியனை எட்டியது. (ம)





# ‘சிக்ஸ் பேக்’ வைத்த நடிகர் சூரி

தமிழ் சினிமாவின் முன்னணி நகைச்சுவை நடிகராக உள்ள சூரியின் நகைச்சுவைக் காட்சிகள் இரசிகர்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளன. அண்மையில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் ‘கடைக்குட்டி சிங்கம்’ படத்தில்கூட சூரியின் நகைச்சுவை பெரிய அளவில் பேசப்பட்டது.

இந்த நிலையில் இயக்குநர் பொன்ராம் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் மற்றும் சூரி இணைந்து ‘சீமராஜா’ என்ற படத்தில் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் ஒருகாட்சியில் சூரி ‘சிக்ஸ்பேக்’ உடற்கட்டமைப்புடன் தோன்றுகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

## ஆசிரியர் என்பவர் எப்படி இருக்க வேண்டும்?

- ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பவர் தான் ஆசிரியர். மாணவர்களின் நிலைக்கு இறங்கி வர அவர்கள் தயாராக இருக்க வேண்டும்.
- மாணவர்களின் முழுக்கவனமும் தன்னிடம் இருக்குமாறு பாடம் கற்பிக்க வேண்டும். மாணவர்களுக்குப் புரியும் விதத்தில் பாடம் கற்பிக்க வேண்டும்.
- எப்போதும் முகத்தில் புன்சிரிப்புடன் வலம் வர வேண்டும். அதுவே மாணவர்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.
- பாட நூல்களுக்கு அப்பாற்பட்டும், அனைத்துப் பொதுவான விடயங்களையும் தெரிந்து வைத்திருக்கவேண்டும். முக்கியமான விடயங்களைத் தினமும் மாணவ சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவராய் இருத்தல் வேண்டும்.
- தனக்குச் செலவிடும் நேரத்தைவிட மாணவர்களுக்கு அதிக நேரம் செலவழிப்பவராக இருக்க வேண்டும்.
- மாணவர்களுக்குக் கல்வியின் மீது உள்ள ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். அவர்களது தனிப்பட்ட திறமையை வெளிக்கொண்டு வந்து, அவர்களது சாதனைக்குத் தூண்டுகோளாக இருக்க வேண்டும்.
- எதில் விருப்பம் உள்ளதோ, அதைக் கண்டறிந்து செயற்படுத்த முயற்சிக்க வேண்டும். மாணவன் படிக்கவில்லை என்றால், அவர்களுக்குப் புரியும் படியாகக் கற்பிக்க வேண்டும்.
- ஒரு விளக்கத்தைக் கொடுக்கும் போது, செய்முறை அடிப்படையில் மாணவர்களுக்கு உணர்த்தினால் படிப்பின் மீது ஆர்வம் அதிகரிக்கும்.
- ஓர் ஆசிரியர், மாணவரின் சுக, துக்கங்களைக் கேட்டு ஆறுதலுடன் இருப்பதும் அவசியம்.
- அனைத்து நற்பழக்கங்களிலும் ஆசிரியர் மாணவர்களுக்கு முன் உதாரணமாக இருந்தால் அவர்களுக்கு நீங்கள் சொல்லவே தேவையில்லை. உங்கள் வழியைத் தானாக அவர்கள் பின்பற்றுவார்கள்.
- ஆக, மொத்தத்தில் ஆசிரியர் என்பவர் அனைவருக்கும் ஒரு படி மேலாக இருக்க வேண்டும். ஆசிரியரின் பணி மகத்தானது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

வாழ்க்கையில் தெளிவு வருவதற்கு நாம் அதிகம் கலங்க வேண்டியிருக்கிறது!!









## இன்றைய நாள்

**மேடம்:** நற்செயல்களால் பேரும் புகழும் தேடி வரும். தொழில் வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி அடையும். ஆதாயம் அதிகரிக்கும். திட்ட மிட்ட பயணத்தில் திடீர் மாறுதல் செய்வீர்கள்.

**இடபம்:** அக்கம் பக்கத்தினருடன் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சராசரி பணவரவு் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் சிரமத்துக்கு ஆளாவர்.

**மிதுனம்:** அன்புக்குரியவர்களிடம் பாராட்டு, பரிசு பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் புதிய வளர்ச்சி உருவாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**கடகம்:** யாரிடமும் போட்டி, பந்தயங்களில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரம் மந்தகதியில் இயங்கும். சேமிப்புப் பணம் திடீர் செலவால் கரையும். பணியாளர்கள் பணிச்சுமையால் சிரமப்படுவர்.

**சிங்கம்:** குடும்பத்தின் எதிர்கால நலன் கருதி பாடுபடுவீர்கள். சமயோசித நடவடிக்கையால் தொழில், வியாபாரத்தில் தடைகளை முறியடிப்பீர்கள். வருமானம் உயரும்.

**கன்னி:** நண்பரின் பாராட்டைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**துலாம்:** நண்பர்களை உதவி கேட்டு அணுகலாம். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவைப் பெறுவர்.

**விருச்சிகம்:** சிலரது பேச்சு சங்கடம் தரலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்புத் தேவைப்படும். இலாபம் அதிகம்.

**தனுசு:** உற்சாக மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும்.

**மகரம்:** தாமதமானாலும் பணியைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் திருப்திகரமாக இருக்கும்.

**கும்பம்:** நம்பகத்தன்மை இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** உங்களிடம் உதவி பெற்றவர் உதாசீனம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் குளறுபடி குறுக்கிடலாம். இலாபம் அதிகரிக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைத் தவிர்க்கவும்.

## நாளை

**07.09.2018**

வெள்ளிக்கிழமை

ஆவணி 22

திதி: துவாதசி கா 5.54 வரை
நட்சத்திரம்: பூசம் மு.ப. 11.42 வரை
சுபநேரம்: 6.04 – 7.34 வரை
ராகுகாலம்: 10.34– 12.04 வரை

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | 3 | | 8 | | 4 | | |
| 5 | 2 | | 4 | 6 | 3 | | 9 | |
| 4 | | | 7 | | 8 | | | 5 |
| 9 | | | | | | | | 7 |
| | | 5 | | | | 3 | | |
| 2 | | | 3 | 5 | 4 | | | 6 |
| | 5 | | 6 | 2 | 1 | | 8 | |
| | | 6 | 8 | | | 5 | | |


நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 4 | 1 | 2 | 3 | 7 | 5 | 6 |
| 3 | 5 | 6 | 4 | 7 | 8 | 1 | 9 | 2 |
| 1 | 7 | 2 | 6 | 9 | 5 | 3 | 8 | 4 |
| 7 | 4 | 3 | 5 | 8 | 2 | 6 | 1 | 9 |
| 5 | 2 | 1 | 7 | 6 | 9 | 8 | 4 | 3 |
| 6 | 9 | 8 | 3 | 1 | 4 | 2 | 7 | 5 |
| 2 | 3 | 5 | 8 | 4 | 7 | 9 | 6 | 1 |
| 4 | 1 | 7 | 9 | 3 | 6 | 5 | 2 | 8 |
| 8 | 6 | 9 | 2 | 5 | 1 | 4 | 3 | 7 |

# வருமுன் காத்தலே சிறந்தது

அது ஒரு அழகிய ஏரி. அந்த ஏரியில் அழகிய ஆமை ஒன்று தனது இரண்டு வாத்து நண்பர்களுடன் வாழ்ந்து வந்தது. தினமும் அந்த இரு வாத்துக்களையும் ஆமை சந்திப்பது வழக்கம்.

ஒருநாள் இரு வாத்துக்களும் கவலையுடன் காணப்பட்டன. இதனைக் கண்ட ஆமை "ஏன் இருவரும் கவலையுடன் இருக்கிறீர்கள்" என்று கேட்டது. "பலகாலமாக இப்பகுதியில் மழை பெய்யாத காரணத்தால் இந்த ஏரி வறண்டு வருகிறது. இன்னும் சில நாள்களில் பின் இங்கு முற்றிலும் நீர் வற்றிவிடும். எனவே நாங்கள் இருவரும் பக்கத்து ஊரில் உள்ள ஏரிக்குச் செல்ல இருக்கிறோம்" என்று வாத்துக்கள் கூறின.



"என்னை இங்கு விட்டுச் செல்வதற்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது. நீர் குறைந்தால் எனக்கோ உயிரே போய்விடும். என்மீது உங்களுக்கு அன்பு இருக்குமானால் என்னையும் அழைத்துச் செல்லுங்கள்" என்றது ஆமை. "உனக்குத்தான் இறக்கைகள் கிடையாதே! உன்னை அழைத்துப் போக எங்களால் எப்படி முடியும்?" என்றது வாத்து. அதற்கு ஆமை "ஓர் உபாயம் செய்யலாம். ஒரு நீண்ட குச்சியை எடுத்து வாருங்கள். நான் நடுவில் என்னுடைய பற்களால் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் இரு பக்கமும் பிடித்து தூக்கிக் கொண்டு பறந்து செல்லுங்கள்" என்றது ஆமை. "அது சரிதான், ஆனால் நாங்கள் உயரப் பறக்கும்போது நீ வாயைத் திறந்தால் கீழே விழுந்து இறந்துவிடுவாய்" என்று வாத்துக்கள் கூறின. "அப்படியானால் பறக்கும்போது நான் வாய் பேசாமல் இருக்கிறேன்" என்று ஆமை கூறியது.

இப்போது இரு வாத்துக்களும் இருபக்கமும் குச்சிகளைப் பிடித்து பறக்க, நடுவில் ஆமை வாயினால் குச்சியைப் பற்றிக்கொண்டது. சிறிது தூரம் பறந்து சென்றன. இப்போது ஆமைக்கு அது என்றும் இல்லாத இன்ப அனுபவம். மகிழ்ச்சியில் அது துள்ளிக்குதிக்க ஆரம்பித்தது. இரு வாத்துக்களும் ஆமையின் குதூகல ஆரவாரத்தைக் கண்ணுற்று பயந்தன. "ஆமையே சிறிது நேரம் அமைதியாய் இரு. இல்லாவிடில் நீ கீழே விழுந்து விடுவாய். உன் சந்தோஷத்தையெல்லாம் நாம் தரையில் தண்ணீருக்குள் இறங்கிய பின் காட்டு" என்றன.

மேலும் சிறிது தூரம் பறக்கும்வரை ஆமை அமைதியாக இருந்தது. இப்போது ஓர் வெளியில் மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. அவர்கள் வாத்துக்கள் வானில் பறப்பதைக் கண்டு ஆரவாரித்தனர். "அதோ பாருங்கள் அந்த வாத்துக்களை. அவை ஒரு குச்சியில் ஏதோ ஒரு பொருளைத் தூக்கிச் செல்கின்றன" என்று கூச்சலிட்டு ஆரவாரம் செய்தனர்.

மனிதர்களின் இந்தக் கூச்சல் ஆமையின் காதுகளில் விழுந்தது. "இந்த மனிதர்கள் ஏன் இப்படிக் கூச்சலிடுகின்றார்கள்?" என்று ஆமை வாய்திறந்து பேசியது. அவ்வளவுதான் அது குச்சியில் பிடித்திருந்த பிடிவிடபடவே அது கீழ்நோக்கி விழத்தொடங்கியது.

ஐயோ பாவம் ஆமை என்று வாத்துக்கள் கத்தவும் ஆமை கீழே ஒரு பாறையில் விழுந்து உடல் சிதறவும் நேரம் சரியாக இருந்தது.

வருமுன் காக்க வேண்டும். அதேவேளை, சமயோசித புத்தியுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

# மூட நம்பிக்கைகள்



அறிவியல் மிகுந்த வளர்ச்சியடைந்தமையால் எதனையும் கூர்ந்து நோக்கி காரணம் காண முயலும் இந்த நாள்களிலும் உலகெங்கும் பலவகைப்பட்ட மூடநம்பிக்கைகள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த மூடநம்பிக்கை கள் அனேகமாக எல்லாநாடுகளிலும் இருக்கின்றன. ஆனால் நாகரீகம் வளர்ச்சியடைந்த நாடுகளில் எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்றன; அவ்வளவுதான்.

ஆரம்பத்தில் மனிதன் கண்ணைப் பறிக்கும் மின்னலைக்கண்டு மருண்டான். இடியோசையைக் கேட்டுக் கலங்கினான். பெருமழையை அனுபவித்துப் பயம் கொண்டான். பெருவெள்ளம் பெருக்கெடுக்க அச்சமடைந்தான். இவ்வாறு காரணங்கண்டு தெளிய முடியாமல் அச்சங்காரணமாக பலப்பல எண்ணங்கள் மனிதன் மனதில் பதியத்தொடங்கி, காலப்போக்கில் அவை மூடநம்பிக்கைகளாக வளரத்தொடங்கின. எனவே மூடநம்பிக்கைகள் மனிதன் மனதில் வளர அடிப்படைக் காரணம் அச்சமும் சிந்தனைத் திறனின்மையுமேயாகும்.

இன்று தமிழரிடையே காணப்படும் மூடநம்பிக்கைகள் பல. சகுனம் பார்த்தல், சாத்திரம் கேட்டல், போலித்துறவிகளிடம் ஏமாறுதல், பேய் பிசாசுகளுக்கு அஞ்சுதல், செய்வினை சூனியத்துக்கு நடுங்குதல், பலியிடல், மனிதருள் ஒரு பகுதியினரைத் தீண்டத்தகாதவரென ஒதுக்கல் என இப்படி பலவகையாக வகைப்படுத்தலாம். இன்றும் பூனையும் சாரையும் குறுக்காதல் ஒற்றைப் பிராமணனும் இரட்டைச் சூத்திரனும் எதிர்ப்படுதல் முதலியவை தீச்சகுனங்களாக நிரைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு குழந்தை பிறந்த பொழுது அதன் தாய் தந்தையர் நோய் காரணமாகவோ பிற காரணங்களாலோ இறந்துவிட்டால் அது தன் தாயைத் தந்தையைத் தின்றுவிட்டதென்று சமூகம் திட்டுவதும் ஒரு வகை மூடநம்பிக்கையே. இவ்வகையான மூடநம்பிக்கைகள் செவிவழியாகப் பரப்பப்பட்டு மக்கள் மனதில் நிரந்தரமானதோர் இடத்தைப் பெற்றுவிட்டன. சோதிடமென்னும் அறிவுத் துறையின் அரிச்சுவடிதானும் தெரியாதவர்களும், கைரேகை நிபுணர்களும், மரத்தடிச் சோதிடர்களும் அவ்வகையினராய் பிறரும் பாமரமக்களின் அறியாமையைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பிழைக்கின்றனர். மக்களும் தங்கள் எதிர்காலம் பற்றி அவர்கள் கூறவல்லவர்கள் என்ற மூடநம்பிக்கை கொண்டு தங்கள் பொருள்கள், பண்டங்களை வீணே அழிக்கின்றன.

வீடுகளிலே காகங்கள் கீழே பார்த்தும் மேலே நோக்கியும் தலை வளைத்துக் கத்தும்போதும், அவற்றுக்கு ஒவ்வொரு பொருள் கற்பித்து மயங்குவது நாம் சாதாரணமாகக் காணக்கூடியதொன்று. வீட்டுச் சுவர்களிலும் கூரைகளிலும் உள்ள பல்லி சத்தஞ் செய்யும் போது சத்தம் வந்த திசையைக் கணித்து பலன்காணும் வழக்கமும் உண்டு. காகமும் பல்லியும் மனிதனது எதிர்கால சுகதுக்கங்களை கூறவல்லனவென நம்புவதைப்போன்ற அறிவீனம் நகைப்புக்கிடமானது. தொற்றுநோய்கள் தோன்றிப் பரவினால் மருத்துவர்களின் வழிகாட்டலுக்கமைந்து நடப்பதே அவற்றைக் கட்டுப்படுத்தும் சிறந்த வழி. அதனை விடுத்து அந்த நோய்கள் தெய்வத்தின் சீற்றத்தால் உண்டாயின என நம்பி "குளிர்த்தி" செய்தலும் பலியிடலும் மனிதனின் பகுத்தறிவை எள்ளிநகையாடும் செயல்கள்.

இன்னும் இன்னோரன்ன அறியாமையால் மனிதனிடம் அமைந்திருக்கும் மூடநம்பிக்கைகளைக் கவி பாரதியாரும் :

*நெஞ்சு பொறுக்குதில்லையே- இந்த*
*நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்*
*அஞ்சியஞ்சிச் சாவார்- இவர்*
*அஞ்சாத பொருளில்லை அவனியிலே.*

*வஞ்சனைப் பேய்களென்பார்- இந்த*
*மரத்திலென்பார் அந்தக் குளத்தி லென்பார்*
*துஞ்சுது முகட்டிலென்பார்- மிகத்*
*துயர்ப்படுவார் எண்ணிப்பயப்படுவார்*

என்று பலவாறு மூடநம்பிக்கைகளைச் சாடிப் பாடியுள்ளார்.

# வர்ணம் தீட்டுவோம்



## வாழ்க்கைக்கு சில ஆலோசனைகள்

- தோட்டத்திலுள்ள மலர்களை எண்ணுங்கள். பழுத்து விழுந்துவிட்ட சருகுகளைப் பார்த்துக் கொண்டிருக்காதீர்கள்.
- இரவில் காணப்படும் நட்சத்திரங்களிடம் கவனத்தைச் செலுத்துங்கள். இருளைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்காதீர்கள்.
- வாழ்க்கையின் புன்சிரிப்புக்களே நினைவில் இருக்கட்டும். கண்ணீர்த் துளிகளைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்.
- மகிழ்ச்சியே வாழ்க்கையின் பயணத்துக்கு வழிகாட்டட்டும். வாழ்க்கையை ஆண்டுகளால் எண்ணிப் பார்க்காதீர்கள். நண்பர்கள் செய்யும் நல்ல காரியங்களால் எண்ணிப் பாருங்கள்.

# உயிர் வாழ்தல் சமனிலையைச் சுரண்டும் ஆபத்திலிருந்து மீளப் பணி செய்வோம்

தனுஸ்ரன்



**மாற்றம் வேண்டும்**

வடக்கு மாகாணத்தில் புகையிலைப் பயிர்ச் செய்கை நிறுத்தப்பட வேண்டும். அதன்வழி எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நல்ல சமூகக் கட்டமைவை நாம் கண்டுகொள்ள முயற்சிக்க வேண்டும்.
போதையற்ற நாட்டை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.
ஆம், மக்களின் வாழ்வாதாரப் பணப் பயிராக புகையிலை காணப்படுகின்ற போதும், அவற்றைப் பயிரிடுகின்ற வழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இங்கு வேறு பயிர்ச் செய்கையை ஆரம்பித்தால் புகையிலை பயிரிடல் மூலம் கிடைக்கின்ற வருமானம் போல மாற்றுப் பயிர்களை பயிரிடுவதன் மூலமும் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
இவ்வருட ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் புத்தூரில் இடம்பெற்ற தேசிய உற்பத்தி வார நிகழ்வில் இது குறித்தான கருத்தாடல்கள் முன்னிலை பெற்றிருந்தன. அங்கு கூடியிருந்த விவசாயிகள் அரச தலைவரிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர். குறிப்பாக வடமாகாணத்தை எடுத்து நோக்கின் ஆயிரத்து 956 விவசாயிகள் 741.615 ஹெக்ட்ரெயர் பரப்பளவுடைய நிலப்பரப்பில் புகையிலைச் செய்கையை தற்போது மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மாற்றுப் பயிரினங்களின் பயிரிடல் முயற்சி**

யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்த வரையில் புகையிலைக்கு மாற்றீடாக 'கலப்பின மிளகாய்', 'கற்றாழை' போன்ற பயிரினங்கள் கடந்த வருட நடுப்பகுதியில் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது. குறிப்பாக பத்து மாத காலப்பகுதிக்கு தொடர்ச்சியான விளைச்சலைத் தரக்கூடிய 'கலப்பின மிளகாய்' விதை 50 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது. தவிர 36 ஆயிரத்து 370 கற்றாழை கன்றுகள் வழங்கப்பட்டது . மாற்றுப் பயிரினங்களின் பயிரிடல் முயற்சியாக இது அமைந்திருந்தது.
உண்மையில் மூன்று மாதப் பயிர்ச் செய்கையில் ஒரு லட்சம் ரூபா வரையில் வருமான ஈட்டம் பெறக்கூடிய புகையிலை உற்பத்தியை நிறுத்துவது என்பது உடனடியாக சாத்தியமற்ற விடயம். ஆகவே அதற்கு ஏற்ற மாற்றுப் பயிரை தெரிவு செய்து வழங்குவது தொடர்பில் அதீத முயற்சிகள் வேண்டப்படுகிறது.
ஒரு கிலோ மிளகாய் விதையின் விலை பல ஆயிரம் ரூபாக்கள். இங்கு 100 கிராம் மிளகாய் விதையை கால் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடலாம். கற்றாழைக் கன்று ஒன்றின் விலை 60 ரூபா. ஓர் ஏக்கரில் ஆயிரம் கன்றுகளை பயிரிட முடியும். ஒரு வருடத்தில் அதிக விளைச்சலைப் பெறலாம்.
இவை அழகு சாதனப் பொருள், குடிபானம், மருத்துவம் போன்ற தேவைகளுக்கு அதிகம் பயன்கொள்ளப்படுகின்றன. ஆகவே இவற்றின் உற்பத்தி சிறப்பாக அமையும் பட்சத்தில் தென் பகுதிக்கு அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. இந்த முயற்சிகள் தற்போது ஓரளவுக்கு வெற்றியளித்துள்ளது.
இவை தவிர மூன்று வருடத்தில் பயன் தரக் கூடிய 'பேரீச்சை' பயிரிடலை பரீட்சார்த்த முயற்சியாக மேற்கொள்வது குறித்த முன்மொழிவுகள் தொடர்புடையவர்களிடம் அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
அதேபோன்று கடந்த வருடம் மானிய விலையில் விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கு விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. குறிப்பாக ஒரு அந்தர் விதை உருளைக்கிழங்கு அரை மானிய விலை அடிப்படையில் 7 ஆயிரம் ரூபா வீதம், விவசாயி ஒருவருக்கு நான்கு அந்தர் விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது. ஆயிரத்து 400 விவசாயிகள் 94 ஹெக்டெயர் பரப்பளவுடைய நிலப்பகுதியில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டனர். இவ்வாண்டு 2 ஆயிரத்து 816 மெற்றிக் தொன் அறுவடை எதிர்பார்க்கப்படுகின்றது.
'திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார் மடம், அச்சுவேலி, புன்னாலைக் கட்டுவன், ஊரெழு, பண்டதரிப்பு, ஆவராங்கால், நீர்வேலி' ஆகிய பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் உருளைக் கிழங்கு செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அவர்கள் இவ்வாண்டும் மானிய விலையில் விதை உருளை கிழங்கை பெற்று தருமாறு மாவட்ட விவசாயப் பணிமனைக்கு வேண்டுகோள் முன்வைத்துள்ளனர்.

**கருத்து**

கடந்த மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த விவாசாயிகள் தாம் உருளைக்கிழங்கு செய்கையில் ஆர்வமாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.
மேலும், " ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா வரையில் புகையிலையால் இலாபம் ஈட்ட முடிகின்ற போதும் அதேயளவு வருமானத்தை உருளை கிழங்கு செய்கையிலும் பெற்றுக்கொள்ளமுடிகிறது. மானிய விலையில் விதை உருளைகிழங்கு கிடைத்தால் அதிக நன்மைகளை நாம் அனுபவிக்க முடியும். அதேவேளை உருளை கிழங்குக்கான நிரந்தர விலையை அரசு தீர்மானிக்க வேண்டும். அரசு இது குறித்து கரிசனை கொள்ளும் பட்சத்தில் புகையிலைக்கு மாற்றுப் பயிராக உருளைக்கிழங்கை பயிரிடலாம். மாற்றுப் பயிர் தொடர்பில் உரிய தரப்பினர் ஆராய்ந்து விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும" என்றும் தெரிவித்தனர்.
அதேவேளை கோப்பாய் மற்றும் உடுவில் பிரதேச விவசாயிகள் உருளைக் கிழங்கு பயிர் செய்கை தொடர்பில் ஆர்வமாக உள்ளனர் என்று விவசாய அமைப்புகளின் பிரதி நிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இந்த சந்தர்ப்பத்திலே புகையிலைக்கு ஈடான மாற்றுப் ப்யிரை விவசாயிகள் மத்தியில் ஏற்புடையதாக்க மாகாண விவசாய விவசாய அமைச்சு ,மாகாண விவசாயத் திணைக்களம், மாவட்ட விவசாய பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**அமைச்சு மற்றும் திணைக்களம் மேற்கொண்டுள்ள நகர்வு**

மாகாண விவசாய அமைச்சு மற்றும் மாகாண விவசாயத் திணைக்களம் ஆகியன இயன்ற வரையில் மாற்றுப் பயிரை கண்டுகொள்வது தொடர்பில் பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அவை மூன்று அல்லது நான்கு மாதங்களில் புகையிலை போன்று விளைச்சலை தாராவிடினும், வாழ்வாதாரத்துக்கு ஏற்ற விதமாக நீண்ட காலங்களுக்கு விளைச்சலை தரக்கூடிய வகையில் நடவடிக்கைகள் சில முன்னெடுக்கப்பட்டுள்ளன.
மரமுந்திரிகை மற்றும் திராட்சை போன்ற நவீன விவசாய உள்ளீடுகளை பயன்படுத்தி அதிக அறுவடை பெறுகின்ற முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
மரமுந்திரிகைக் கூட்டு தாபனத்தின் வழிகாட்டலில் பரீட்சார்த்த முயற்சியாக 15 பேருக்கான் மர முந்திரிகை மரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் உடுவில் ,கோப்பாய் பிரதேசங்களில் திராட்சை செய்கையை ஊக்குவிக்கும் விதமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**அதிகாரிகளின் நிலைப்பாடு**

உள்ளூர் திராட்சை செய்கையாளர்கள் பாரம்பரிய முறையைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நோய்த்தாக்கம் இலகுவாக ஏற்படுகிறது. அத்துடன் காலநிலை மாற்றத்துக்குத் தயாராக அவர்களின் உற்பத்திகள் அமையவில்லை. உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பழங்களின் சுவை மாற்றமடைந்துள்ளது. அதேவேளை இறக்குமதி செய்யப்படுகின்ற பழங்கள் விதை அற்றதாகவும் சுவையானதாகவும் இருப்பதால் மக்கள் அதிகமாக அவற்றை கொள்வனவு செய்கின்றனர்.
ஆகவே உள்ளூர் உற்பத்தியாளர்கள் நவீன முறைகளை கண்டடைய வேண்டும். உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.
குறிப்பாக இரண்டு பரப்புக்கு குறையாத நிலப்பரப்பில் பச்சை வீட்டு முறையிலான திராட்சைச் செய்கையை மேற்கொள்ளுவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளது.

**பல்லுயிர்ச் சங்கிலி பாதிப்பு**


இந்தநிலையிலே பல விடயங்கள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். ஒரு பகுதியில் புகையிலையை மட்டுமே பயிரிடுவதால் அப்பகுதியின் பல்லுயிரியம் பாதிக்கப்படுகிறது. அந்தந்த பகுதிக்கே உரிய தாவர, உயிரினங்கள் கொண்ட தனித்தன்மை வாய்ந்த சூழலில் இது மாற்றத்தை ஏற்படுத்தி, சுழல் மாற்றத்தையும் அதன் விளைவுகளையும் அதிகப்படுத்துகிறது. இயற்கைச் சமநிலையை சீர்குலைத்து உணவுச் சங்கிலியையும் பாதிக்கிறது.
ஆய்வுத் தகவலடிப்படையிலே புகையிலை பயிரிடப்படாத இடங்களோடு ஒப்பிடுட்டு நோக்குகையில், பன்னிரெண்டு பூஞ்சை வைரஸ் நோய்கள், 29 பூச்சி வகைகளின் தாக்குதல் போன்றவை புகையிலை பயிரிடப்பட்ட இடங்களில் மட்டும் இருப்பதான தகவல் கண்டறியப்பட்டுள்ளது. இவை ஏன்னய உணவுப் பயிர்களில் நோய்களை உண்டாக்கும் காரணிகளாக விளங்குகிறது.

**கிருமிநாசினிகள் மற்றும் உரங்கள்**

புகையிலை பயிர் என்பது எளிதில் பல நோய்களுக்கு ஆளாகக் கூடியது. இதனால் பயிரிடப்பட்ட முதல் மூன்று மாதங்களில் அதிக அளவில் கிருமிநாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன. மண் வகையைப் பொறுத்து ஓர் ஏக்கருக்கு 80 முதல் 200 கிலோ வரை இரசாயன உரங்கள் புகையிலை பயிரின் மீது பயன்படுத்தப்படுகின்றன. விசிறப்படுகின்றன. இந்த உரங்கள் நிலத்தடி நீர், நில மேற்பரப்பு நீரில் கலந்து குடிதண்ணீரை நச்சுத்தன்மையாக்குகிறது.
இரசாயனப் பொருள்கள் குழந்தைகள், பெண்களுக்கு தோல் அரிப்பு, சுவாசக் கோளாறுகள், ஒவ்வாமை, பசியின்மை, தலைவலி போன்ற நோய்களை ஏற்படுத்துகிறது. ஏற்படுத்துமென சுட்டிக்காட்டப்பட்டள்ளது.

**புதிய முயற்சிகளை மேற்கொள்வோம்**

இப்படியாக புகையிலையில் உள்ள ஒவ்வொரு நச்சுப்பொருளும் சமூகத்தை மட்டுமின்றி நாம் ஆரோக்கியமாக உயிர் வாழத் தேவையான சுற்றுச்சூழல் சமநிலையையும் சீர்குலைத்துவிடுகிறது. ஆக, உலகை அதைத்தாண்டி ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தை, அதன் வருங்கால இளம் தலைமுறையை மறைமுகமாக அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்ற புகையிலையை நாம் பயிரிட வேண்டுமா?? சுவை தாண்டி நீண்டு நடை போட்டுச் சிந்திக்க வேண்டிய காரண காரியம். சிந்தித்துச் செயலாற்றுங்கள் மக்காள்.....!



## நல்லூர் கந்தன் 22ஆம் நாள் திருவிழா

### பாபுனைந்து பாடப் பணி!

தேனும் தினைமாவும் தித்திக்கும் மாம்பழமும்
நானுனக்குத் தந்திடுவேன் நல்லூரா - வானுயர்ந்த
கோபுரங்கள் கொண்ட குமரேசா உந்தனுக்கு
பாபுனைந்தே பாடப் பணி!


அலங்காரக் கந்தனே அருள்நல்லூர் முருகனே
வலம்வந்துன் பதியை வணங்கிடுவேன் எந்நாளும்
கலங்காமல் எம்தனையே காத்திடுவாய் கந்தா
நலம்பல தந்திடுவாய் நல்லூர் பெருமானே

அழகா முருகா உனக்கோ முகங்கள் ஆறு
ஆபத்துதவும் சரவணபவமந்திர எழுத்தும் ஆறு
அழகாயமைந்த படைவீடு முனக்கு ஆறு
அமைதி ஆனந்தம் பெற அருள் நல்லூர் போய் ஆறு

வே. இராமர்.




# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04 . 11 . 1952

மறைவு 07 . 08 . 2018

## முருகேசு ஜெயமனோகரன் (அப்பு)

(முன்னாள் நீர்ப்பாசன உத்தியோகத்தர். முன்னாள் ஆட்டித்தாலியா மேற்பார்வையாளர்)

அண்ணா அண்ணா என்கிறது வாய்
அன்பின் தலைவன் என்கிறது மனம்
இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம்
எல்லோர்க்கும் என்றோ ஒரு நாள் சாவுதான்
அம்மாவுடனும், பாலுவுடனும், அப்பாவுடனும்
ஒன்றாகக் கலந்துவிடீர்
ஆண்டவனை வேண்டுகிறோம்
துயருறும் குடும்பத்திற்கும் சகோதர்களுக்கும்
உறவினர்களுக்கும் உற்றார்க்கும்
ஆண்டவன் ஆறுதல் கிடைப்பதாக.

அன்னாரின் இழப்பில் கலந்துகொண்ட அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பரித்தியோலை,
கந்தரோடை.

(cs. 14684) (13,17)

மாறாத்துயரத்துடன்
குலேந்திரன் ஜெயதேவி
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 08 . 1923

மறைவு 04 . 09 . 2018

## திருமதி ஞானலட்சுமி பொன்னம்பலம்

யாழ்ப்பாணம் நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானலட்சுமி பொன்னம்பலம் 04.09.2018 செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற மு.தா. பொன்னம்பலத்தின் (பிரபலவர்த்தகர் - யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரநமசிவாயம், பஞ்சாட்சரம், சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவனேசன் (வூட்சன்ஸ் உரிமையாளர் - யாழ்ப்பாணம்), விஜயலட்சுமி (ஆஸ்திரேலியா), ஸ்ரீஸ்கந்தராஜா (ஆஸ்திரேலியா), கௌரி (ஆஸ்திரேலியா), சந்திரன் (நீர்வேலி), கெங்காதரன் (அமெரிக்கா), கெங்கேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், திலகவதி (நீர்வேலி), ஈழலிங்கம் (ஆஸ்திரேலியா), சாந்தகௌரி (ஆஸ்திரேலியா), தேவராஜா (ஆஸ்திரேலியா), ரகுரஞ்சினி (நீர்வேலி), வாசுகி (அமெரிக்கா), காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீவாணி (கொழும்பு), பார்த்தீபன் (ஆஸ்திரேலியா), மயூரன், செந்தூரன், தனஞ்சயன் (ஆஸ்ரேலியா) ஸ்ரீஜெனனி, அனோஜன், ஆரணி, ஆர்த்தி (ஆஸ்திரேலியா), ஜனுஷியா, ஜஸ்வர்ஜா, ஆனோஜா (நீர்வேலி), ஜெனகன், கௌதமி (அமெரிக்கா) வைஷ்ணவி, ரம்யா (கனடா) ஆகியேரரின் அன்புப் பேர்த்தியும், ஷேஷாந், பிரஹர்ஷன், தான்சியா, ஸ்ரீஷா, றயன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் 09.09.2018 ஞாயிற்றுக்கிழமை (Chappal Ridge Funeral Home, 8 911 Woodbin Ave, Markham Canada வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மாங்கனகிரி"
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

(cs14355)(13,17)

தகவல்:
குடும்பத்தினர்.

# 6ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 29 . 12 . 1939

மறைவு 06 . 09 . 2012

## அமரர் சின்னத்தம்பி தர்மராஜன்

(ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர்)

ஆண்டுகள் ஆறு அகன்றன
ஆறுதல் கொள்ள மனமில்லை
ஆறுமோ எம் வெந்துயர்
நீங்களோ சொர்க்கத்தில் அமர்ந்து விட்டீர்கள்
ஆனால் நாம் சோகமோ ஆறவில்லை அப்பா!
எம் உயர்விற்கு வழிகாட்டி உறுதுணையாய் நின்று
எம்மை எல்லாம் உயர் நிலையடையச் செய்து
வாழ்வை அர்ப்பணித்த எம் பாச தீபமே!
உங்களிற்கு நிகர் இனியார் அப்பா?
தெய்வங்களோடு தெய்வமாக இருந்து
எம்மை வழிநடத்தி ஆசீர்வதியுங்கள் அப்பா!

41/17, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### வேலையாள்கள் தேவை

யாழில் உள்ள சோட்டீஸ் பேக் ஹவுஸ்க்கு சோட்டீஸ் உணவுவகைகள் செய்வதற்கு வேலையாள்கள் தேவை.

**021 222 1775, 076 656 6981**

### வேலையாள்கள் தேவை

தையல் வேலைக்கு வெட்டி தைக்கத் தெரிந்த வேலையாள்கள் தேவை.

**தொடர்பு-075 053 3629**

### மலிவு விற்பனை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ். நல்லூர் அண்ணா கோப்பி கிளையில் விலைக் கழிவுகளுடன் மலிவு விலையில் பொருள்களை பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா கோப்பி (இணுவில்)**

### பந்தல் விற்பனைக்கு

**100 அடி சொக்கட்டான் பந்தல்** மற்றும் **மணவறைகள்** விற்பனைக்குண்டு.

077 367 8019 **இளவாலை**

### வயற்காணியும் தோட்டக்காணியும் விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு, குடத்தனைச் சந்திக்கு அருகில் குடத்தனை வயல், குடத்தனைக் காடு என்னும் நிலப்பரப்பில் 10 ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 956 1525, 021 226 3130**

### இதய அஞ்சலி



யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர்

**இ.பகீரதன்** அவர்களின் பாசமிகு தந்தை

**செல்லத்துரை பிறைசேர் அழகனார் இளமுருகனார்**

அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமைத்துவக் குழுவினரும், பணியாளர்களும், யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம்.**

### 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சிவராசா சிவசேகர்**



தோற்றம்
01.05.1978

மறைவு
06.09.2006

திதி: சதுர்த்தசி

கண்ணிமைத்து விழிக்கவில்லை பன்னிராண்டு ஆண்டுகள்
சென்றுவிட்டதையா ஒரு நொடிப்பொழுதும்
அழியவில்லை உங்கள் அன்பான உள்ளம் எம்மைவிட்டு.

66/8, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு
(முடமாவடி) யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்
**குடும்பத்தினர்.**

### ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் கதிரவேலு கிருபாகரன்**

தோற்றம்
01.09.1963

மறைவு
18.08.2017

திதி: துவாதசி

ஆண்டு ஒன்று நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்புத் தெய்வமே
மாண்டு விடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

### மரண அறிவித்தல்

## பாலசுப்பிரமணியம் பத்மாவதி



பிறப்பு 13.08.1962 இறப்பு 03.09.2018

யாழ். மாவிட்டபுரம் மடத்தடியை பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் பத்மாவதி 03.09.2018 திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்ல தம்பி - இரட்னேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - செல்லம்மா (நுணாவில்) தம்பதியரின் அன்பு மருமகளும், பாலசுப்பிரமணியத்தின் (பாலா - உரிமையாளர் யாழ். மொடேர்ன் சம்பந்தர் கிளினிக்) அன்பு மனைவியும், பிரசாந்த், கோபிகா ஆகியோரின் பாசமிகு தாயும், தர்மராசா (சுவிஸ்), பத்மராணி (சுவிஸ்), தர்மபாலன் (கனடா), வதனி (சுவிஸ்), லதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் சந்தி
சாவகச்சேரி.
(சாவகச்சேரி பொலிஸ்நிலையம் அருகில்)

தகவல்
**கணவர், பிள்ளைகள்**

**077 873 0129**

### INVITATION FOR Expression of Interest for the following Tourism Related concept in the Northern province

### CHIEF MINISTER'S MINISTRY NORTHERN PROVINCE - 2018

The Chief Minister's Ministry now invites Expression Of Interest (EOI) from suitable individual or firms who have the minimum qualifications given below for carrying out the following tourism related plan or concepts in the Northern Province. The firm or Individual is responsible for ensuring the quality and timely delivery of the EOI documents and necessary reports required in the bidding documents.

1. **Tourism Master Plan for the given type of tourism in the Northern Province**
   a. ECO Tourism b. Flower tourism
   c. Agro - tourism d. Tourist village destinations
   e. Island Tourism f. Nature Tourism

**1.1 Required qualifications**

The service provider will be required to have the following

1. Should be citizen of Sri Lanka
2. Should have minimum two years experience in tourism consulting and preparation of tourism development plans
3. Masters' Degree in tourism, marketing and management and any other relevant field from a recognized and reputed institution
4. Experience in working with government agencies / international organizations
5. Local knowledge of the provinces
6. Strong experience of working with a wide range of stakeholders from the public and private sector to generate collective effort

**2. Sustainable Destination Development in the Northern Province**

**2.1 Required qualifications**

The service provider will be required to have the following

1. More than 03 years experience working in tourism consulting and preparation of tourism development plan
2. Strong experience linking local, regional and international tourism market
3. Strong experience of working with a wide range of stakeholders from the public and private sector to generate collective effort.
4. Effective knowledge about the province's culture and heritage, and language skills on the Tamil or Sinhala & English should possessed.

**3. Records intangible heritage of the Northern Province**

**3.1 Required qualifications**

The service provider will be required to have the following

1. Masters' Degree in fine Arts, tourism and any other relevant field from a recognized and reputed institution
2. Extensive experience in producing tourism related documents for publication and documentaries for public sector organizations with the aim of reaching both local and international audience
3. Experience in working with government agencies / international organizations
4. Effective knowledge about the province's culture and heritage, and language skills on the Tamil or Sinhala & English should possessed

1.Interested parties may obtain further information from **the Planning Branch, Chief Minister's Ministry Northern Province, A-9 Road, Kaithady (T.P 021 205 7114)** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 16.00 hrs.

2.A complete set of Bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Chief Minister's Ministry Northern Province, A-9 Road, Kaithady From 7th September 2018 until 28th September 2018 from 09.00 hrs to 15.00 hrs on working days upon payment of a non-refundable fees of Rs.500.00 for each Bids. The method of payment should be by cash.

3.Bids shall be delivered or sent by registered post to the Chairman, Provincial Ministry Procurement Committee, Chief Minister's Ministry, Northern Province, A-9 Road, Kaithady on or before 03.00 hrs on 28th September 2018. Bid number must be written on the left hand upper corner of envelope. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.

4.Bids shall be valid up to 60 days from 28th September 2018 after the deadline for Bid Submission

**Mrs. V. Ketheeswaran.**
Chairman,
Provincial Ministry Procurement Committee,
Chief Minister's Ministry,
Northern Province
06.09.2018

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் முனியாண்டி பொன்னையா

திதி : 06.09.2018



எம் அப்பாவிற்காக...
ஆண்டவனின் மறுபிறவியாய் வந்தீர்கள்
கஷ்ரம் உங்களை ஆட்டும் போது இஷ்ரத்தில்
எங்களை வளர்த்தீர்கள்
உங்கள் உடல் கஷ்ரப்படும் போது எம் மனதிற்கு
புரியவில்லை அப்பா
எம் வாழ்க்கை உங்கள் கண்டிப்பில்
எம் இன்பம் உங்கள் பாசத்தில்
கண் சிமிட்டுவதற்குள் நீங்கினீர்கள் இவ் உலகை விட்டு
அப்பா நீங்கள் எங்கள் நினைவுகளை விட்டு அகலவில்லை
ஆலயங்கள் தோறும் தொண்டுகள் பல புரிந்தீர்களே
அத் தெய்வங்கள் கூட விதியிடம் இருந்து உங்களை
காப்பாற்றவில்லையே அப்பா
தூக்கம் இன்றி ஓய்வின்றி உங்கள் உடலை வருத்தி
எம்மையெல்லாம் வளர்த்து நன்மக்களாய் ஆக்கினீர்களே அப்பா
பொறுக்காத காலன் அவன் உங்கள் நல் உள்ளம் கண்டு
எம்மிடம் இருந்து உங்களைப் பிரித்தானே அப்பா
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகைபூத்த முகம் காண
கலங்கி நிற்கின்றோம் அப்பா
எங்களதும் உங்கள் உயிர்த்துணையாம் எங்கள்
அம்மாவினதும் நினைவும் கனவும் நித்தமும் நீங்கள் தானே அப்பா
எத்தனை பேர் நான் இருக்கின்றேன் என்றாலும்
உங்களை போல் யாராலும் இருக்கமுடியாது அப்பா
மறைந்து போனாலும் என்றும் மறந்து போகாத
அன்பை காட்டி சென்றீர்களே அப்பா
இன்றோடு நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஆண்டு ஒன்று
ஆனதே! ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு கணமும்
உங்களை நினைத்து கண்ணீர் சிந்தி கதறி நிற்கின்றோம் அப்பா
கண்கள் குளமாகின்றன உங்களை நா அப்பா
என்று உச்சரிக்கும் போது
உங்கள் அன்புக்கும் உங்கள் அமைதிக்கும் உங்கள்
கனிவுக்கும் உங்கள் மரியாதைக்கும் உங்கள் பெருமைக்கும்
உங்கள் பிள்ளைகள் நாங்கள் என்றென்றும்
தலை வணங்குகின்றோம்.

அன்னை மடியில் 27.09.1961 — ஆண்டவன் அடியில் 19.08.2017

5ஆம் வட்டாரம்.
வேலணை வடக்கு. வேலணை.

குடும்பத்தினர். 077 845 6716

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com
மக் பிரிண்ட் (MUG) 450/=

மேலும் மேம்படுத்தப்பட்ட
கொஸ்கந்தவல
ஜீவக வாத தைலம்®
• முதுகு வலி
• முழங்கால் வலி
• ஆர்த்தரைட்டிஸ்
• மூட்டு வலி
• தசைப்பிடிப்பு
• நரம்புசார் வலிகள்
Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574

# நெஞ்சம் நெகிழ்ந்து பிரார்த்திக்கின்றோம்



உருவாய் 11 . 08 . 1930

உளதாய் 11 . 09 . 2004

உளதாய

## மனோரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

திதி: ஆவணி அபரபக்கத்துத் துவாதசி
(06.09.2018) வியாழக்கிழமை

ஈன்று எம்மை ஆட்கொண்ட எம் தாயே!
ஆறாத இன்பம் அருளினீர் எப்போதும்
இமைப்பொழுதும் எம்நெஞ்சில் நீங்கா நின்தாளினைப்
போற்றிப் புகழ்ந்து பிரார்த்திக்கின்றோம்.

117, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (CS.14685)(13.17)

மக்கள் - மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

TVEC APPROVED CENTRE




கற்கைநெறி ஆரம்பம்
Sept 10th திகதி முதல்

Pearson BTEC
HND
Graduate by September 2021
TOP-UP YOUR HND TO A WORLD CLASS BRITISH DEGREE

HND IN COMPUTING & SYSTEMS DEVELOPMENT
LEADING TO
BEng (HONS) IN SOFTWARE ENGINEERING
BEng (HONS) IN NETWORK ADMINISTRATION

HND IN BUSINESS MANAGEMENT
LEADING TO
BA (HONS) IN BUSINESS ADMINISTRATION

University Partner LONDON METROPOLITAN UNIVERSITY | Kingston University London

www.esoft.lk
ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
நாளைய உலகை நீங்கள்
வெற்றிகொள்வீர்கள்
என்பதை நாம் நன்கறிவோம்
இரட்டை டிப்ளோமாக்களை இன்று நாம்உருவாக்கியதே அதற்காகத்தான்

உயர்தரத்தின் பின்னர்
சர்வதேசத்தரம் வாய்ந்த இரட்டை டிப்ளோமா

DITEC DIPLOMA IN INFORMATION TECHNOLOGY | DIE DIPLOMA IN ENGLISH

கடந்த வருடம் 35,000 ற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சான்றளிக்கப்பட்ட சர்வதேச கற்கைநெறி

ஏனைய சர்வதேசத்தரம் வாய்ந்த டிப்ளோமாக்கள்
- Diploma in Business Management
- Diploma in Hardware & Networking
- Diploma in Computerized Accounting
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering
- Diploma in Auto CAD
- Diploma in Graphic Designing
- Diploma in Business English
- Diploma in Academic English
- Diploma in Hospitality Management

PEARSON + NVQ சான்றிதழ்களை வழங்கும் ஒரே நிறுவனம்

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna | Hotline : 021 7 572 572
40 Branches Island-wide | Sri Lanka's Largest Private Sector Higher Education Network | www.esoft.lk
18
PEARSON GOLD PARTNER 2014 - 2016
INTERNATIONALLY RECOGNISED

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கம்மா (காந்திமதி) இராசசிங்கம்

மலர்வு : 27.03.1920 உதிர்வு : 31.08.2018

துன்னாலை வடக்கு, வெல்லிங்கன் தோட்டத்தைச் சேர்ந்த திருமதி தங்கம்மா இராசசிங்கம் (காந்திமதி) 31.08.2018 வெள்ளிக்கிழமை கொழும்பு, சொய்சாபுரவில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற செல்லப்பா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லப்பா இராசசிங்கத்தின் மனைவியும், ஜோதிமதி, ஜெயசிங்கம், விஜயசிங்கம், உரூபசிங்கம் காலஞ்சென்ற ஜெகசிங்கம், அபயசிங்கம், பிரபசிங்கம், பகவசிங்கம், உதயசிங்கம், இராஜகீதா ஆகியோரின் தாயும், இராஜலட்சுமி, தேவிகருணாகரி, லோகேஸ்வரி, சிவனருள்தேவி, சத்தியபாமா, தவமலர், சிவசக்தி, சுபத்திரா, குகராஜா ஆகியோரின் மாமியும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2018) வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைகள் கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல் :
மக்கள்.

0112 638 569 (c.12914)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சிவகுரு தர்மகுலராஜா

(ஓய்வு நிலை கல்வி அலுவலகப் பணியாளர் - வலிகாமம் கல்வி வலயம். மருதனார் மடம்)

மண்ணில் 21.04.1953 விண்ணில் 07.08.2018

எமது சிறந்த குடும்பத் தலைவனாகவும் சிறந்த நல்வழி காட்டியாவும் உற்றார் உறவினர். நண்பர்கள் போற்ற வாழ்ந்து 07.08.2018 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த சிவகுரு தர்மகுலராஜா அவர்களின் உயர்ந்த வாழ்க்கை நெறியினை நினைவு கூர்வதுடன் எமது துயர் நிறைந்த அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அன்னாரின் மறைவுச்செய்து கேட்டு நேரிலும் தொலைபேசியூடாகவும் எமக்கு ஆறுதல் சொன்ன அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

களவாவோடை,
ஏழாலை தெற்கு,
ஏழாலை.

குடும்பத்தினர்



## இது புதுசு

பெண்களுக்கான கைப்பை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கார்கள், வான்கள் வாடகைக்கு

கார்கள். வான்கள் நாள். வார அடிப்படையில் சாரதியுடன் அல்லது சாரதி அல்லாமல் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு - 077 8989 691

## Personal and Group classes

தரம் 6 - O/L வரையிலான மாணவர்களுக்கு English, Maths, Science ஆங்கில மொழிமூலம் மற்றும் O/L மாணவர்களுக்கு English Literature தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு - 077 284 7814

## 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 05 . 05 . 1955



மறைவு 10 . 08 . 2018

### அமரர் கந்தையா சின்னத்தம்பி

மாதம் ஒன்று சென்றதுவோ - உம்
அன்புமுகம் காணாமல் நெஞ்சமது நெகிழுதையா
உம்மைப்போல் ஓர் உறவை இனி எப்போது காண்போம் ஐயா! வையக வாழ்வதனை
கணப்பொழுதே முடித்தே ! இன்னலில் ஏக்கத்தில்
எம் மனது அழுந்திட எமைவிட்டு எங்குதான் சென்றீரய்யா!
இவ்வழியே எல்லோர்க்கும் இயற்கையெனும் தோற்றமதில் வாழ்கிறோம் ஐயா.....

கடந்த 10.08.2018 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம் அமரர் கந்தையா சின்னத்தம்பி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (07.09.2018) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் (09.09.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது சகோதரனின் இல்லமான மாவிட்டபுரத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் அத்துடன் மரணச்செய்தி கேட்டவுடன் கைகோர்த்த அனைத்து உறவுகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

071 201 1298

குடும்பத்தினர். க. கந்தசாமி (Tip Top)
பூம்பொழில் அரசடி வீதி, மாவிட்டபுரம்.

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

## யாழ். கலாலயா பயிற்சியகம்



இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியர்,
வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கும் மங்கையர்,
சொந்தமாக தொழில் புரிய விரும்பும் நங்கையர் மற்றும் ஆர்வமுள்ள பெண்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்று விக்கப்படும்.
- கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, ஐசிங்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், Cup Cake உட்பட 6 வகையான Cakes, மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்

இம்முறை A/L ப... ...ற்றிய மாணவிகளுக்கு
மேற்படி பயிற்சிகளின... ...தில் கழிவு வழங்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் ... ...ழ் வழ...கப்படும்.

- பிளவுஸ், சாறி பிளவ... ...ரிதார், மற்றும் ஆடைகள்

பயிற்சிகள் யாவும் பலவருட அ... ...ந்த ...மது ஆசிரியைகளினால்
சிறந்த முறையி... ...ங்கப்படும்!

கிழமை நாள் பிரிவுகள் ஆரம்... 14.09.2018 வெள்ளிக்கிழமை
சனி, ஞாயிறு பிரிவுகள் - ஆரம்... ...-09-2018 ஞாயிற்றுக்கிழமை
...நேரம் ...0மணி

மேலதிக விபரங்களுக்கு : -இயக்குநர்-
நாள்தோறும் காலை 9.30 - மாலை 5.30 வ... ...றில் அறிந்து கொள்ளலாம்.

## அரச...

பால சிறிசேன.

நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற அரச கணக்குகள் தொடர்பான நாடாளுமன்ற குழுவின் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் ஊழல் மோசடியற்றவையாக இருக்கவேண்டும். அவற்றில் பணிபுரிபவர்கள் நேர்வழியில் பயணிக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் ஊழல், மோசடிகள் நடக்கின்றன. அவற்றை தடுப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய கணக்காய்வு ஆணைக்குழு நிறுவப்பட்டது. பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எதிர்காலத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ஊழல், மோசடி உள்ளிட்ட குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவதில் சட்டத்தில் சில குறைபாடுகள் உள்ளன. வழக்கு விசாரணைகள் தாமதமடையும் நிலையும் காணப்படுகின்றது. இது நிவர்த்தி செய்யப்படும்.

கொலை, பாலியல் வன்புணர்வு, போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்குச் சாவுத் தண்டனை விதிக்கவேண்டும் என்ற சட்டம் நடைமுறையில் உள்ளது. தண்டனை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

அரசசொத்து, நிதி என்பவற்றை மோசடியாக பயன்படுத்துபவர்களுக்கு எதிராகவும் சாவுத் தண்டனை விதிக்கப்படவேண்டும். இதற்காகச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு சட்டம் இயற்றப்படுமானால் நான் அரச தலைவர் பதவியிலிருந்து வீடு செல்வதற்குள், ஓரிருவருக்காவது தண்டனையை நிறைவேற்றி விட்டுச் செல்வேன் - என்றார்.

(உ-5)

## வெடிவிபத்தில்...

சிகிச்சை பெற்று வந்த மற்றைய இளைஞனும் நேற்று உயிரிழந்தார். அவரது மனைவி தவறான முடிவு எடுத்து ஆபத்தான நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மாங்குளம் பாலைப் பணி என்ற இடத்தில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த திங்கட்கிழமை நடந்த வெடிவிபத்தில் கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானைச் சேர்ந்த பி.திலீபன் (வயது - 24) என்ற இளைஞர் உயிரிழந்தார். வவுனியாவைச் சேர்ந்த எஸ்.நிதர்சன் (வயது - 25) படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நிதர்சன் நேற்று உயிரிழந்தார். இதேவேளை, கணவன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதை வந்து பார்வையிட்ட கர்பிணியான அவரது மனைவி, கணவனின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதால், தவறான முடிவு எடுத்து உயிர்துறக்க முற்பட்டுள்ளார். உறவினர்களால் அவர் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார். இவர்கள் 8 மாதங்களுக்கு முன்னரே திருமணம் முடித்திருந்தனர்.

(உ-5,110,214)

## குடும்பத்...

திருச் செல்வம் (வயது-57) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கந்தசாமி கோயில் வீதியால் திருச்செல்வம் நடந்து சென்று கொண்டிருந்தபோது, பின்னால் வேகமாக வந்த உந்துருளி அவரை மோதியது. அவர் நிலைகுலைந்து கீழே வீழ்ந்தார். உந்துருளியைச் செலுத்திய இளைஞனும், அவருடன் மோதுண்டு அந்த இடத்தில் விழுந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடனடியாக 1990 இலக்க அவசர நோயாளர் காவு வண்டிச் சேவைக்கு தகவல் வழங்கப்பட்டது. இருவரும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். திருச்செல்வம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இளைஞன் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

(5,110)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெபமணி கிருபைராஜா

(தாதிய உத்தியோகத்தர் - கிறீன் மெமொறியல் வைத்தியசாலை, மானிப்பாய்)



பிறப்பு 20.04.1949 இறப்பு 05.09.2018

அல்வாயைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெபமணி கிருபைராஜா நேற்று (05.09.2018) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசமணி - சின்னத்துரை தம்பதிகளின் அன்பு மகளும் செல்லத்துரை கிருபைராஜாவின் (எழுதுவினைஞர் - ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை) அன்புமிகு மனைவியும் றொஷான் சஞ்ஜீவன் (ஹற்றன் நஷனல் வங்கி, கொகுவல), டெவினா டிலோஜனா (ஆசிரியர் - கிளி / கிளிநொச்சி ம.ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநேசன் சுதர்சன் (ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), உஷானி ஆகியோரின் அன்பு மாமியாரும் ராஜேந்திரன், றஞ்சிதமலர், சற்குணராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கிருபைநாயகம், கிருபைமலர் ஹீல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.09.2018) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று உடுவில் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னாலை வீதி,**
**மானிப்பாய்.** (CS 18406/15/17)

தகவல்:
**செ.கிருபைராஜா (கணவர்)**

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் இராமலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை,
யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சங்கானை வல்லை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் இராமலிங்கம் நேற்று (05.09.2018) புதன்கிழ மை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயும் நடேசலிங்கம்காலஞ்சென்ற விமலராஜா ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களானயோகம்மா, தில்லையம்பலம், மகேஸ்வரி மற்றும் கணேசபிள்ளை, நடராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும் கோபிநாத் -ஜெகதா, ஜெகதீபன் - தனுஜா, பிரகலாதன் - ஜெகவதனா, கலெக்ஷனா, புவிதரன் காலஞ்சென்ற அபிதரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் தரண்ஜா, அபிஷனா, லக்ஸ்மிரா, யஸ்வினி, நிகிர்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2018) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வல்லை வீதி.**
**சங்கானை.**

தகவல்: குடும்பத்தினர்
077 104 9493

## கேள்வி அறிவித்தல் திருத்தம்

**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**
**சபைநிதி வேலைத்திட்டம்.**

05.09.2018 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலில் அனைத்து வேலைகளுக்கும் வேண்டப்படும்தரம்C8எனத்தவறுதலாகஇடம்பெற்றுள்ளது. இதனை C9 என திருத்தி வாசிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை, நகராட்சி மன்றம், சாவகச்சேரி.** 06.09.2018

(IN 7720/15/17)

## வேலையாள்கள் தேவை

சுஜித் என்டப்பிறைசஸ் நிறுவனத்தின் சாவகச்சேரி கிளைக்கு பின்வருவோர் தேவை.

- **விற்பனைப் பிரதிநிதிகள்**
  அடிப்படைச்சம்பளம் 12 000/= உடன் Commission பெறலாம்.
  (50 000/= - 75 000/= வரை பெறலாம்)
- **அலுவலகப் பணியாளர்கள்**

தொடர்பு - 077 9041258, 077 0587 995

(CS 458/15/17)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 17 . 05 . 1940



விண்ணில் 01 . 09 . 2013

**அமரர் சங்கரப்பிள்ளை நாகராஜா (தம்பியண்ணா)**

திதி : துவாதசி


ஆண்டுகள் ஐந்து அகன்றிட்ட வேளை
இன்றென எண்ணிடும் வேளையில்
நெஞ்சம் கனக்கிறதப்பா
நிகழ்வுகள் நினைவில் தெரிகிறதே
உங்களை விட உயர்வேது உலகில்
உங்கள் இனிய நினைவுகளில் எங்கள்
வாழ்க்கைப் பயணமப்பா
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*உங்கள் நினைவில் வாழும்*

**நுணாவில் கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் இராஜேந்திரன் தயாளன்**

பிறப்பு
**17.10.1961**

கடந்த 07.08.2018 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் இராஜேந்திரன் தயாளன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.09.2018) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

**மணியர் பதி லேன்,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.** (AJAI 13738-13.17)

**குடும்பத்தினர்**
**புவனேஸ்வரி - தாயார்**
**(பூபதி ரீச்சர்)**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் திருமதி பிறேமா இந்திரன்

கடந்த (07.08.2018) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி பிறேமா இந்திரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.09.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் நினைவாக நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து "நல்லையா மஹாலில்" (வராஹி அம்மன் கோவில் மண்டபம்) நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**வராஹி அம்மன் கோவிலடி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

## வட மாகாண...

யோகத்தர் சங்கத்தின் உப தலைவர் சிவயோகன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
2016ஆம் ஆண்டு மருத்துவ சேவை நிலை உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் கடமைக் கொடுப்பனவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.
அதற்கான நிதி நடப்பாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டுக்கான நிதி எமக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. எனினும் கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் மருத்துவமனையில் பணியாற்றுபவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றுபவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் மருத்துவமனையில் பணியாற்றுபவர்களுக்கு இன்றுவரை இந்தப் பணம் வழங்கப்படவில்லை. இதனை வழங்க வலியுறுத்தியே இன்று போராட்டத்தில் குதிக்கவுள்ளோம் என்றார். (உ5,8)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா ?
நாம் மீட்டுத் தருகின்றோம்.
நிறஞ்சன் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை,
சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம்,
அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு
ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு
நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே
பணத்தை தந்து வாங்கப்படும்.
நிறஞ்சன் நகை மாடம் சந்தை வீதி, உடுப்பிட்டி.
076 383 6129

DLB
CAR PLUS
சீட்டிழுப்பு 074
சீட்டிழுப்பு திகதி 05.09.2018
வெற்றி இலக்கங்கள்
20 32 44 R
திங்கள் கிழமை
15
வழங்கப்பட்ட மொத்த பரிசு 3, 397, 560/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 05.09.2018
வெற்றி வாரம் 2360
வர்ணம் பச்சை
மீனம்
வெற்றி இலக்கங்கள் 01 40 42 59
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 8, 875, 464/=
2018.09.07 ம் திகதி வெள்ளிக்கிழமை கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3079 திகதி:2018.09.05
புதன்கிழமை
ஊதா
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து
07 43 71 74 Y
போனஸ் இலக்கம் 41
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 40,502,480/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 364
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.09.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,762,950/-
வெற்றி இலக்கங்கள்
20 23 44 59 B
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் திருச்செல்வம்**

***(அப்பன்)***

மீசாலை, ஐயா கடையடி, பொன்னர் ஒழுங்கை யைச் சேர்ந்த சுப்பிரமணியம் திருச்செல்வம் (அப்பன்) நேற்று (05.09.2018) புதன்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 15 பல்கலைகளின்...

மைதானத்தில் நடைபெறவுள்ளதாக, யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் உள்ள 15 பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் விழாவை ஏற்பாடு செய்துள்ளோம். தமிழமுதம் என்ற தலைப்பில் நாமும் நமக்கென்றோர் நலியா கலையுடையோம் எனும் தொனிப்பொருளில் இந்த விழா நடைபெறும் என்றுள்ளது. (5,8)

## ஈழ ஏதிலி...

ளார்.
வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த போது பின்னால் வந்த 'ட்ரக்' மோதியதிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.
மன்னார் பேசாலையைச் சேர்ந்த 25 வயதுடைய மேர்வின் பெர்ணான்டோ என்ற இளைஞரே உயிரழந்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய மலேசியாவைச் சேர்ந்த தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
2012 ஆம் ஆண்டு படகு மூலம் பெர்ணான்டோ ஆஸ்திரேலியா வந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## அரசைக்...

தியில் வைத்து நேற்று இரவு அறைகூவல் விடுத்தார்.
மகிந்த அணியின் பேரணி லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தை நேற்று மாலை சென்றடைந்தது. அங்கு சத்தியாக்கிரகப் போராட்டத்தை திடீரென மகிந்த அணியினர் நடத்தினர். இதன்போது அங்கு உரையாற்றுகையிலேயே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இப்போது நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர். நாட்டை பிளவுபடுத்தும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருகின்றது. நாட்டில் ஜனநாயகம் முற்றாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.
தற்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குக்கூட அரசால் முடியாதுள்ளது. எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் மக்களுடன் ஒன்றிணைந்து இன்று வீதியில் இறங்கி இருப்பது ஆட்சியைக் கவிழ்க்கவே. அதற்கு அனைவரும் ஒன்று சேரவேண்டும்.
கடந்த காலத்தில் பயங்கரவாதத்தை இல்லாது ஒழித்ததால் அதனை எல்லோரும் தற்போது அனுபவிக்கின்றனர். அதனை எண்ணி இன்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். அதன் பிரதிபலிப்பாக ஆட்சியை கவிழ்க்க முடியும் என்றார்.

**கோத்தா**

இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்ததாவது:
கூட்டு எதிர்க் கட்சியினால் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் கொழும்புக்கு வருகை தந்துள்ளனர். இந்த மக்கள் தெரிவிக்கும் கருத்தின்படி நாம் அடுத்த கட்டத் திட்டமிடலை மேற்கொள்வோம்.
இங்கு வருகை தந்துள்ள ஒவ்வொருவரும் மகிந்த ராஜபக்ச மீண்டும் அரச தலைவராக வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். இந்த நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்கவும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பாதாள உலக குழுவினரை இல்லாதொழிக்கவும், ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்பவும் மகிந்த ராஜபக்சவினால் மட்டுமே முடியும் என்பதையே இந்த மக்கள் வெள்ளம் தெரிவிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

**டளஸ் அழகப்பெரும**

இலங்கை வரலாற்றில் ஆர்ப்பாட்டமொன்றுக்காக கொழும்பில் ஒன்று கூடிய பெரிய எண்ணிக்கையிலான மக்கள் கூட்டமே இன்றைய மக்கள் வெள்ளம். தற்பொழுது கொழும்பு நகர் பொது மக்களினால் முற்றுகையி டப்பட்டுள்ளது. கொழும்புக்கு வெளியில் செல்வதாயின் தலைமை அமைச்சர், அரச தலைவர், பொலிஸ் மா அதிபருக்கும் எமது அனுமதி இந்த நேரத்தில் அவசியமாகும் என்று மகிந்த அணியின் அமைப்பாளர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார். (உ5)

## நகையறுத்த...

வவுனியா நெடுங்குளத்தில் அரச விடுதியில் வசிக்கும் குடும்ப தலைவரிடம் இலத்திரனியல் பொருள் ஒன்றை விற்பனை செய்து தருமாறும், அதற்கான பணத்தை மறுநாள் வந்து பெற்றுச் செல்வதாகவும் குறித்த இராணுவ சிப்பாய் பொருளை ஒப்படைத்துவிட்டுச் சென்றுள்ளார்.
நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் வீட்டின் யன்னல் வழியாக உட்புகுந்து குடும்பத்தலைவரின் கழுத்தில் அணிந்திருந்த மூன்று பவுண் சங்கிலியையும், அவரது குழந்தையின் கழுத்தில் இருந்த ஒரு பவுண்சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளார்.
நகை திருட்டு போனதை அறியாமல் தூக்கத்தில் இருந்த குடும்ப தலைவர் விழித்துப் பார்த்தபோது நகை திருட்டு போயுள்ளதை அறிந்துள்ளார் .பின்னர் பொலிஸாருக்கு தெரியபடுத்தியுள்ளார். இராணுவச் சிப்பாயில் குடும்ப தலைவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. வழங்கபட்ட பொருளை விற்பனை செய்து விட்டுவிட்டேன் ஆகவே பணத்தினை வந்து பெற்றுக்கொள்ளுமாறு இராணுவச் சிப்பாள்க்கு தொலைபேசி அழைப்பின் மூலம் கூறியுள்ளார்.
அழைப்பை ஏற்று இராணுவச் சிப்பாய் பணத்தை பெறுவதற்காக காலை வீட்டுக்கு வந்துள்ளார் .
இதன்போது மறைந்திருந்த பொலிஸார் அவரைக் கைது செய்ததுடன் அவரது வீட்டில் சோதனை மேற்கொண்டனர் . சந்தேகநபரின் வீட்டில் இருந்து மூன்று பவுண் சங்கிலி மீட்கபட்டதுடன், ஒரு பவுண்சங்கிலியை விற்பனை செய்துள்ளமை விசாரணையின் போது தெரியவந்தது.
சம்பவம் தொடர்பாக வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகநபர் இன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ7,110)

## சபைக்கு...

நபர் தீர்மான வரைவாக இது நேற்று முன்மொழியப்பட்டது.
தீர்மான வரைவை முன்மொழிந்த நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், நிறைவேற்று அரச தலைவர் முறைமை நீக்கப்படும் என்று பல அரசுகள் கூறியுள்ள போதிலும் அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதை நீக்குவதற்கு ஆட்சிபீடத்திலிருந்தவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.
புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கான பணிகள் தமுடிவடைவதற்கு நீண்டகாலம் செல்லும்நிலை உருவாகியுள்ளதால் இந்தத் திருத்த வரைவை மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்துள்ளது என்றார். (உ5)

## விக்னேஸ்வரனுக்கு...

இடைக்காலத் தடை விதிக்க விடுக்கப்பட்ட கோரிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
வடக்கு மாகாண அமைச்சரவையில் இருந்து தன்னை நீக்கியதை எதிர்த்து டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் நீதிமன்றம் கொடுத்த இடைக்கால உத்தரவை முதலமைச்சர் இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லை. இதனையடுத்து அவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றில் டெனீஸ்வரன் தாக்கல் செய்தார். அந்த வழக்கு நாளை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.
இந்த நிலையில், டெனீஸ்வரனை அமைச்சர் பதவியில் இருந்து தூக்கியதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கை விசாரித்த நீதியரசர்கள் ஆயத்தில் இருந்தவரான நீதியரசர் தெகிதெனிய இந்த வழக்கை விசாரிப்பதற்கு டெனீஸ்வரன் தரப்பு ஆட்சேபனை கிளப்பியது.
தன்னைப் பதவி நீக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கை நிராகரித்த நீதியரசர்கள் ஆயத்தின் உறுப்பினராக இருந்தவர் தெகிதெனிய. அந்த ஆயத்தின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் சென்ற டெனீஸ்வரனுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. புதிய நீதியரசர்கள் ஆயம் ஒன்றின் முன்பாக வழக்கை விசாரிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படியே வழக்குத் தற்போது நடைபெற்று வருகின்றது.
ஆனால், நேற்றையதினம் மற்றைய நீதியரசர்கள் ஆயத்தின் முன்பாக வேறொரு முக்கியமான வழக்கு இருந்ததன் காரணமாக, டெனீஸ்வரன் வழக்கு நீதியரசர் தெகிதெனிய இருந்த ஆயத்தின் முன்பாக விசாரணைக்கு வந்தது. இதனால் ஆட்சேபனை கிளப்பப்பட்டது. இதையடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.
வழக்கை மிகக் குறுகிய காலத்திற்குள் தவணையிடுமாறு மன்றில் கோரிக்கை வைத்தார் முதலமைச்சர் தரப்பு வாதியான சட்டத்தரணி கனகஈஸ்வரன். அதனை ஏற்று எதிர்வரும் 28ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டது
இதற்கிடையில், இந்த வழக்கு முடியும் வரையில், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக இந்த நீதிமன்றின் இடைக்காலக் கட்டளையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிப்பதற்குத் தடை விதிக்குமாறு முதலமைச்சரின் சட்டத்தரணி கோரினார். நீதியரசர்கள் ஆயம் அதனை நிராகரித்தது.
முதலமைச்சருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான அனந்தி சசிதரன், க.சிவநேசன் ஆகியோர் நாளை மன்றில் முன்னிலையாவதற்கான அழைப்பாணைகள் நீதிமன்றால் அனுப்பப்பட்டுள்ளன. (உ5)

## காதலியை....

மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் கடந்த சில மாதங்களாகத் தலைமறைவாகி இருந்தார் எனவும், காதலியைச் சந்திக்க நேற்றைய தினம் வருகை தந்தபோதே கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.
மானிப்பாயில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், தனு ரொக் என்று அழைக்கப்படும் மற்றொரு வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இளைஞனின் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் நிலோயன் தேடப்பட்டு வந்தார். இவ்வளவு நாளும் அவர் தலைமறைவாகியிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஆவாக் குழுவில் இவரது பெயர் லண்டா என்று குறிப்பிடும் பொலிஸார், கொக்குவில் பகுதியிலுள்ள அவரது காதலி வீட்டுக்கு வருகை தந்தபோதே அவரைத் தாம் கைது செய்தனர் என்கின்றனர். அவரைத் தேடத் தொடங்கியதும் முல்லைத்தீவில் தலைமறைவாக இருந்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.
மானிப்பாய் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் இவரை முற்படுத்தினர். எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (உ5,26)

# மின் கம்பத்துடன் மோ. சைக்கிள் மோதி இளைஞர் சாவு

யாழ்ப்பாணம்.செப்.6

மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.



குடவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி காந்தீபன் (வயது-25) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை 5 மணியளவில் துன்னாலையில் இருந்து குடவத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பயணித்தபோது இந்த விபத்து நிகழ்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்து டன் மோதி விபத்துக்குள்ளானார். புலத்த காயங்களுக்கு உள்ளானவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-7-26)

## ஆயிரக்கணக்கில்...

பேரணியாக கொழும்பு நகரின் மத்திய பகுதியான லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்துக்கு வருகை தந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். திடீரென அங்கு அமர்ந்து சத்தியாகிரகப் போராட்டத்திலும் குதித்தனர். இரவு 10 மணி வரை போராட்டம் நடைபெற்றது.

இந்தப் பேரணியில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச உள்பட கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என்று பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

நாடு முழுவதிலுமிருந்து கொழும்புக்கு பேருந்துகளிலும், வாகனங்களிலும் வந்த மகிந்த அணி ஆதரவாளர்கள் கொழும்பு நகரில் விகாரமகாதேவி பூங்கா, கொழும்பு தொழில்நுட்ப கல்லூரிச் சந்தி, கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானம், கொம்பனி தெரு சந்தி மருதானை ஆகிய பகுதிகளில் ஒன்று கூடியதுடன் லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தை நோக்கி பேரணியாக சென்றனர்.

### கொழும்பின் நிலை

கூட்டு எதிர்க்கட்சி நேற்று மக்கள் எழுச்சிப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தமையினால் கொழும்பு மாநகரின் அன்றாட நடவடிக்கைகள் நேற்றுக் காலை முதல் மந்தகதியில் காணப்பட்டன. வழமையான வாகனப் போக்குவரத்தும் குறைவடைந்து காணப்பட்டது. பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகையும் வீழ்ச்சி கண்டிருந்தது. பாடசாலைகளில் ஐம்பது சதவீதத்திற்கும் குறைந்தளவான மாணவர்களே வருகை தந்திருந்தனர்.

கொழும்பு மாநகரிலுள்ள பணியகங்களில் பணியாற்றுபவர்களில் அதிகளவானோர் நேற்று அரைநாளுடன் விடுமுறையில் சென்றுள்ளனர். பி.ப. இரண்டு மணியின் பின்னர் கொழும்பு உள்ளகப் பயணிகள் போக்குவரத்து முற்றாக தேக்கமடைந்தது. முச்சக்கர வண்டிகளும் சேவையில் ஈடுபடவில்லை. இருந்தபோதிலும் நேற்று நான்கரை மணியின் பின்னர் அந்த நிலை மாற்றமைடைந்ததுடன் உள்ளகப் போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் இயங்கியது.

### பாதுகாப்பு நடவடிக்கை

பேரணியினால் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறலாம் என்ற அச்சத்தினால் கொழும்பு மாநகரில் நேற்று சிறப்புப் பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றம், அலரி மாளிகை, அரச தலைவர் மாளிகை உள்ளடங்கலாக பொது இடங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பல பிரதேசங்களிலும் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் நீர்தாரை பிரயோகம் மேற்கொள்ளும் வாகனங்களும் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. வீதித் தடையமைக்கும் வேலிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

### இரகசியம்

பேரணி நடைபெறும் இடம் குறித்த தகவலை கூட்டு எதிர்க்கட்சி இரகசியாகமாகவே பேணி வந்தது. அது குறித்து நேற்று பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னரே ஊடகங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. மேலும் பாடசாலை மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாதென்பதற்காக பிற்பகல் இரண்டு மணியின் பின்னர் பேரணியை ஆரம்பிப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

### ஒன்றுகூடல்

பேரணியில் கலந்துகொள்ள நாடு முழுவதிலிருந்தும் வருகைதந்தவர்கள் கொழும்பு மாநகரின் ஐந்து பிரதான இடங்களில் கூடினர். பொரளைச் சந்தியை அண்மித்த பிரசேம், விகாரமகாதேவி பூங்கா, சுகததாச விளையாட்டரங்கு, பஞ்சிகாவத்தை அண்மித்த பிரதேசம், நவலோக மருத்துவமனையை அண்மித்த பிரதேசங்களில் மக்கள் ஒன்று கூடினர். மருதானை டீன்ஸ் வீதியை அண்மித்த பகுதி உட்பட இன்னும் சில இடங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மக்கள் ஒன்றுகூடியிருந்தனர். மாவட்ட ரீதியில் அவ்வாறான இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தமையினால் அந்தந்த மாவட்டங்களில் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதில் கொண்டு பேரணியை ஆரம்பித்து வைத்தனர். சில இடங்களில் சமய வழிபாடுகளுடன் பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

பஞ்சிகாவத்தையை அண்மித்த பிரதேசத்தில் ஆரப்பிக்கப்பட்ட பேரணி தொழில்நுட்ப சந்தியூடாக புறக்கோட்டையை வந்தடைந்தது. மேலும் அந்தப் பேரணியில் இன்னும் சில குழுக்களும் தொழில்நுட்பச் சந்தியில் இணைந்துகொண்டன.

மருதானையை அண்மித்த பிரதேசத்தில் கூடியவர்கள் டீன்ஸ் வீதியூடாக பயணித்து கொம்பனிவீதியை அடைந்து அதனூடாக லேக்ஹவுஸ் சுற்று வட்டத்தை வந்தடைந்தனர். அந்தப் பேரணி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை தாண்டிச் சேன்றபோது சுதந்திரக் கட்சிக்கு எதிரான கோசங்களையும் கலந்துகொண்டவர்கள் எழுப்பினர். அத்துடன் நவலோக மருத்துவமனை மற்றும் விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் கூடியவர்கள் நேராக லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தை வந்தடைந்தனர். சுகததாச விளையாட்டரங்கிற்கு அருகில் கூடியவர்கள் பாபர் வீதியூடாக ஐந்து லாம்பு சந்தியை அடைந்து அதனூடாக புறக்கோட்டை போதி மரத்தடிச் சந்தியை அடைந்தனர்.

### கோசங்கள்

பேரணியில் கலந்துகொண்டவர்கள் கூட்டு அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியதுடன் அரசை எச்சரிக்கும் வகையிலான பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். 'ரணில் மைத்திரி அரசு உடன் வீட்டுக்குச் செல்ல வேண்டும். அது வரையில் நாம் வீடு செல்லப்ப போவதில்லை', 'எமது நாட்டை எம்மிடம் தந்து விடுங்கள்', 'மகிந்தவே நாட்டைக் கட்டியெழுப்பும் ஆளுமை', 'நாட்டைப் பிரிக்கும் சதிகார நல்லாட்சி உடன் கலைய வேண்டும்', 'வரிச்சுமை எமக்கு, வரையறையற்ற சுகம் உங்களுக்கு' போன்ற கோசங்களை எழுப்பிய வண்ணம் சென்றனர்.

### மகிந்த - கோத்தா களமிறக்கம்

பி.ப. 3 மணியளவில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச புறக்கோட்டை போதி மரத்திடிக்கு வந்து பேரணியில் இணைந்து கொண்டார். அவர் சற்று தூரம் பேரணியில் நடந்து சென்றார். சன நெரிசலில் அவர் சிக்குண்டதையடுத்து சிறப்பு அதிரடிப் படையினரும் மெய் பாதுகாவலர்களும் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் அவரை மீண்டும் வாகனத்தில் ஏற்றியிருந்தனர்.

திறந்த வாகனத்தின் மேல் ஏறி நின்று பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு கையசைத்தார். இதன்போது எமக்கு வேண்டும் மகிந்த ஆட்சி வேண்டும் வேண்டும் என்று பேரணியில் கலந்துகொண்ட மக்கள் பெரும் கோசம் எழுப்பினர்.

முன்னாள் ப்ாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் பேரணியில் கலந்துகொண்டு சற்று தூரம் பயணித்ததார். புறக்கோட்டை போதிராஜ விகாரைக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். அவர் அங்கிருந்தபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அணியினரும் அவருடன் இணைந்து கொண்டனர். பின்னர் இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்தை நோக்கி பயணித்தனர்.

கோத்தபாய ராஜபக்ச அங்கு வருகை தந்த போது பேரணில் கலந்து கொண்டவர்கள் மத்தியில பெரும் நெரிசல் ஏற்பட்டது. பாதுகாப்பு தரப்பினர் பெரும் பிரயத்தினத்தின் மத்தியில் அவரை விகாரைக்குள் அழைத்துச் சென்றனர். மேலும் அவர் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் விகாரையின் மூன்றாம் மாடிக்குச் சென்று ஆதரவாளர்களுக்கு கையசைத்துக் காண்பித்தார். அப்போது அங்கு திரண்டிருந்தவர்கள் பெரும் ஆரவாரங்களைத் தெரிவித்தனர்.

### சத்தியாக்கிரகம்

இதேவேளை புறக்கோட்டை போதிமரத்தடிச் சந்தியை இலக்காகக்கொண்டு வருகை தந்தவர்கள் பிற்பகல் நான்கரை மணி வரை அங்கு தங்கி நின்றனர். பின்னர் அங்கிருந்து லேக் ஹவுஸ் சுற்றுவட்டம் நோக்கி நகர்ந்தனர். தொடர்ந்து பேரணியில் கல்ந்துகொண்டவர்கள் அனைவரும் லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தை அண்மித்த பிரதேசத்துக்குச் சென்று அங்கு வீதிகளில் உட்கார்ந்து கைகளில் மெழுகுதிரி ஏந்தி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

இந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் பங்கேற்றார். சத்தியாக்கிரகம் இந்தச் செய்தி அச்சுக்குப்போகும் வரையிலும் தொடர்ந்து கொண்டிருந்தது. (உ-5,61)

## அத்துமீறுகிறது...

இறங்கியுள்ளது. இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், வடக்கு மக்களின் ஆதரவை இழக்க நேரிடும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை ஏற்றுக் கொள்வதற்காக விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் விகாரை அமைக்கும் முயற்சியில் நேற்று ( நேற்று முன்தினம்) பிக்குகள் ஈடுபட்டுள்ளனர். பிரதேச மக்கள் தடுத்துநிறுத்தினர். நிலமை மோசடிமடைந்திருந்தால் அங்கு வன்முறை கூட வெடித்திருக்கலாம். தமிழர் பகுதிகளில் இதுபோன்ற செயற்பாடுகள் அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டிடங்கள், தொல்பொருள் ஆராச்சியாளர்கள் ஆக்கிரமித்து வருகின்றனர். அவை தமக்குரிய இடங்கள், 400 மீற்றருக்கு அப்பால் நின்றே வழிபடவேண்டும் என்று கூறிவருகின்றனர்.

தொல்பொருள் திணைக்களத்தை உங்களின் (சபைமுதல்வரின்) கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வாருங்கள். அரசின் நல்லிணக்க முயற்சியை குழப்பும் வகையிலேயே அந்தத் திணைக்களத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

வடக்கு, கிழக்கில் என்னதான் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தாலும், தமிழர்களின் பாரம்பரிய இடங்கள் , அடையாளம் ஆக்கிரமிக்கப்படுமானால் நல்லிணக்கம் பயனளிக்காது. மக்கள் மத்தியில் பெரும் வேதனையையே ஏற்படுத்தும் - என்றார். (உ-5)

## 100 பேர்...

கொழும்பு, செப். 6

மகிந்த அணி ஏற்பாடு செய்திருந்த 'மக்கள் பலம் கொழும்புக்கு' பேரணியில் கலந்து கொண்ட 'குடிமக்கள்' 81 பேர் நேற்றிரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பேரணியில் பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்ட பாலைக் குடித்த 30 பேரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த அணியின் பேரணியில் பங்கேற்றவர்களுக்கு தாராளமாக மதுபானம் வழங்கப்பட்டுள்ளது. மது அருந்திய பலர் பேரணி நகர்ந்த வீதிகளில் வீழ்ந்து கிடந்தனர். இது தொடர்பான ஒளிப்படங்களும் சமூகவலைத் தளங்களில் வெளியாகின.

மது அருந்தியவாறு போராட்டத்தில் பங்கேற்ற பலர் தூசண வார்த்தைகளை கொட்டித் தீர்த்தனர். அத்துடன் நடக்க முடியாமல் தள்ளாடி தள்ளாடி நடந்து சென்றனர். வீதிகளில் படுத்து உருண்டு புரண்டும் சென்றனர். இது தொடர்பான காணொலிகளும் வெளியாகியிருந்தன.

இதேவேளை, பேரணியில் கலந்துகொண்ட 81 மொடா குடிகாரர்கள் அவரசர நோயாளர் காவு வண்டி மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, மதுபானத்தை அருந்தக் கொடுத்து கூட்டத்தைச் சேர்ப்பதால் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (உ-5)

## ஆதி...

என்று எச்சரித்துள்ளனர் நெடுங்கேணிப் பொலிஸார். எனினும் எந்தத் தடை வரினும் சிவனுக்குப் பொங்கல் விழாவைச் சிறப்புற நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகம் தெரிவிக்கின்றது.

வவுனியாவில் எல்லைக் கிராமமான ஒலுமடுவில் உள்ளது வெடுக்குநாறி மலை. அங்கு ஆதிசிவன் ஆலயத்தை அமைத்து தமிழர்கள் காலாதிகாலமாக பூசை வழிபாடுகளை நடத்தி வருகின்றனர். அண்மைக் காலமாக அந்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு கட்டுப்பாடுகளும், தடைகளும் விதிக்கப்படுகிறன. வரலாற்று இடம் என்பதால் அதற்கு இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடாது என்று தொல்பொருள் திணைக்களம் கூறுகின்றது. அதனடிப்படையில் பொலிஸாரும் வழிபாட்டில் ஈடுபடும் பக்தர்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கின்றனர். இந்தச் சம்வங்களைக் கண்டித்து வவுனியா நெடுங்கேணியில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பாரம்பரியமாக வழிபபட்ட இடங்களை அரச திணைக்கங்கள் கையகப்படுத்துவதென்பது திட்டமிட்ட மத ஒடுக்குமுறை என்றும், இது நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது. அதன் பின்னர் ஆலய நிர்வாகத்தினர் வெடுக்குநாறி ஆதிசிவனை வழிபட அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா நாளை 7ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர். ஆலயத்தில் ஒலிபெருக்கியை பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு நிர்வாகத்தினர் நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுச் சென்றனர். எனினும் பொலிஸாரோ அனுமதியை வழங்கவில்லை.

ஆதி சிவன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆலயத்திலிருந்து 400 மீற்றர் தூரத்தில் நின்று வழிபடுமாறு தொல்பொருள் திணைக்களம் கட்டுப்பாடு விதித்துள்ளது. எனவே அதற்கான அனுமதியை வழங்க முடியாது என்று தெரிவித்த பொலிஸார் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறி பூசைகள் நடைபெற்றால் சட்டம் பாயும் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

எந்தத் தடைகள் வரினும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதற்கு அமைய நாளை ஆதிசிவனில் பொங்கல் விழா சிறப்பாக இடம்பெறும் என்று ஆலயத்தின் நிர்வாகத்தினர் மற்றும் பூசகர் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸாருடனான சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது என்றும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(உ-21,110)

## ஓ.எம்.பி...

பணியகத்தின் தலைவர் அரச தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸினால் அந்த அறிக்கை அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

ஆறு மாத காலமாக இடம்பெற்ற விசாரணைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையே இவ்வாறு கையளிக்கப்பட்டது. (5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 6
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூகநிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஏ பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் கைதடி மத்தி உதயசூரியன் அணியை எதிர்த்து கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக சி அணி மோதவுள்ளது. (ம-23)

## போராடி வென்றது திக்கம் இளைஞர்

யாழ்ப்பாணம், செப். 6
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதின. இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவுசெய்ய இயலவில்லை. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாவது பாதியாட்டத்திலும் கோல்கள் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் திக்கம் இளைஞர் அணி 8:7 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக திக்கம் இளைஞர் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த நிசாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)







# மெதடிஸ்த பெண்கள் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி 22:04 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
ஆட்ட நாயகியாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த பாணுஜா தெரிவு செய்யப்பட்டார்.
மூன்றாமிடத்தை அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)



## யங்ஹென்றிஸ் அணி முன்னேற்றம் கண்டது




யாழ்ப்பாணம், செப். 6
கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து கருணாகரன் அணி மோதியது. ஆட்டத்தின் முதல் இருபது நிமிடங்கள் வரையில் கோல் எதுவும் பதிவாகவில்லை. 23ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸ் அணியின் வீரர் கலிஸ்ரன் தனது அணிக்கான முதலாவது கோலை பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாம் பாதியில் வேறெந்தக் கோலும் பதிவாகவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யங்ஹென்றிஸ் அணி.
ஆட்ட நாயகனாக இளவாலை யங்ஹென்றிஸ் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த அமல்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)

## திருக்குடும்பக் கன்னியர் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கூடைப்பந் தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட பாடசாலை அணி சம்பியனானது.
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. 51:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் திருக்குடும்பக் கன்னியர்மட பாடசாலை அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23,422)



# றொனால்டோ இல்லாத மட்ரிட் பலவீனமானது

## மெஸ்ஸி வெளிப்படைப் பேச்சு



"றொனால்டோ இல்லாத நிலையில் ரியல் மட்ரிட் அணி மிகவும் பலவீனமானது" என்று தெரிவித்தார் ரியல் மட்ரிட்டின் பரம எதிரி என்று கருதப்படும் பார்சிலோனா அணியின் தலைவர் மெஸ்ஸி.

ஊதிய ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக ரியல் மட்ரிட் கழகத்தில் இருந்து பிரிந்துசென்று இத்தாலியின் ஜுவென்டாஸ் கழகத்துக்காக ஒப்பந்தமானார் றொனால்டோ. றொனால்டோ வெளியேறியுள்ள நிலையில் அவர் இல்லாத மட்ரிட் அணி தொடர்பில் பலரும் பல்வேறு விதமான கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இவ்வாறு தெரிவித்தார் மெஸ்ஸி.

சிறந்த வீரர்களைக் கொண்ட ரியல் மட்ரிட் அணி உலகின் தலைசிறந்த அணிகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. ஆனால், றொனால்டோ இல்லாத ரியல் மட்ரிட் சற்றுத் தரம் குறைந்த அணியாக இருப்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. ஜுவென்டாஸ் அணி சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வெல்லும் அணிகளில் ஒன்றாக மாறியுள்ளது" என்று மெஸ்ஸி மேலும் தெரிவித்தார். (ம)


## பாகிஸ்தான் அணி 'ரெடி'

ஆசியக் கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. நட்சத்திர சகல துறை வீரரான ஹபீஸ்க்கு அணியில் இடம் மறுக்கப்பட்டது.

ஆசியக் கிண்ணத் தொடர் இன்னும் சில நாள்களில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், இந்தத் தொடருக்காக ஒவ்வொரு கிரிக்கெட் சபைகளும் தத்தமது அணிகளை அறிவித்து வருகின்றன. பாகிஸ்தான் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் அணி விவரம் - பகர் சமான், இமாம் உல் ஹக், ஷான் மசூத், அசாம், மலிக், சர்பிராஸ் அகமட், ஹரிஸ் சொகைல், அசிப் அலி, முகமது நவாஸ், பஹீம் அஷ்ரப், சடப் கான்;, ஆமிர், ஹசன் அலி, ஜூனைட் கான், உஸ்மான் கான், சகீன் அப்ரிடி. (ம)

# அரையிறுதிக்கு சென்றார் நடால்



பன்னாட்டு அந்தஸ்துபெற்ற பகிரங்கத் தொடரான அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதிபெற்றார் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால்.

நியூயோர்க் நகரில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான ஸ்பெயின் வீரர் நடாலை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 9ஆவது இடத்தில் உள்ளவரான டொமினிக் தியம் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மிகமிக இலகுவாகக் கைப்பற்றினார் தியம். இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்களை முறையே 6:4, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் முன்னிலை வகித்தார் நடால். நான்காவது செற் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தியமின் வசமானது. முதல் நான்கு செற்களிலும் இருவரும் தலா 2 வெற்றியைப் பெற்றிருந்தனர். ஐந்தாவது செற்றில் வெற்றிபெறுபவரே அரையிறுதிக்குத் தகுதிபெறுவார் என்ற நிலை. அந்த செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் நடால். (ம)

## செரீனா அதிரடி

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 17ஆவது இடத்தில் உள்ள வீராங்கனையான செரீனா வில்லியம்ஸை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 8ஆவது இடத்தில் உள்ளவரான பிளிஸ்கோவா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் செரீனா வில்லியம்ஸ்.

நாளை இடம்பெறும் அரையிறுதியில் செரீனாவை எதிர்த்து ஸ்வெட்சோவா மோதவுள்ளார். (ம)



## ஓய்வை அறிவித்த ருத்ர பிரதாப் சிங்

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வை அறிவித்தார் ருத்ர பிரதாப் சிங்.

இந்திய அணியின் 2010ஆம் ஆண்டு காலகட்டத்தில் முக்கிய பங்காற்றிய ஆர்.பி.சிங். அதன் பின்னர் படிப்படியாக அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டார். பின்னர் மீண்டும் கிரிக்கெட் அரங்குக்குத் திரும்பாமல் தனது ஓய்வு முடிவை அவர் நேற்று அறிவித்தார். (ம)



## மரின் சிலிச் அரையிறுதிக்குத் தகுதி

பன்னாட்டு அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கப் பகிரங்கத் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் குரேசிய வீரர் மரின் சிலிச்.

நியூயோர்க் நகரில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டமொன்றில் சிலிச்சை எதிர்த்து கோபின் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 7:6, 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் சிலிச். (ம)



# 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் அப்புத்துரை சாந்தலிங்கம்
## (சபாரட்ணம்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நவாலியை வதிவிடமாக
வும் கொண்டு வாழ்ந்து காலஞ்சென்றவரான
**அப்புத்துரை சாந்தலிங்கம்**
அவர்களின் 30 ஆம் ஆண்டு நிறைவின் ஞாபகார்த்த மடல்...

அன்பின் துணைவனாய் ஆசைமிகு அப்பாவாய்
இனிய நல் மாமனாய் ஏற்றமிகு பாட்டனாய்
அன்புமிகு பூட்டனாய் சொந்தங்கள் நாடும் சுற்றத்தவனாய்
ஞானமதில் உன் வாழ்வு நடந்தேறி முடிந்து
முப்பது ஆண்டுகள் ஆனதையா!

உங்களோடு இருந்த அந்த அழகிய இனிய
நிகழ்வுகளை நினைவாக
இன்று நெஞ்சத்தில் மீட்டுகின்றோம்
நெடிதே தொடர்கின்றோம்........

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

"தந்தை இல்லம்"
அட்டகிரி வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

அன்னை மடியில் 26.08.1927
ஆண்டவன் அடியில் 06.09.1988

(CS/19444)(11,17)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13.05.1961 | 04.09.2018 |

### பேரம்பலம் திருச்செல்வம் (அப்பு)

காரைநகர் நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும் வவுனியா கந்தசாமி கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் திருச்செல்வம் 04.09.2018 அன்று அகாலமரண மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் புகையிரத நிலைய அதிபர் பேரம்பலம் மற்றும் கனகாம்பிகை தம்பதியரின் அன்புப் புதல்வனும், சந்திரசோதி, பரமேஸ்வரி,சரஸ்வதி, புனிதவதி, திருக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீஜெகன், காலஞ்சென்ற ஸ்ரீசுதன் மற்றும்செல்வகௌரி, மாதங்கி ஆகியோரின் உடன்பிறவா அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சிவநாதன், வன்னியசிங்கம், சுப்பிரமணியம், நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், வாசுகி, தர்மகுலசிங்கம், சத்தியராணி, மகேஸ்வரன், கவிதா, கௌசல்யா, கணேசானந்தம், மதிவதனன், தனேஸ்வரி, சிவதர்மினி, கோகுலராஜ், பகீரதி, அருண், ஜனனி, மயூரி, லோகநவநீதன் ஆகியோரின் மாமனும், தினேஸ், துவாரகா, துஷானி ஆகியோரின் பெரியப்பாவும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், மதுரம் மற்றும் செல்வநாயகம், மங்கலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஞானாம்பிகை, அகிலாம்பிகை ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், நடராசா, கந்தசாமி மற்றும் குமாரசாமி, மகாதேவன் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரம்பைக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

137/8, கந்தசாமி கோயில் வீதி,
சூசைப்பிள்ளையார் குளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 979 4986**

(cs14355)(13,17)

## வேலையாள்கள் தேவை

**சென்று என்டப்பிறைசஸ்**
நிறுவனத்துக்கு
பின்வருவோர் தேவை
**பண வசூலிப்பாளர்கள்** - மோட்டார் வண்டி உள்ளவர்கள் மட்டும் (அடிப்படைச் சம்பளத்துடன் 35000/- மேல் பெறலாம்)
விற்பனை பிரதிநிதிகள்
(அடிப்படைச் சம்பளத்துடன் 35000/- மேல் பெறலாம்)

**075 344 4111/ 011 433 5463**

(CS/18375)(13,17)

## மாடிக்கட்டடம் வாடகைக்கு

யாழ்நகரின் மத்தியில் வங்கி, தனியார், அரச அலுவலகத் தேவைகளுக்கு உகந்த மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்கு விடப்படும்.

077 329 7462

## வேலையாள்கள் தேவை

**யாழ் நகரின் பிரபல கட்டட நிறுவனத்திற்கு அனுபவமுள்ள**

- **மேசன்**
- **மேசன் உதவியாளர்கள் தேவை**

(நேர் முகத்தேர்வுகள் 08.09.2018 சனிக்கிழமை 2.00 pm - 6.00 pm வரை)

New Ranganas Home Builder (pvt) Ltd

**076 852 0924, 077 654 4158, 077 635 4295**

**இல.62, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்**

## தென்னிந்திய யாத்திரை
## தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை

**ஆரம்பம் - 01.10:2018, நாள்கள் 12, யாத்திரீகர் 10**

தரிசிக்குமிடங்கள் : திருச்சி உச்சிப்பிள்ளையார், சமயபுரம், ஸ்ரீரெங்கம், பஞ்ச பூதத்தலங்கள், சிதம்பரம், திருவெண்ணாமலை, கானகஸ்திரி, திருவானை காவல், ஏகாம்பரேஸ்வரர் 9 நவக்கிரக ஆலயங்கள், திருநள்ளாறு சனிபகவான், ராகு பகவான், கேதுபகவான், சூரியபகவான், சந்திரபகவான், புதன்பகவான், செவ்வாய்பகவான், வியாழபகவான், சுக்கிரபகவான், திருப்பதி, அலமேலு மங்கா 6 படை முருகன், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருப்பரம்குன்றம், திருத்தணி, பழமுதிர் சோலை, இராமேஸ்வரம், மதுரைமீ-னாட்சி, பஞ்சவடி ஆஞ்சநேயர், மணக்குழவினாயகர் உட்பட 45 க்கு குறையாத ஆலயங்களை தரிசிப்பதுடன் பாண்டிச்சேரி பீச், மரீனாபீச், அப்துல்கலாம் மணிமண்டபம், அண்ணா, M.G.R, ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்ளையும் காணலாம். பெற்றுக்கொள்ளும் ரூபா விற்கு எமது சேவை இரு வழிவிமான ரிக்கற், மூன்று வேளை உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன்கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி, யாழ். கொழும்பு யாழ். வாகனவசதி செய்து தரப்படும். விவரங்கள் கேட்டு அறிந்து பதிவுசெய்யவும்.

**கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் /ராஜன்**
**59, 3 /6 செட்டியார் தெரு, கொழும்பு -11**
**077 7680 102, 077 736 2154**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.